


# ஆக்காட்டி xvi

| சி.புஷ்பராணி | சந்தனி ப்ரார்த்தனா | நஸீகா முஹைறதீன் | தர்மினி | கற்சுறா
| நெற்கொழுதாசன் | மீக்காயீல் | அசுரா நாதன் | யதார்த்தன் | லக்ஷ்மன் வித்யா
| எம்.ரிஷான் ஷெரீப் | அனோஜன் பாலகிருஷ்ணன் | தர்மு பிரசாத்




# ஆக்காட்டி 16 | 2019


விமர்சனம் / கந்தில்பாவை
காலங்களை இணைக்கும் நரம்பின் அதிர்வு
நெற்கொழுதாசன்

அஞ்சலி என்.கே.ரகுநாதன்
இலங்கைத் தலித் இலக்கிய முன்னோடி
தர்மு பிரசாத்

பத்தி
சூன்ய மினுப்பு
மீக்காயீல்

சிறுகதை
ஏழாவது கறுப்பு இரேகை
நஸீகா முஹைதீன்

பரியேறும் பெருமாள் :
மாற்றுச் சிந்தனையைக் கோரும் ஊற்றுத் தண்ணி
அசுரா நாதன்

நாவல் பகுதி
கோளறு பதிகம்
யதார்த்தன்

புத்தகத்தின் அத்தியாயம்
எலும்புகளை ஊடறுத்த குளிர்காலம்
சி.புஷ்பராணி

கட்டுரை
ஈழ இலக்கியமும் பிணச் சோதனை விமர்சன மரபும்(?) அனோஜன் பாலகிருஷ்ணன்

கட்டுரை / GILET JAUNE
Gilet Jaune கிளர்ச்சிக்கான கொதிநிலை
லக்ஷ்மன் வித்யா

சிறுகதை
மரணம்
சந்தனி ப்ரார்த்தனா / தமிழில் - எம்.ரிஷான் ஷெரீப்

கவிதைகள்
கற்சுறா
தர்மினி






## ஒரு கதைசொல்லியின் வருகை

போர் நினைவுகளும், அதன் வெளிப்பாடு க ளும், அணுகுமுறைகளும் தன்னிலை சார்ந்தவை. அவற்றைப் பொதுமைப் படுத்த முடியாத விலகல்களின் தொகுப்பாக மட்டுமே வாசித்து, உரையாட முடியும் என்ற முன்னுரையோடு வெளிவந்திருக்கிறது ஈழ எழுத்தாளர் யதார்த்தனின் இந்தப் புத்தகம். போர், அதிலிருந்து உயிர் தப்பித்த, அங்கஹீனமான, அகதியான அத்தனை மனிதர்களின் மனதிலும் அவநம்பிக்கையை மட்டுமே விட்டுவைத்துள்ளது. போர்க் காட்சிகளை நேரடியாக விவரிக்காமல் அவை எழுப்பும் உணர்வுகளை ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத கதைகளின் தொகுப்பால் உணர்த்த முயற்சித்திருக்கிறார் யதார்த்தன்.

உதாரணத்துக்கு, போருக்குப் பிறகு அனைத்திலும் நம்பிக்கை இழந்த மனிதர்கள் நம்பிக்கையின் கடைசிப் புகலிடமாக சாத்திரிகளையும், மிளகாய்ச் செடிகளையும் நாடிச் செல்கின்றனர். இன்னும் சிலர், போரிலிருந்து முற்றிலு மாய் விட்டுவிலகி, பள்ளியின் விடலைப் பருவ ஆண் மனதைப் பேசுகின்றனர் மக்ரலினும் அவளின் அறுபதாயிரம் புறாக்களும். கடல் பார்த்திருக்க நிலம் உரித்து உத்தரித்து மாண்ட மக்களின் மேல்கொண்ட அன்பினால் துயருற்ற மெடூசா தன் கண்களை மீண்டும் திறந்து அகிலத்தையே கல்லாக்குகின்றாள்.

இப்படி மாந்திரீக யதார்த்தவாதமும் இப் புனைவில் உண்டு. ஆசிரியரை விலக்கி வாசகருடன் நேரடியாக உரையாடும் இக்கதைகள், தங்கள் வடிவங்களைத் தாங்களே தீர்மானித்து, வாசிப்பவரின் உணர்வுகளினூடே வாசிப்பின் அனுபவங்களைக் கடத்துகின்றன. பிரதி முழுவதிலும் சிதறிக் கிடக்கும் விவிலிய, கிரேக்கத் தொன்மங்கள் இடைவிடாது புதிய கதை சொல்லும் முறைகளை உருவாக்கி, கதைகளைப் புதிய வெளிகளில் பிறப்பிக்கின்றன. தமிழின் இன்னும் ஒரு புது கதைசொல்லி அற்புத மான தன் கதைகளுடன் வாசகர்களை வந்தடைந்திருக்கின்றார்.

- இளவேனில்

மெடூசாவின் கண்களின் முன் நிறுத்தப்பட்ட காலம், l யதார்த்தன் l தொடர்புக்கு: aakkaddi@gmail.com



ஓவியம் றஷ்மி

1929 - யூன் 11, 2018

# என்.கே.ரகுநாதன்
## இலங்கைத் தலித் இலக்கிய முன்னோடி.

//எழுத்தாளன் சமூகத்தின்
காலக்கண்ணாடி மாத்திரமல்லன்.
வைத்தியனுமாவான்;
நல்லாசிரியனுமாவான்;
போர்த்தளபதியுமாவான் என்றெல்லாம்
சொல்லலாம். ஆனால் அவன் சமூகத்தின்
மனச்சாட்சியாக திறந்த உள்ளத்தோடு
பேனாவை ஓட்டவில்லையென்றால்
அந்த இலக்கியத்தால் ஒரு பயனும்
ஏற்படப்போவதில்லை. பக்கம் 82,
மல்லிகை டிசம்பர் 1983 //

என்.கே.ரகுநாதன் எழுத்தாளரின் சமூகப் பிரக்ஞை குறித்து எழுதிய வரிகளிவை. எழுத்தாளன் யார் எனத் தான் நம்பியதன் சாட்சியாகவே தன்னுடைய படைப்புகளை சாதிய சமூகத்தின் மனச்சாட்சியாக திறந்த மனதுடன் நம் முன் வைத்திருக்கிறார். சாதிய வன்முறை படிந்த காலக் கண்ணாடியூடு என்.கே.ரகுநாதன் காட்டும் யாழின் இயல்பான வாழ்க்கை என நம்பப்படுவதன் கொடூரம் அதிர்ச்சியளிக்கிறது. ஒரு தலித் தன்னிலையின் வெள்ளாள சாதிய வன்முறை மீதான விமர்சனமாக, கோபமாக, வேதனையாக அவருடைய படைப்புகளில் வெளிப்படுகிறது. முடிவில் சமத்துவ சமுதாயம் நோக்கிய எதிர்பார்ப்பாக, கனவாக, இலட்சியவாதமாக முடிகிறது. அது அவர் நம்பிய, தீவிரமாகச் செயற்பட்ட மார்க்ஸ்சிய இலட்சியவாத சமூகம் நோக்கியதாகவும் இருக்கிறது. அவை சாதியால் அபரிதமான அதிகாரத்தை அனுபவிக்கும் வெள்ளாளர்களுக்கு குற்றவுணர்வு தருபவையாகவும் இருக்கின்றன.

ரகுநாதன் 'நிலவிலே பேசுவோம்' கதைக்காகவே நம்மிடையே அதிகம் நினைவு கூரப்படுகிறார். அதுவே அவரின் அடையாளம் என்றாகிவிட்டது. கந்தன் கருணை நாடகமோ சிறுகதைகள் குறித்தோ உரையாடல்கள் அதிகம் இல்லை. அவருடைய படைப்புகளை நிலவிலே பேசுவோம் கதையாக மட்டும் சுருக்கிவிட முடியாது. அது தலித் இலக்கியத்தின் விரிந்த பங்களிப்புகளைச் சுருக்கிக் கொள்வதில் முடியும்.இந்தியத் தமிழர்களின் குடியுரிமை பறிப்பு, இன முரண்பாடு, சாதிய ஒடுக்குமுறையின் கொடூரங்களும் அவருடைய



**தினக்குரல் -** *நிலவில் பேசுவோம் என்ற சிறுகதை அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மிகவும் மோசமாகப் புரையோடிப் போயிருந்த சாதிப்பிரச்சனையைச் சொல்வதால் அது உங்களுடைய சொந்தக் கதையாக இருக்கலாம் என பல ஊகங்கள் இருந்திருந்திருக்கும். அப்படி ஏதாவது சர்ச்சை நிகழ்ந்ததா?*

**என்.கே.ரகுநாதன் -** இல்லை, அப்படி எதுவும் நடக்கவில்லை. ஆனால் அது பற்றிய ஒரு குறிப்புச் சொல்ல விரும்புகிறேன். நிலவில் பேசுவோம் என்ற சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகளில் எந்த விதமான நல்ல கருவும் இல்லை என்று சாகித்தியமண்டல பரிசுக்காக அனுப்பப்பட்ட போது அது நிராகரிக்கப் பட்டது. அதாவது சாதிப் பிரச்சனை ஒரு நல்ல கருவாக அவர்களுக்குத் தெரியவில்லை.

முதற்சிறுகதைத் தொகுப்பிலே இருக்கின்றன. 'நிலவிலே பேசுவோம்' கெட்டித்துப்போன சாதி மனநிலையின் உருவகம். யாழ்ச் சாதியத்தின் பாவனைகளை, அதிகார விருப்புறுதியை, போலி முற்போக்கைக் கேள்விக்குட்படுத்துகிறது. வெளியாகி 69 ஆண்டுகளின் பின்னரும் கதையைச் சமகாலக் கதையாக வாசிக்க முடிகிறது. போலிச் சாதியழிப்பு மனநிலை / ஆதிக்க சாதியினரின் சாதி எதிர்ப்பு உரையாடல்கள் அதே உயிர்த்துடிப்புடன் போலித்தனத்துடன் இன்னமும் இருக்கின்றன என்பதே கதையின் கசப்பான உண்மை.

'நிலவிலே பேசுவோம்' கதை போலவே அவருடையை முதல் தொகுப்பில் இருக்கும் வேறு கதைகளும் சமகால வெளிச்சத்தில் வாசிக்கும் சாத்தியங்களுடன் இருக்கின்றன. 'கதவுகள்' கதை வெள்ளாள அதிகார உருமாற்றத்தை நுட்பமாக அர்த்தப்படுத்துகிறது. கதையில் செல்லத்துரை ஒரு தலித். அவர் நல்லூர் முருகன் கோயிலின் கதவுகள் நீண்ட நொடிய போராட்டத்தின் பின்னர் தலித்துகளுக்கும் திறந்து விட்டிருப்பதை பத்திரிகையில் வாசித்துத் தெரிந்து கொள்கிறார். அவருடைய நீண்ட நாள் விருப்பம் நிறைவேறியதை நினைத்து உள்ளூர மகிழ்கிறார். நல்லூரைத் தொடர்ந்து ஊர்ப் பிள்ளையார் கோயில் கதவும் தலித்துகளுக்காகத் திறந்துவிடப்படும் எனக் காத்திருக்கிறார். அது ஒரு போதும் திறந்து விடப்படவில்லை. காத்திருந்து சலிப்புற்ற செல்லத்துரை தன் குழந்தையுடன் நல்லூரிற்கு முருகனை வழிபடச் செல்கிறார். கோயிலின் உட்பிரகாரத்திலிருந்து முருகனை வழிபடும் போது குழந்தை பசிக்கிறது அப்பம் வேண்டுமென அழுகிறது. செல்லத்துரை கோயிலின் வெளி வீதியிலிருக்கும் கடையில் இட்லிக்குச் சொல்லிவிட்டுக் காத்திருக்கிறார். அழகிய உடை தரித்த கடைச் சிப்பந்தி இட்லி கொண்டுவந்து கொடுக்கிறார்.

இனி வருவது 'கதவு' கதையின் முடிவுப்பகுதி.

//குழந்தைக்கு இட்லியை பிசைந்து ஊட்டிய வண்ணம், சிந்தையை முருகன் சுழல்களில் சுழல விட்டுக்கொண்டிருந்த செல்லத்துரை 'யாரது செல்லனோ' என்ற குரல் கேட்டுத் திரும்பினான். அப்படியே திடுக்கிட்டுப் போனான். எதிரே நின்றது ஊர்க்காரர், உயர் ஜாதிக்காரர் அவரது முகத்தில் அவமான உணர்ச்சி பீறிட்டது கண்கள் சிவப்பாக மாறின.

'எப்போதிருந்து இது' அவர் மறுபடியும் கேட்பதற்கிடையில் அவனைச் சுற்றி கும்பல் திரண்டு விட்டது. வாயில் இட்லியை வைத்துக் குதப்பிக் கொண்டிருந்த குழந்தை கும்பலைக் கண்டு பயத்தால் அழுதது. அதனால் குதப்பிய இட்லி விக்கி மூச்சடைத்துக் கண்ணீர் வழிந்தது.

காசுப்பெட்டியில் இருந்த முதலாளி நிதானமாக எழுந்து வந்தார். கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தார்.
'பட்' என்று ஒரு சத்தம் 'போடா வெளியே ராஸ்கல்'
செல்லத்துரை கன்னத்தைக் கைகளால் அழுத்திக் கொண்டு 'முருகா' என்றான். குழந்தை பயங்கரமாக வீறிட்டு அழுதது. 'அந்தத் திமிர்தான் அவர்களுக்கு இது கோயிலல்ல கடை' என்று கூட்டத்திலிருந்த யாரோ சத்தமிட்டார்கள். //

இன்றும் இக்கதை அர்த்தம் மிகுந்த வாசிப்பைக் கோருகிறது. கோயில்களைத் திறந்து விட்டிருப்பதன் போலித்தனத்தை, அபத்தத்தை நுட்பமாகச் சித்திரிக்கிறது. வெள்ளாளர்கள் கோயில்களைத் திறந்து விட்டுக் கருவறையை மூடிக் கொண்டார்கள். கருவறையின் உன்னதத்தை, மேன்மையைப் பாதுகாக்க, சாதிய அதிகாரத்தை, சாதியச் சலுகைகளை அனுபவிக்க தலித்துகளிடமிருந்து விலகித் தம்மை உட்பக்கமாக தாளிட்டுக் கொண்டார்கள். வெளியிலிருந்து பார்க்கும் போது

விசாலமான பாதையுடனிருக்கும் எல்லோருக்கும் திறந்துவிட்ட கோயில் வெளிக்கதவுகள் தான் நமக்குத் தெரிகின்றன. அவையே இன்றும் யாழ் சாதிய அழிப்பின் உச்சமாகவும் முன்னிறுத்தப்படுகிறது. ஆனால் திறந்து விடப்பட்ட - நீண்ட போராட்டத்தின் பின்னர்தான் - கோயிலின் உள்ளே கருவறை போல, செல்லதுரையை 'வெளியே போடா ராஸ்கல்' என விரட்டியகடையில்நிறுவப்பட்டிருக்கும்அதிகாரம்போல தூய்மையான, தீட்டுப்படாத இடத்தை வெள்ளாளர்கள் தமக்காக உருவாக்கி, சாதியை சொந்தமான வீட்டு நாயாக வளர்க்கிறார்கள். அது அகமணமுறையாக, விரும்பிய இடங்களில் காணி வாங்க முடியாததாக, பொது அதிபர் ஆசிரியர், வைத்தியர் நியமனங்கள் அற்றதாக தகவமைந்து தன் தூய்மையைப் பாதுகாத்துக் கொள்கிறது. இப்படித்தானே சாதியம் நுட்பமாகத் தொழிற்படுகிறது. யாழில். சாதியத்தின் வெளிப்படையான பௌதீக இருப்பு பெரும்பாலும் தகர்ந்து விட்டது. அது மனநிலையாகக் கதவு கதையில் வரும் வெள்ளாளரின் அதிகாரமிக்க கடை போன்றே தன் கதவுகளைத் தங்களுக்கானதாக இறுக மூடிக் கொண்டிருக்கிறது. கோயின் வெளிப்பிரகாரத்தின் கதவை நீண்ட நெடிய சாதி எதிர்ப்புப் போராட்டங்கள் மூலமே திறக்க முடிந்தது. ஆனால் இன்று? அதன் உள்ளொடுங்கிய சாதியத்தை சாதியழிப்பின் மூலமே சாத்தியமாக்கிக் கொள்ள முடியும்.

எங்களூர் அம்மன் கோயிலின் பங்குனித் திங்களின் மூன்றாம் திங்கள் கஞ்சி வார்வை தலித்துக்களுக்கானது. பஞ்சாராத்தி காட்டித் திருநீறு கொடுக்கும் வரை பக்தி மயக்கத்தில் இருக்கும் சாதி இந்துக்கள், தலித்துகளின் கஞ்சிவார்வை தொடங்கும் நொடி மாயமாய் மறைந்து விடுவதன் சூட்சுமம் என்ன? கோயில் மடப்பள்ளியில் மிளகாய் வெட்டி, அரிசி கழுவி கிடாரங்களில் சமைக்கப்படும் கஞ்சி தலித்துகளின் கைகளால் சமைக்கப்பட்டது என்பதைத் தவிர சாதி இந்துக்கள் கஞ்சியைத் தவிர்ப்பதன் நோக்கம் என்னவாக இருக்கக் கூடும்? மிஞ்சும் கஞ்சியைத் தலித்துகள் கிடாரங்கிடாரமாகத் தென்னை மரங்களின் கீழ் கிடங்கு வெட்டிக் கொட்டுவதால் தென்னைகள் செழித்து வளர்கின்றனவே தவிர சாதிய மனநிலையில் சிறு மாற்றமுமில்லை தலித்துகளுடன் சிறு ஒட்டோ உறவோ இல்லை. கோயில்கள் திறந்துவிடப்பட்டு இத்தனை ஆண்டுகளின் பின்னரும் சாதிய வாழ்க்கை முறை இப்படியாகத்தான் இருக்கிறது. இதனாலேதான் கதவுகள் கதையைச் சமகாலக்கதையாக வாசிக்கமுடிகிறது.

என்.கே.ரகுநாதனின் 'காரியதரிசி' கதையைப் புதுமைபித்தனின் 'பொன்னகரம்' கதையுடன் சேர்த்து வாசிக்கலாம். இரண்டும் பேசும் மீறல் ஒன்றே தான்.பார்வைக் கோணங்கள் வேறு வேறானவை. புதுமைப்பித்தனிடம் அது மரபின் மீதான பகடியாகவும், என்.கே.ரகுநாதனிடம் அது வேதனையின் குரலாகவும் இருக்கிறது. பொன்னகரத்தில் புதுமைப்பித்தன் சேரியை விபரிக்கும் போதிருக்கும் பகடி மொழி - அதன் அழுக்கை, குழந்தைகள் இயல்பை, சேரி வாழ்வை விபரிக்கும் போதிருக்கும் மரபுமீதான விமர்சனம் ரகுநாதனின் காரியதரிசி கதையில் வெளிப்படுவதில்லை அவரிடம் உள்ளடங்கிய குரலாக இருக்கிறது. புதுமைப்பித்தனின் மரபு மீதான விமர்சனங்களோ, துடுக்கான ஆசிரியரின் குரலோங்கிய 'எகத்தாள' மொழியோ ரகுநாதனின் கதையில் இல்லை. கற்பு குறித்த மரபான பர்வையோ, கவிழ்க்கும் மூர்க்கமோ ரகுநாதனிடம் இல்லை. அவை புதுமைப்பித்தனின் களம்.

என்.கே.ரகுநாதனிடம் மாத முடிவில் கூப்பனுக்கு மா மறுக்கப்பட்ட ஏழைப் பெண்ணின் மீதான வேதனையே இருக்கிறது. இந்த வேறுபாடுதான் தலித் இலக்கியத்தின் 'கச்சா' அது சமூக ஒழுக்க மீறலை பிறழ்வாக, விமர்சனமாக கொள்ளாத நினைவிலி. சித்தலிங்கையா தலித் என்ற சொல் குறித்துச் சொல்வதும் அதைத்தான். 'தலித் என்பது வேதனையின் குறியீடாக இருக்க வேண்டுமே தவிர சுரண்டலின் குறியீடாக மாறிவிடக்கூடாது மற்றும் கொடுமை, அக்கிரமங்களை எதிர்க்கிற குரலாக மலர வேண்டும் அவமானம், எதிர்ப்பு, பாதுகாப்பின்மை ஆகிய அர்த்தங்களை தலித் என்ற சொல் தர வேண்டும். ரகுநாதன் கதைகளில் வெளிப்படுவது அந்த வேதனையின், பாதுகாப்பின்மையின், அக்கிரமங்களை எதிர்க்கும் குரல் தான்' அதே வேதனையின் குரல்தான் கே.டானியலின், நந்தினி சேவியரின், தெணியானின், எஸ்.பொவின், டொமினிக் ஜீவாவின் படைப்புகளில் வெளிப்பட்டது. இந்த வரிசையிலேயே ஆக்காட்டி இலங்கைத் தலித் இலக்கிய முன்னோடிக்கு தன் அஞ்சலியை செலுத்துகிறது.

◇


## ஆக்காட்டி

aakkaddi@gmail.com
இதழ் - 16 | மார்ச் | 2019

தொகுப்பு :
தர்மு பிரசாத் / தர்மினி / நெற்கொழுதாசன்

வடிவமைப்பு : லியோ dpworksfr@gmail.com

மக்ஸ்டரில் வாசிக்க :
Mail.: aakkaddi@gmail.com
www.facebook.com/aakkaddi




# காலங்களை இணைக்கும் நரம்பின் அதிர்வு



• நெற்கொழுதாசன்

“தோம்பு என்றொரு சொல்லை நீண்ட காலத்தின் பின் வாசித்தபோது சுமார் பத்து ஆண்டுகள் ஒரு மைதான வழக்குக்காக அலைந்த அந்த நாள்கள் நினைவுக்கு வந்தன. அடி உறுதி, கள்ள உறுதி... என்றும், பருத்தி புடவையாக காய்ச்சுகிடக்கு» «அலவாங்கு விழுங்கி» «எள்ளு காயுதெண்டு எலிப்புளுக்கையும் ஏன் காயுது» என்றும் எங்கள் மீது தள்ளிச்சென்ற நையாண்டிச் சொல்லாடல்களை நினைவுக்குக் கொண்டுவந்திருந்தது அந்த ஒற்றைச்சொல். கூடவே இயத்துகள், பூவல் நிலம், *“பழிப்பு படலைக்குள்ள சிரிப்பு சீலைக்குள்ள‘* என சில சொற்கள் அம்மம்மாவின் தோல் ஒடுங்கிய கன்னங்களையும், சுருட்டு கருக்கிய உதடுகள் அசைந்து விழுந்த ஒலிகளையும், முரசுகளால் எழுந்த சிரிப்பையும் நினைவில் கிளப்பியது.

கிளர்ந்த அந்த நினைவுகளின் அருட்டலுடன் தான் கந்தில் பாவையை வாசித்து முடித்திருந்தேன்.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து கனடா, நோர்வே என தம் கிளைகளைப் பரப்பி நிற்கும் ஒரு குடும்ப உறவுகளின் கதையை, நம் காலத்தில் ஆரம்பித்து பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிகளை நோக்கி கொண்டு செல்லும் நாவல், தாயின் மன இயல்பின்மைக்கான காரணத்தை தேடி செல்லும் மகள் அறிந்துகொள்ளும் தகவல்களாக ஒரு கட்டமும், அவள் அறியாதவற்றை இன்னொரு கட்டமாகவும் கொண்டு தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

யாழ்ப்பாணிய நிலவுடைமை சமூக இயக்கம், சைவ / கிறிஸ்தவ மிஷன்களின் செயற்பாடுகள், எண்பதுகளின் பின்னான யுத்தம் இடப்பெயர்வு, புலம்பெயர்வாழ்வு என காலத்தை நான்காக பிரித்து எடுத்துக்கொள்வது வாசிப்பதற்கான மனநிலையை தயார்ப்படுத்திவிடுகிறது. நாவல் கொண்டிருக்கும் மொழிப்பிரயோகம் ஈழத்தின் அநேக நாவல்களின் இயல்பிலிருந்து வேறுபட்டு நிற்கிறது. தேவகாந்தனின் அநேக படைப்புகளில் இந்த மொழிப்பாடலை உணரமுடியும். ஈழத்து பிரதியாக்கங்களைப் பொருத்தவரை இவரது மொழி தனித்து நிற்கிறது. ஆனால் தனித்துவமான மொழியமைவு என்று சொல்லிவிட இயலாது. ஒரு மேட்டிமை தன்மையை கொண்டொழுகும் வசன அமைப்புகள் ஒருவித இடைவெளியை உருவாக்கிவிடுகிறது. நாவலின் உரையாடல் களம் அந்த அந்த காலகட்டங்களுக்கு ஏற்ற வகையில் தன்னை மாற்றிக்கொள்வதும், பழமொழிகள், சிலேடைகள், பேச்சுவழக்கு முறைகள், அந்தக்கால சொல்லாடல்கள் என வரித்துக்கொள்வதும் தன்னியல்பிலேயே நிகழ்கிறது. புனைவுக்கான சாத்தியங்களை நிராகரித்து கதை கொண்டு செல்லப்படுகிறது. அநேக கதைகளும் சம்பவங்களும் நாமும் எங்கள் அம்மாவிடமோ அம்மம்மாவிடமோ கேட்டு சிலிர்ந்த கதைகளாக மீந்து நிற்கின்றன. கதை கேட்டு உறங்கிய இரவுகளில் பயந்து அலறிய கனவுகளை உருவகிக்கின்றன

மன இயல்புகள், அவைகள் உருவாக்கும் தாக்கங்கள், அவற்றின் நீட்சி, என நாவலெங்கும் உள்மனதின் பண்புகளை, சிக்கல்களை முன்வைக்கிறது. அது குடும்பத்தொடர்ச்சியாக நீள்வதும், பிறிதொரு சூழலில், பிறிதொரு வாழ்வியலுள் தங்களை அமிழ்த்திவிட்ட போதிலும் ஒரு சிறிய சிதைவில் மீண்டும் உருக்கொள்வதும், நீட்சி கொள்வதும், காட்சிகள், வெளிப்படுத்தல் முறைகள் கூட தொடர்ச்சியான ஒன்றாக அமைவதுமாகத் தொடரும் பண்பினை எங்கும் வெளிப்படுத்துகிறது. மனதின் ஊடுபாயும் தன்மையையும், சிதைவுகளின் போது நிகழும் பண்பு மாற்றங்களையும், நம்மில் கூட எதிர்பாராமல் நிகழும் சில சந்தர்ப்பங்களில் பொருத்திப்பார்க்க வைத்துவிடுகிறது.

கிறிஸ்தவ - சைவ மோதலாக உருக்கொள்ளும் நாவலின் பிற்பகுதி அதன் காலம் சார்ந்து ஆணாதிக்க நிலவுடைச்சமூகத்தின் இயல்புகளை வெளிப்படுத்தியும், சாதிய சமூகமாக தன்னை கட்டமைத்திருந்ததையும்

தொட்டு பேசுகிறது. சைவ மேலாதிக்க சமூகம் ஆறுமுக நாவலரை கொண்டாடும் தன்மையை கோடிட்டு செல்வதும், கச்சப்பு தன்னை மதம் மாற்றிக்கொள்வதனூடாக மேல்நிலையாக்கம் பெறுவதை பொறுக்கமுடியாத ஆண்டான் மனப் போக்குகளையும் பதிவு செய்கிறது. இதில், கச்சப்பு ஒற்றைப் பாத்திரம்தான். நாவலின் காலத்துக்குள் எத்தனையோ ஆயிரம் கச்சப்புகள் கடந்து போகமுடியாதவரை மறைக்கப்பட்டிருக்கிறார்கள்.

நான்கு பிரதான பிரிவுகளிலும் பெண்கள் முக்கியமான பாத்திரமாக உருவாக்கப்பட்டு இருக்கிறார்கள். நாவலின் உள்ளார்ந்த மௌன கதையாடல் முழுவதும் பெண்களால் தான் செய்கிறது. எடுத்துக்காட்டாக, தம் சாதியினரை மதத்திற்காக கொலைசெய்பவர்கள் கிறிஸ்தவனாக மாறிய தாழ்த்தப்பட்ட சாதியை சேர்ந்த கச்சப்புவை கட்டிவைத்து துன்புறுத்துவதும், பின் வழக்கின் மூலம் நட்ட ஈடு கொடுத்து விலகிப் போவதையும் குறிப்பிடலாம். மேலாதிக்க சாதியமனதின் பலத்தினை, அதிகாரத்தினை சில சட்டங்களை வைத்து அடக்கிவிடுவதாக வரையறை செய்தாலும் அது அவற்றை எப்படி எதிர்கொள்ளும் என்ற கேள்வி தவிர்க்கமுடியாததாகிவிடுகிறது.

ஆண் பெண் உறவுச்சிக்கல்களின் அடிப்படையே பாலியல் முரண்பாடுகள் தான். அதனைப் பேசும் நாவல், ஆண் மனங்கள் குறித்து, அதன்



நகர்த்தப்படுகிறது. அதுதான் இந்த நாவலின் மிக முக்கியமான கூறு. சமூகம் ஆணாதிக்கசமூகமாக புறவயமாக இயங்குகின்றதெனிலும் பெண்கள் அதற்கான எதிர்ப்பை மறுப்பை நிராகரிப்பை முன் வைக்கிறார்கள். மீறிய தருணத்தில் முடிவுகளை எடுத்து செயற்படுத்துபவர்களாகவும் மாறி விடுகிறார்கள்.

வெற்றிலை, இராசவள்ளி, பீர்க்கம் கொடி என பல செடிகள் படரும் ஒரு வேலி வருகிறது. அதில் படரும் கொடிமரங்களை அந்தந்த கொடிகளோடு இணைத்து வளர்ப்பவளாக இருக்கிறாள் பொன்னரியம். அவள் சைவ விரதமொன்றை கடைப்பிடித்திருக்கும் பின்னொருநாளில் கிறிஸ்தவனாக தன்னை வரித்துக்கொண்ட கணவன் சண்முகம் அதே வேலியோரத்தில் வைத்து கட்டாயப்படுத்தி உறவு கொள்கிறான். "வேலி உடைந்து விழுகிறது". அவனது நோக்கம் மனைவி கடைப்பிடிக்கும் விரதத்தின் கட்டுப்பாடுகளை குலைப்பதாக இருக்கிறது. அந்தக்கணத்தில் உருவாகும் மன உடைவு, நாவலில் வரும் பெண்பாத்திரங்கள் உறவு கொள்கையில் ஏதோ ஒருஒவ்வாமையில்சட்டெனபற்றிக்கொள்கிறது அதுவே நீண்டு செல்கிறது. இதோடு ஆணாதிக்கமும், ஆண்டான் மனோபாவமும் குடும்பத்திலும், சமூகத்திலும் நிகழ்த்தும் அக புற வினையாற்றல்களையும் அடையாளப்படுத்திவிடலாம்.

தன்னை ஒரு கிறிஸ்தவனாக மாற்றிக் கொண்டமைக்காக தன் சாதியினாரலேயே கொல்லப்படும் சண்முகம், அவன் கொலையை இயல்பாக கடந்துசெல்லும் பொன்னரியம் என ஆரம்பிக்கும் குடும்பம் இறுதியில்(2004) ஒரு கிறிஸ்தவ சைவ காதலர்களில் அதனை இயல்பாக அணுகும் முறையையும் வெளிப்படுத்துகிறது.

ஆதிக்கசாதியினரால் தம் சாதியிலேயே மதம் மாறியமைக்காக நிகழ்த்தப்படும் கொலை அந்தக் காலப்பகுதில் நிகழ்ந்த மதம் சார்ந்த கொலைகளுக்கும், வன் கொடுமைகளுக்கும் அடையாளமாக இருந்தாலும், அந்தக் காலப்பகுதியில் நிகழ்ந்த சாதியக் கொடுமைகளை மேம்போக்காகவே பதிவு

உளைவுகள் அழுத்தங்கள் குறித்து உள்ளார்ந்து வெளிக்கொணரவில்லை. நிலவுடமை சமூகமாக இருந்த காலத்தில் தென்னிந்தியா வரை சென்று "உறவு" வைத்துக்கொள்வதும், அந்த உறவு அறுபடும் போதில் "பேயோட்டி விட்ட நின்மதி அவரில் இறங்கி இருந்தது என்று பதிவு செய்வதிலும், முற்பகுதியில் காமம் விற்பனையாகும் வீடுகளில் சென்று இறக்கிவைத்து விட முடியாது என்று கோட்டிட்டு செல்வதிலும் ஆண் மனம் தன்னை தற்காத்து கொள்கிறது.

யாழ்ப்பாண சைவர்களால் அறுபது புத்தபிக்குகளை எரிக்கப்பட்டதாகவும், அவர்களின் எச்சங்களைக் கொண்டே, அவர்களின் நினைவாக கந்தரோடை பௌத்த சின்னங்கள் உருவாக்கப்பட்டதாகவும் நாவல் பதிவு செய்கிறது. யாழ்ப்பாணத்தில் பௌத்தர்கள் எரிக்கப்பட்டார்களா? இது குறித்து வரலாற்றுப் பதிவுகள், ஆய்வுகள் ஏதாவது இருக்கிறதா ? மூத்தவர்களின் வாய்வழி தகவல்களாக தனக்கு கிடைத்தவற்றை பதிவு செய்வதாக முன்னுரையில் குறிப்பிட்டிருந்தாலும்,புனைவு என்று ஒதுக்கிவிடுவதாக இருந்தாலும், இது குறித்து விரிவான உரையாடல் ஒன்று அவசியமானது.

கந்தில் பாவை ஒரு கதைசொல்லி.சிலப்பதிகாரத்தில் மணிமேகலைக்கு முற்பிறப்பு பற்றியும், வாழ்வின் எஞ்சிய காலம் பற்றியும் கூறுவதாக அமைக்கப்பட்டிருக்கும் அதன் பாத்திரம். நாவலின் கட்டமைப்பும் , முதுமக்கள் கதைசொல்லி நகர்த்தலும் அதனை வெளிப்படுத்துகிறது. எமக்கு கதை என்பதே வீட்டில் வாழும் முதியவர்களிடமிருந்துதான் அறிமுகமாகிறது. இந்த பிரதியும் அதையே ஒரு உள்ளீடாக கொள்கிறது.

யாழ்ப்பாணத்தின் நிலவுடமை சமூக இயல்பின் ஒரு பகுதியினை அறிந்துகொள்ள கந்தில் பாவையை வாசிக்கலாம்.



# # சூன்ய மினுப்பு

(01)

கதைக்கற்றைகளாக எழுதப்படாத வரலாற்றினை எழுதி, மறைத்து வைக்கப்படுகின்ற சம்பவங்களை எழுதி அல்லது தொன்மங்களை, பண்பாட்டை, துரோகத்தை, இனஅழிப்பை, பகைமையை என்று எல்லாவற்றையும் எழுதி அச்சிட்டு கனதியான புத்தகங்களாக அடுக்கிவைக்கப்பட்ட அலமாரியில் நகுலனின் நாய்களும் வந்து சேர்ந்தது. " கலை என்ற அதீதத்தின் நிஜப்பரிமாணம் பழஞ்சுவடிகளின் கீறலில் சுரந்த முலைகளில் ஒவ்வொரு சொட்டுக் கண்ணிமை பால் கோடுகளாய் பனுவலின் அசைந்து கூத்து நாடகம் போன்றவற்றில் நிகழ்த்தப்படும் போது தான் நாம் உணர்த்தே இருக்கமுடியாத விதங்களில் பிரமாண்டமாக வெளிப்படுகிறது" என்று பாழி நிறைய பொறிகளாகவும் சாவிகளாகவும் வரலாற்றுக் கிண்ணத்தின் கரு மைத்துளிகளை விதைத்தார் கோணங்கி. மூன்றாம் மாடியின் ஒரளவுக்கு வசதியான அறையொன்றிலிருந்து இதை எழுதிக்கொண்டிருக்கும் என்னிடம் எனக்கென்ற எந்த தொன்மமும் பண்பாடும் வரலாறும் இல்லாத வெறுமை தான் கிடைக்கப்பெற்றிருக்கிறது. மைதானமளவு வெறுப்பும் வயல் வெளியளவு அன்பும் என்னிடம் எஞ்சியிருக்கின்றன. வாசித்த எல்லாப் பனுவல்களும் இசையாகவும் ஒவியங்களாகவும் கொத்துக் கொத்தாக விரிகின்றன. சிலது வெறுங்காகிதங்களாகவும் இன்னும் சில அட்டை திறக்கப்படாமலும் கிடக்கின்றன. ஆனால் மிகச்சிலதிலிருந்தே இருகை விரிப்பளவு மூளையின் மடிப்புகள் பிரமாண்டமான கடற்கரையாக விரிகின்றன. அவை பிரமாண்டத்திற்கு எழுதப்பட்டவை அல்ல. நகுலன் தனித்த மனதின் குறியீடு. தனித்த மனத்தின் பிரமாண்டத்திற்கு இணையாக வேறொன்றுமில்லை. காற்றைப்போல வெகுளித்தனமாக எல்லா இடங்களையும் நிரப்பிச்செல்லும் மௌனம் அதனுடையது. விரிந்து விரிந்து ஏதுமற்றதாகிவிடாது. உலகத்தின் எல்லாக் கூறுகளையும் தின்று பருத்து விரிந்துகொண்டே போகும். நகுலனின் நாய்கள் அத்தகைய ஒரு விரிவு. தனித்த மனமொன்றின் விரிவு. கோணங்கி சொன்ன அதே பிரமாண்டம் எனக்குள் நிறைகிறது. நாய்கள் எனக்கு பிடிக்காது. இங்கிருக்கும் நாய்கள் எல்லாம் வாய் நிறைய சீழ்வடியத் திரிகின்றன.

மீக்காயீல்



(02)

அழுக்கு நிறைந்த உலகம் முழுதும் முற்றுப்பெற்ற கதைகள் மண்ணுக்குள்ளும் முற்றுபெறாமல் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கின்ற கதைகள்யாவும் நிலத்தின் மேலும் தேவதைக்கதைகள் எல்லாம் வானத்திலும் மிதந்துகொண்டிருக்க, சட்டைப்பைக்குள் ஒரு கதையும் வாய் நிரம்ப புலம்பல்களுடனும் திரியும் எனக்கு இன்னொரு புலம்பலைக் கேட்கும் போது சந்தோஷமாயிருக்கிறது. புரியாத மொழிகளில் கதைகள் நிரம்பிப்போய்க்கிடக்கின்றன. பழுத்த மஞ்சட் சாக்கடை நீர் வடிகின்ற நகரத்தின் நாற்றத்திற்குள் ஊறிப்போய்க்கிடக்கின்ற ஆயிரம் ஆயிரம் துயரக்கதைகளோடு என் கதையும் ஒட்டிக்கொள்கிறது. வெளிச்சம் முழுக்க மீன் விற்றுவிட்டு இருட்டில் தன்னை விற்க காத்திருக்கும் குட்டைப் பாவாடைக்காரியின் சுருக்கு பைக்குள் ஆயிரம் இரவுகளின் கதைகள் நிறைந்திருக்கின்றன. நான் வசிக்கின்ற கட்டடத்தின் ஒவ்வொரு மாடிப் படிகளையும் எத்தனையோகதைகளைஉந்தித்தள்ளிவிட்டு ஏறிமுடிக்கின்றேன். பின்னர் என் கதை எனக்குள் பத்திரமாக இருக்கிறதா என்று பார்த்து பெருமூச்சொன்றும் விடுகிறேன். நகுலனின் கதையில் இந்தப் பரபரப்பு இல்லை. யாரோ ஒருவரின் கதையொன்றிற்குள் அந்நியமாய் நின்று எட்டிபார்ப்பதைப்போலில்லை. நிர்வாண நடனமென்றாலும் ஒரு கணம் மனம் பதைபதைத்து குற்றவுணர்வொன்று ஏற்படும். நகுலன் ரகசிய கதை சொல்லியாயிருந்தாலும் எனக்குள் குற்றவுணர்வில்லை. எளிமையாக உருவாகி விரிகின்ற உரையாடல்களில் அழுத்தமேதுமின்றி இணைத்துக்கொள்கிறேன். இடமழிந்து பொருட்கள், உருவங்கள் அழிந்து உடலழிந்து உயிரும் அதன் எண்ணங்களும் மட்டுமே உரையாடிக்கொள்ளும் வெளி ஒன்றிற்குள் நுழைந்து பேசிக்கொள்வதைப்போல உணர்கிறேன்.

(03)

இச்சிறையை வெறுமையென்றும் இருளென்றும் அடையப்படுத்திவிடமுடியாது. வாசல்கள் அற்ற காற்று வழியற்ற புழுத்துப்போன அறையொன்றிக்குள் நானில்லை. இவ்வறை எதிரே விரிந்திருக்கின்ற மைதானத்தின் தொடர்ச்சி. காற்று என்று முன்னொரு நாள் பெயர்வைத்த மரத்தின் கிளை. நானும் என் புத்தகங்களும் சில உடுப்புகளும் இன்னமும் திருத்தப்படாத கட்டிலும் மட்டுமே இவ்வறைக்குள் இல்லை என்பதை நீங்கள் உணர்வீர்கள். உசும்பியின் தாய் இசைத்துக்கொண்டிருக்கும் பியானோவின் இசை ஒவ்வொரு இடுக்குகளிலிருந்தும் கசிகின்றன. கனவொன்றில் அந்நாள் அலைந்த கருநீலப்பூச்சியும் பேகனின் ஒவியக்கூடமும் இதுதான். முள்ளில்லாக் கடிகாரம் காலத்தை நிறுத்தி வைத்திருக்கிறது. பின்னிரவில் போத்தலுக்குள் அடைத்து இரவு முழுக்க எரிந்து காலையில் இறந்துபோன மின்மினிப்பூச்சி கடிகாரத்திற்குள் புகுந்து காலத்தை நகர்த்துகிறது. நிறை போதையில் அழுக்கு நிறைந்த குப்பை மேடுகள் மேல் சாரம் கழர தன்னைமறந்து மிதக்கும் குடிகாரர்களை தினமும் சந்திக்கிறேன். உலகத்தின் விளிம்பிலிருந்து விரியும் புனைவுலகத்தின் பேரரசர்களாகத் திரியும் அவர்களின் கனவிலிருந்து என்னறை விரிவது ஆச்சரியமாயிருக்கிறது. பொறுப்பில்லாமல் கீழறைக்குள் புகைத்துக்கொண்டிருக்கும் இளைஞனின் புகையில் கொஞ்சம் - தனக்கும் தலையணைக்கு உறையில்லாமல்



இருபத்தோராயிரத்து தொண்ணூறு இரவுகள் படுத்தெழும்பிக்கொண்டிருக்கும் கிழவனின்

நிர்வாணத்தில் கொஞ்சம் - பைத்தியம் பிடித்து இன்னமும் தன் மகளை தேடிக்கொண்டிருக்கும் பக்கத்துவீட்டுக் கிழவியின் அலைச்சலில் கொஞ்சமுமாய்ச் சேர்ந்து என்னறையை விரிக்கின்றன. நடுச்சாமத்தில் கறுப்புப் பையோடு படியேறிய என்னையொரு பேயென்று நம்பி அறை வரை தொடர்ந்து ஏமாந்துபோகிறது நாய். மின்மினியால் சுழற்றப்படும் இந்தக் காலக்கூட்டின் தொடர்ச்சி அந்த ஏமாற்றத்தாலும் விரிவடையும் என்பதை நாய் அறியாமலில்லை.

(04)

தோமஸ் நகுலனிற்கும் நண்பராய் இருந்திருக்கிறார் என்றறிந்த போது அதிர்ச்சியடைந்தேன். தோமஸ் காலமற்று இடமற்று அலையும் அஃறிணை நாடோடி. சந்தர்ப்பத்திற்கேற்றாற்போல் உருவமொன்றினுள் அடைந்து பின்னர் காரியம் முடிய வெளிக்குத் திரும்புகிறது. தோமஸ் நகுலனிற்கு சுந்தர ராமசாமியின் வடிவத்தை எடுத்திருகிறார். அது நகுலனின் நாவல்கள் நெடுகிலும் வந்திருக்கிறது. நகுலன் ஒரு குட்டி நாயைப்போல தோமஸைப் பின்தொடர்கிறார். நான் தோமஸை முதன்முதலிற் கண்டபோது பிரகாசமான ஒளி என்றே நம்பினேன். என்னோடிருந்து வெளிக்கு திரும்பும் வரையிலும் அது பிரகாசமாகவே இருந்தது. வெளியில் அலைந்து கொண்டிருக்கும் தோமஸிற்குக் கல்லறை எழுப்பியதை எண்ணிப் பார்க்கிறேன். தோமஸ் தன்னை எல்லாக் கணமும் மாயப்பொருளாகவே வைத்துக்கொண்டிருந்திருக்கிறது. அணுக அணுக ஒவ்வொன்றாய் மாறி இறுதி வரை எதுவென்றே தெரியாத அலைகளாய் இருந்திருக்கிறது. அஃறிணை நாடோடி இறந்துபோனதாய் நம்பியதோடு மட்டுமில்லாமல் திவசம் செய்ய விசாரணை நடத்துமளவு என்னை ஏமாற்றியிருக்கிறது. உருவமளவில் என்னை ஏமாற்றியிருந்தாலும் எனக்குள் அது உண்டாக்கிய சிந்தனைகள் உண்மையானவை. " சிந்தனை என்பது ஒரு வியாதி "என்று தேரை நவீனனிடம் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டேயிருக்கிறார். சிந்தனை ஒரு தொற்று வியாதி. ஆதியிலே நிறைந்து போன சிந்தனை காலம் காலமாக தூதுவர்களால் கடத்தப்பட்டுக்கொண்டு வருகிறது. யாரும் புதிதாக சிந்திப்பது கிடையாது. சிந்தனைகளை ஒன்று சேர்க்கிறார்கள். உடைக்கிறார்கள். பகுக்கிறார்கள். இவற்றையன்றி எதையும் செய்துவிடமுடியாது. தொற்றுவியாதியின் காவி தோமஸ். பரிதாபகரமாக தோமஸ் எல்லாவற்றிக்கும் பொருந்திப்போகிறார்.

(05)

நாய் என்னும் வசை முடிந்த முடிவாயிற்று. ஆனால் சிங்களவர்கள் நாயே என்று யாரையும் திட்டுவதில்லையாம். வசைகள் மட்டுமல்ல எல்லாமே இங்கு முடிந்த முடிவாயிற்று. சமூக அசைவுகள் அனைத்தும் கேள்விகள் இன்றி அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. காரணங்கள் எதுவும் இன்றிய மரபு வழி நடைமுறைகள் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எல்லோரும் விகுதிகள் தொடர்ச்சியையே விரும்புகிறார்கள். அது எளிமையாயும் சுயநலமாயுமிருக்கிறது. நாய் என்ற வசை விகுதியும் அப்படித்தான். இந்த வசையில் உணர்த்தப்படுகிற நாய் வேட்டை நாயில்லை. வேட்டை நாயிலிருந்து வசைக்குரியவர் ஒரு படி கீழாகவே பார்க்கப்படுகிறார். நகுலன் நாயிலிருந்து தொடங்கி மனித சமத்துவம் நோக்கி நகர்கிறார். அது இருண்ட குகைக்குள் கூரிய ஒளிப்பொட்டொன்று நகர்வதைப்போல நாவலுக்குள் அசைகிறது.

(06)

நகுலன் தன்னை மீண்டும் மீண்டும் சுயபரிசீலனை செய்து கொள்கிறார். வசனத்தின் ஒழுக்கொன்றில் கூட சுயபரிசீலனை என்ற வார்த்தை இரைச்சலாகத் தெரிகிறது. நாங்கள் இரைச்சலான எதுவொன்றையும் வெறுக்கிறோம். அதுவும் எங்களுக்குள்ளே இரைச்சலை உருவாக்கிற விஷயங்கள் அறவே பிடிக்காமல் போகிறது. நகுலனின் எல்லா மனிதர்களும் நகுலன் தான். தன்னை ஒவ்வொரு நிலையிலும் நிறுத்தி ஒவ்வொரு கணத்திலும் நின்று கேள்வி கேட்கிறார். ஒரு கணத்தில் நகுலன் என்ற வார்த்தை அற்றுப்போய் நான் புகுந்துகொள்கிறேன். பைத்தியக்கார மனைவியின் கோரப்பிடியிலிருந்து உசும்பியை காப்பாற்ற நான் எத்தனித்ததைப்போல நகுலன் நவீனன், தேரை, ஐயர், நாய், பூனை, சுசீலா அவர்கள் நீ நான் அது எல்லாவற்றிலிருந்தும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள நினைக்கிறார். ஒவ்வொன்றும் நிழல்களாய் அவரைப் பயப்படுத்துகின்றன. நிழல்கள் உண்மையானவை என்றே தோன்றுகிறது. அப்பழுக்கற்ற கருமை. மனிதர்கள் தோரணங்கள் தான். எல்லா நிழல்களும் இயற்கையோடும் ஒளியோடும் எல்லோருக்கும் ஒன்றுபோல மாறுபவை. மனிதர்கள் அவ்வாறில்லை. அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவராக மாறுகிறார்கள். தங்களுக்குள்ளேயே ஆயிரமாய் விரிந்து போய்க்கிடப்பவர்கள். நியத்தில் ஒன்று பன்மையாகி பன்மை ஒன்றாகும் போராட்டம் தான் வாழ்க்கை என்றும் சொல்லிவிடலாம். நாய்கள்

பன்மையுடனான மோதல். நேர்கோடுகளை வெறுக்கும் ஒருத்தரின் பன்மைகளோடான அலைச்சல்.

(07)

வாழ்க்கையைப்பற்றி முடிவொன்றெடுத்த அடுத்த நிமிடமே நகுலன், "ஒரு பீடி நுனியில் தான் என் வாழ்க்கை எரிந்துகொண்டிருந்தது" என்றார். நான் நகுலனில்லை. எனக்கு பீடி பிடித்துப் பழக்கமில்லை. நகுலனாயிருந்தால் தானே வாழ்க்கை பீடி நுனியில் எரியவேண்டும். பீடி பிடிக்காத எனக்கு வாழ்க்கை இல்லையா? இருக்கிறது, நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். காலம் காலமாக நம்பப்படுகின்றதைப்போல நான் உயிரோடிருக்கிறேன். எனவே நான் நகுலனில்லை.

(08)

உலகத்தில் இருக்கிற எல்லாவற்றாலும் வாழ்க்கை பிரதிபலிக்கப்படுகிறது. "நாய்களாலும்".

(09)

நாட்கள் வேகமாக நகர்ந்து விட்டன. நகுலனின் நாய்கள் வாசித்த பகலின் பின்னர் நீண்ட இரவு வந்தாயிற்று. நீண்ட இரவின் மழை ஓசையில் படிகளின் கீழ் ஒன்றோடு ஒன்று சுருண்டு குறண்டிப்போய்க் கிடக்கும் வெள்ளையும் கறுப்பும் கலந்த நாயொன்றும் தனிக்கறுப்பு நாயொன்றும் எனது வருகையை அறியாமல் தூங்கிக்கொண்டிருக்கின்றன. இளவரசன் போல இரவின் கருமைக்குள் என்னை மறைத்துக்கொண்டு ஓயாமல் ஊற்றிக்கொண்டிருக்கும் மேகக் கிண்ணத்தின் ஏலக்காய்த்தேநீருக்குள் நனைகிறேன். விறைத்த நாய் உடலை சிலிர்ப்பிக்கொள்வதைப்போல மேற்சட்டையினூடாக மார்புக்குள் ஈரம் இறங்கச் சில்லிடுறேன். நாடகமொன்றிற்குள் எல்லா வேஷங்களையுமிட்டு நடிக்கும் அந்தக் கிழவனைப்போல இந்த மழைக்குள் நான் இளவரசனாயும் அந்த தேநீர்க் கடைக்குள் வியாபாரியாயும் தெரு முனையில் உடலை விற்பவனாயும் தொலைதூரத்தில் மறையும் ஜோடிக்கைகளின் குடையாயும் வேஷமிடப்போகிறேன். ஒரு சூறாவளி சுழலுக்குள் சிக்கிக்கொண்ட உதிர்ந்த நாயின் இம்மி முடியையும் இந்த உடலுக்குள் தொலைந்துபோன என்னையும் தேட ஒவ்வொரு வேஷமாயிடுகிறேன். நான் என்ற ஒற்றைச் சொல்லுக்குள் இத்தனை ஆயிரம் அணுக்களும் எண்ணங்களும் அன்பும் வெறுப்பும் ஒடுங்கிப்போவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பருத்த உடலுக்குள் தொலைந்திருக்கும் நானுக்குள் மீண்டும் இவ்வுடல் ஒடுங்கிப்போவதை தோமஸும் ஏற்றுக்கொள்ளமாட்டான். நகக் கண்ணுக்குள் குளிரிறங்கி விரல்கள் விறைக்கத்தொடங்கிவிட்டன. இத்தனை நாட்களும் ஏன் ஆயிரம் கனவுலகவாசிகளுடன் வாழ்கிறேன்? என்றிலிருந்து அவர்கள் எனக்குரியவர்களாகினார்கள்? அவர்கள் என்னும் என்னை ஏன் இன்னமும் அலையவிட்டு பார்த்துக்கொண்டிருக்கிறேன்? எனக்கு முன்னர் பேகன் செய்ததைப்போல என்னை நானே வரைந்து பார்க்கிறேனா? ஆனால் எனக்கு பேகனை இப்போதுதான் தெரியும். நானறியும் போது பேகன் தான் என்னைப்பார்த்து போலச்செய்கிறார். மழைக்குள் ஓவியம் ஒன்று கரைந்து தானற்றுப் போவதைப்போல நானற்றுப்போக இந்த மழைக்குள் நிற்கிறேன். முதலில் நானென்பதென்ன என்று தெரியவேண்டும். ஒவ்வொரு அலைச்சலிலும் ஏதோவொன்றை அடைகிறேன். குறுக்கெழுத்து புதிரொன்றை நிரப்புவதைப்போல வாழ்க்கையின் கட்டங்களை நிரப்புகிறேன். என்றும் நிரப்பிவிடமுடியாத நீண்ட புதிரென்று தெரிந்தும் ஏதோ ஒன்று உந்தித் தள்ளுகிறது. தூரத்தில் இன்னொரு உருவம் தெரிகிறது. முற்றும் நனைந்து போய் விறைத்திருக்கிறது. கிழடாகிப்போனாலும் கண்களில் அதே ஒளியுடன். தன் பாட்டனிடம் அத்திமரத்தடியின் கீழ் விரவிப்போட்ட வைக்கோற் படுக்கையின் மேல் வியந்து கதை கேட்ட அதே கண்கள். யோஸே ஸரமாகோ. தன் பாட்டன் பாட்டியிடமிருந்து தன்னை அறிந்துகொள்ள இத்தனை காலமும் எழுதித்தீர்த்து முடியாமல் இன்னமும் அவனென்னும் நான் கரைந்து போக மழைக்குள் ஒவ்வொரு இடைவெளிகளையும் நிரப்பிக்கொண்டு விறைத்துப்போய் நிற்கிறார். இருட்டும் மழையும் எக்காலமும் முடிந்ததில்லை. எல்லோருக்கும் தெரிவதுமில்லை. நகுலன் இருட்டை மொழி பெயர்கிறார். மழையை மொழிபெயர்கிறார். இருட்டின் கருமையும் மழையின் குளிரும் தாங்கமுடியாமல் மொழிபெயர்த்தழிக்கிறார். அவரின் இருட்டு. அவரின் மழை. அவரின் மொழி. அது எனக்குரியதுமாகிறது. இருட்டில் மறைந்திருக்கிற பாதைகளை வனங்களை மைதானங்களை வயல்வெளிகளை அவ்வொளி வெளிக்காட்டுகிறது. எதிர் அறைக்குள் குறை பீடி எரிந்துகொண்டிருக்கிறது. என் அறை முழு இருட்டில். நிலம் குளிரில்.

(10)

"என்னுடைய அபிப்பிராயத்தில் இலக்கியம் என்பது மெய்யான உலகம் என்று நம்மை நம்பச்செய்யும் ஒரு பொய் உலகம் தான்" என்று நகுலன் கூறியதைப்பார்க்க பஷீரின் நாராயணீ தொடங்கி நேற்றுப் பிறந்த மீக்காயீல் வரை குருடரின் கைப்பிரம்பு தான்.






# மாற்றுச் சிந்தனையை கோரிநிற்கும் ஊற்றுத் தண்ணி



அகரா நாதன்

ஒடுக்குமுறைச் சமூகம் குறித்த தமிழ் 'திரைமொழிகளில்' 'பரியேறும் பெருமாள்' ஒரு புதிய 'ஊற்றுத் தண்ணி' என்பேன். சமூகத்தில் சாதியரீதியாகவும், பாலியல் ரீதியாகவும், இழிவுபடுத்தப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டு வரும் மக்களை அவ்வாறே பிரதிபண்ணும் சிந்தனைத் தொடர்ச்சியாகவே தமிழ் சினிமா ஊடாகவும் காட்சிப்படுத்தப்பட்டு வந்தது. அவ்வாறான திரைமொழிச் சிந்தனை மரபைத் திருகித் திருப்பிய இளைய இயக்குனர்களில் பா.இரஞ்சித் மிக முக்கியமானவர்.

இன்று உலகளவிலான சினிமாக்களில் பல்வேறு வகையிலான சினிமாக்களை நாம் பார்க்கின்றோம். குறிப்பாக, மேற்குத் தேசங்களின் இன்றைய தொழில்நுட்ப சாகசக்-கற்பனைச் சினிமாக்கள் எம்மை திரையரங்கிற்குள் திகைப்பூட்டிச் சிலிர்க்கவைக்கும் மனநிலையை ஏற்படுத்துவதை நாம் அவதானிக்கலாம். ஆனால் திரையரங்கை விட்டு நாம் வெளியேறியதும் அவ்வாறான திரைப்படங்கள் எம்மோடு வெளியே வர மறுக்கின்றன. மாறாக எமது வாழ்வில், சமூகத்தில் எதிர்கொள்ளும் சிக்கலான, துயரமான, கொடூரமான பிரச்சனைகளை இலக்கியப் பிரதிகளாகவும், திரைமொழிகள் ஊடகமாகவும் நாம் எதிர்கொள்ளும்போது பிரதிகளையும் திரையரங்கையும் தாண்டி அவை எம்மோடு தொடர்ந்தும் பயணிக்கும் உணர்வைப் பெறுகின்றோம். மாரி செல்வராஜின் 'பரியேறும் பெருமாள்' திரைப்படமானது படம் பார்த்து இரண்டு கிழமையாக என்னோடு தொடர்ந்து பயணித்துக்கொண்டும் உரையாடிக் கொண்டிருக்கின்ற போதே இக்குறிப்பையும் எழுதிக்கொண்டிருக்கின்றேன்.

சாதிய ஒழிப்பிற்காகவும், தீண்டாமைச் சாதியப் பாகுபாட்டு ஒடுக்குமுறைகள் மீதான போராட்டங்களையும் அவற்றை எதிர்கொள்வதற்குமான அரசியல்-சிந்தனைச் செயல்பாடுகளை அவதானித்தும், தொடர்ந்தும் அதுகுறித்துக் கற்றுக்கொண்டும் இருப்பவன் நான். அந்தவகையில், 'பரியேறும் பெருமாள்' திரைப்படத்தை ஆர்வத்துடனும் பல்வேறு விமர்சனங்களை அறிந்த ஆவலுடன் பார்த்தேன். அப்பார்வையானது சாதிய சமூகத்தின் மீதான ஒரு ஆவேசப்பார்வையாகவும் இருந்தபோது, டாக்டர் அம்பேத்கர் அவர்களை கற்றுக்கொண்ட பரியேறும் பெருமாளை மாரி செல்வராஜ் இப்படி பண்ணிப்பிட்டாரே என்றுதான் க்ளைமாக்ஸின் கருத்தையொட்டி சில நொடிகள் அவதிக்குள்ளானேன். 'பரியேறும் பெருமாளையும்' அவனது இயல்பையும் ஒவ்வொரு சட்டகமாக இணைத்து அவதானித்து சிந்தித்தபோதே 'பரியேறும் பெருமாள்' டாக்டர் அம்பேத்கர் அவர்களை அறிந்து கொண்டவனே தவிர, கற்றுக்கொண்டவன் அல்ல, மாரி செல்வரஜே

டாக்டர். அம்பேத்கரை ஆழமாக கற்றுக்கொண்டவர் என்பதையும் புரிந்துகொண்டேன்.
'அடங்கமறு அத்துமீறு' என்பதை அடிநாதமாகக் கொண்டு விளிம்பு நிலைக்குள்ளாக்கப்பட்ட சமூகத்திற்கான நியாயத்தை முன்வைத்த படைப்புக்களையே திரைமொழிகள் வழியாகப் பா.இரஞ்சித் அவர்கள் மேற்கொண்டு வருகின்றார். அதன் வழி இருக்கக்கூடிய நியாயங்களும் முக்கியமானதே. ஆயினும் அதையும் தாண்டி நிதானித்துச் சிந்தித்துப் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான பல்வேறு மாற்று சிந்தனை முறைகளும் அவசியமானதே. அந்த வகையில் சமூக - சாதிய ஆணவப் படுகொலைகளின் யதார்த்தங்களை நினைவில் ஊன்றவைத்து, தலித்சமூகம் அவற்றை எதிர்கொள்வதற்கான மாற்றுச் சிந்தனையாக ஒன்றை முன்வைக்கிறார் மாரி செல்வராஜ்.

இந்தத் திரைப்படத்தைக் க்ளைமாக்ஸில் நின்று சிந்திக்காமல், 'ஆர்.கே. ராஜா தான் எங்க ஊரின் ஊத்துத் தண்ணி' என்பதிலிருந்து நாயகனின் மனதையும் அவனது இயல்பையும், சூழலையும் புரிந்து கொள்ள முயற்சிப்போமாயின் மாரி செல்வராஜின் க்ளைமாக்ஸிற்கான புனைவின் நியாயத்தை பல்வேறு கோணத்தில் எம்மால் புரிந்து கொள்ளமுடியும். ஒடுக்கும் சாதிய சமூகமாகவும், ஒடுக்கப்பட்டு வரும் சாதிய சமூகமான உள்ளடக்கம். ஒடுக்கப்பட்டுவரும் சமூகத்தின் இளைய சந்ததியினரின் உரையாடல்கள் இவ்வாறு: 'அவங்களிட்ட எல்லாம் இருக்கில. என்ன இருக்கு அவங்களிட்ட. என்ன இருக்கா, எலே நம்ம வயலும் வரப்பும் அவங்கிளிட்டலா இருக்கு நம்ம அப்பங்கிட்ட வாயும் வயிறும்தானே இருக்கு'. அதுக்கு! கொஞ்சம் பொத்துங்கின்னுதான் போகணும். எவ்வளவு நாளைக்குத்தான். எலே எண்ணைக்கு அவங்க காட்டில உழவம் பாக்கிற வேலைய எங்கப்பனும் உங்கப்பனும் நிப்பாட்டிறாங்களோ அதுவரைக்கும். விளங்கும்." என்பது ஒடுக்கப்படும் சமூகத்தை சேர்ந்த பரியேறும் பெருமாள் போன்ற இளைய சந்ததியினர் தமது சுயத்தை பேணுவதிலுள்ள நெருக்கடியை விபரிக்கும் காட்சியாக அமைந்திருக்கிறது. இந்தச் சமூகத்துக்காக நியாயம் நீதி பேசும் தகுதியுடையவராக உள்ளவர்தான் ஆர்.கே.ராஜா. இளைஞர்களுக்காக நியாயம் கேட்கச் சென்ற தமது ஊரின் ஊத்துத் தண்ணியே பொலிசால் அடித்து, 'பெரிய வக்கீல் மாதிரி கேள்வி கேக்கிறாய்' என அவமானப்படுத்தப்படுகிறார். இதுவே நாயகனின் வக்கீல் ஆவதற்கான இலட்சியமாக உணர்த்தப்படுகிறது.

சட்டக்கல்லூரியில் ஒடுக்கும் சாதிய சமூகத்து பெண்ணுடனான நட்பு முதிர்ந்து அவனுக்குள் காதலாக துளிர்க்கும் முன்பாகவே நாயகன் தாக்கப்பட்டு முகத்தில் சிறுநீர் கழிக்கும் சித்திரவதைகள். பெண் வேடமிட்டுக் கூத்துக்கலையாடும் நாயகனின் தகப்பனை நிர்வாணமாக்கப்பட்டு அவமானப்படுத்துதல். இறுதியில் நாயகனைக் கொலை செய்வதற்கான முயற்சிகள் என பல ஒடுக்குமுறைகளையும் எதிர்கொண்ட நாயகன்: 'ஜோ...உன்ர பொண்ணு. உன்னைப்பார்த்து சிரித்தால்ல... அப்பா என்று கூப்பிட்டால்ல அந்த சிரிப்பும் அப்பா என்கிற அந்த வார்த்தையும் நான் உனக்குப் போட்ட பிச்சை' எனத் தன்னைக் கொல்லத் தூண்டிய பெண்ணின் தகப்பனின் முகத்தில் காறி உமிழ்ந்து சொல்கிறான். இறுதியில் பரியேறும் பெருமாளைத் தகப்பனுடன் பகைமறந்து உரையாடுவதற்கான சூழலை நாயகி கல்லூரி முன்பாக ஏற்படுத்தும் காட்சியில்: 'நாங்க இவ்வளவு பண்ணியிக்கமில்ல நீ ஏன் என் பொண்ணுக்கிட்ட சொல்லவேல்ல'?

'உங்களுக்கொன்னு தெரியுமா சார். உங்க பொண்ணுக்கு என்னை விட உங்களைத்தான் ரொம்பப்பிடிக்கும். எனக்கு கிடைச்ச மாதிரி அப்பா வேற யாருக்கும் கிடைச்சிருக்க மாட்டாங்க எனச் சந்தோசமாச் சொல்லிட்டிருப்பா. அதுதான் சொல்லல.'
'தாங்ஸ்பா. எனக்கும் தெரியும் தம்பி என் பொண்ணுக்கு என்ன எவ்வளவு பிடிக்குமோ அதேயளவு உன்னையும் பிடிக்கும் அதுமட்டுமில்ல அவ உங்கூடவேயிருக்கணும் என ஆசைப்படுறாங்கிறதும் தெரியும். தம்பி என் இவ்வளவு பயித்தியமாயிருக்கிறால்ல அதேமாதிரி அவமேல உனக்கு எந்த நினைப்பும் வரேல்லயா?'
'தெரியல்ல சார்... அது என்னனு தெரிஞ்சுக்கறதுக்குள்ள தான் நாய அடிக்கிறமாதிரி ரத்தமும் சதையுமுன்னு குத்திக்கிழிச்சிட்டீங்களே' எனும் உரையாடல். இறுதியாக, பெண்ணின் தகப்பன்:
'பார்க்கலாம் நாளைக்கு எதுவேணுனாலும் எப்படிவேணுனாலும் மாறலாமில்லையா... யாருக்கு தெரியும்?'
'எனக்குத்தெரியும் சார் நீங்க நீங்களாயிருக்கிற வரைக்கும் நான் நாயாத்தான் இருக்கணும் என நீங்க எதிர்பார்க்கிறவரைக்கும் இங்கே எதுவுமே மாறாது அப்படியேதாயிருக்கும்.'
என்பதோடு 'வா... ரெயில் விடப்போலாம் வா உனக்கின்னும் கோபமா மன்னிச்சிடு போலாம் வா...' என நாயகியின் மனதிலிருந்து கிளம்பும் ஒசையாகப் பாடலும் இசையும் கரைந்து வர மூவரும் நடந்து மறையும் காட்சியில், புறச் சூழல் அனைத்தும் மறைக்கப்பட்டு மேசையில் தகப்பனும், பரியனும் தேனீர் அருந்திய கிளாசிற்கு மத்தியில் மல்லிகை பூ ஒன்றை வைத்து பார்வையாளர்களின் முகத்திற்கு நேராக அக்காட்சியை இழுத்துவருவதோடு நிறைவடைகிறது 'பரியேறும் பெருமாள்'.

இத்திரைப்படம் குறித்தும், அதனது புனைவுக்



கருத்தாக முன்வைக்கப்பட்ட க்ளைமாக்ஸ் குறித்தும் பல்வேறு விமர்சனங்களையும், அபிப்பிராயங்களையும் அவதனிக்கக்கூடியதாக இருந்தது. இயக்குனரின் கருத்தாக முன் வைக்கப்பட்ட படத்தின் க்ளைமாக்ஸ் குறித்த கேள்விக்கு மாரி செல்வராஜ் இவ்வாறு கூறினார்: 'படம் பார்த்து யாருமே கோபத்தோடு செல்வதை விரும்பவில்லை நான். ஒடுக்கும் சாதியினரும், ஒடுக்கப்படும் சாதியினரும் மிகவும் சிறுபான்மையினரே. இவ்வாறான சமூக முரண்களையும் வன்முறைகளையும் பார்த்து மௌனமாக இருப்பவர்களும், அவைகளைக் கண்டும் காணாது அலட்சியமாக கடந்து செல்லும் பகுதியினரே பெரும்பான்மையாக இருக்கின்றார்கள். எனவே அவர்களை மனதில் வைத்து, அவர்களைச் சிந்திக்க தூண்டும் எண்ணமாகவே இவ்வாறாகக் க்ளைமாக்ஸ் உருவாக்கப்பட்டது.' என்பதாக கூறினார்.

இயக்குனர்களின், படைப்பாளிகளின் எண்ணங்களையும், விருப்பங்களையும், எதிர்பார்ப்புகளையும் மீறிய சுதந்திர செயல்பாடுதான் பொதுவான விமர்சனம் என்பது. அந்தவகையில் இயக்குனரின் விருப்பங்களையும் எதிர்பார்ப்பையும் கடந்து செழுமைப்படுத்துவதற்கான சிந்தனை வளம் நிரம்பிய காட்சிகளும், உரையாடல்களும் மிகுந்த ஒரு படமாகப் பரியேறும் பெருமாளை என்னால் அவதானிக்கமுடிகிறது.

சாதிய ஒழிப்பு என்பதற்கான சிந்தனை முறை வேறு. சாதிய ஒடுக்குமுறை தீண்டாமை போன்ற செயல்பாடுகளை எதிர்கொள்வதற்கான சிந்தனை முறை என்பது வேறு. 'பரியேறும் பெருமாள்' சாதி ஒழிப்பிற்கான ஒரு கருப்பொருளல்ல. (சாதியை பேணுபவர்களாக தலித்துக்களும் அடங்குகிறார்கள் என்பது 'சாதியத்தின் வல்லமை') ஒடுக்கப்படும் சாதியினர் தம்மீது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் சமூக அடக்குமுறைகளையும் வன்முறைகளையும் மீறும் வல்லமையுள்ளவர்களாகவும், அவர்களது 'வாள் ஏந்திய சமூக வரலாறையும்' நினைவுறுத்துகிறது 'பரியேறும் பெருமாள்'. தலித்துகள் சமூக ஒடுக்குமுறைகளை எதிர்கொள்வதற்கான அதிகாரத்தை நோக்கி நகர்வதற்கு கல்வியே மிக பிரதானமானது என்பதைச் சிந்திக்கவும் தூண்டுகிறது 'பரியேறும் பெருமாள்'.

புளியங்குளம் கிராமத்திற்கான ஊத்துத் தண்ணி ஆர்.கே.ராஜா. அவரிடம் இல்லாதது வக்கீல் எனும் அதிகாரம். இந்த அதிகாரத்தை நோக்கியதே நாயகனின் இலட்சியம். கல்லூரித் தோழியின் நட்பு கிடைத்து அவன் மனதில் அது காதலாக வேர்விடும் முன்பாகவே சாதிய வன்முறை அவனைச் சூழ்ந்துவிட்டது. ஆணவக் கொலைகள் நிகழ்ந்துவரும் யதார்த்தமும் அதற்குச் சாதகமாக இருப்பது பெற்றோரும் உறவினருமே. ஆயினும்; ஒடுக்கப்படும் சாதியினர் வீரமும் துணிவும் உள்ளவர்கள், அடங்க மறுப்பவர்கள் அத்துமீறுபவர்கள் என்பதை மறைமுகமாக வலியுத்துகிறது பரியேறும் பெருமாள். கல்லூரியில் ஒடுக்கும் சாதியினரையே ராக்கிங் செய்கிறார்கள். கிராமத்து தலித் இளைஞர்கள் எதிர்த்துப் போராடும் வல்லமையுள்ளவர்கள். ஏன் நாயகனையே ஒடுக்கும் சாதியினரால் கொல்ல முடியவில்லை. மேலும் நாயகன் ஒடுக்கும் சாதியான நாயகியை காதலிக்கவில்லை என்ற நம்பிக்கையில்தான் நாயகன் மீதான மீண்டுமொரு கொலை முயற்சி நடக்காதென்பது உணர்த்தப்படுகின்றதே அல்லாது, ஒடுக்கும் சாதியின் மனமாற்றத்தையோ, அல்லது அவர்களுக்கு நிகரான மேல்நிலையாக்க மனநிலையை வேண்டிநிற்கும் கருத்தியலாகவோ கருதமுடியாது.

இவ்வாறான புரிந்துணர்வுகளால் சாதியம் ஒழிந்துபோகும் எனும் புரிதலோடும் இணைக்கப்பட்ட க்ளைமாக்ஸ் அல்ல. 'உன்னைக் கொல்லுறதும் பத்தாம என்ர பிள்ளையையும் கொண்ணு போடுவாங்கடா.' எனப் பெண்ணின் தகப்பனின் அன்பு, பாசம், கருணை அனைத்தையும் கடந்த சமூக வன்மம் 'சாதியம்' என்பதை உரையாடல் அழுத்தமாக பதிவு செய்கிறது.

சமூகத் தீண்டாமை ஒடுக்குமுறைகளை எதிர்கொண்டு அதிகார வல்லமை நோக்கி நகர்வதற்கான குறியீடு

தான் பரியேறும் பெருமாளின் இலட்சியமான வக்கீல் எனும் சமூக அதிகாரம். அந்த அதிகார இருப்பிற்கான உதாரணமான பாத்திரம் தான் கல்லூரியின்; ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இரண்டாவது முதல்வர். இருப்பினும் கல்விகற்றுப் பல்வேறு அதிகார இருப்பை நோக்கிச் செல்வதற்கான தலித்துகளுக்கான வெளி என்பது ஆழ அகலமாகத் திறந்து விடப்பட்டிருக்கவில்லை என்பதும் உண்மையே! ஒடுக்கும் சாதிய மனமுள்ள ஆங்கில ஆசிரியர் கூறினாரே 'கோட்டாவில் வந்த கோழிக்குஞ்சு' என்று, அந்த 'கோட்டாமுறையே' ஒடுக்கப்படும் சாதியைச் சேர்ந்தவர்கள் வெளியேறுவதற்கான துவாரம். எனவே அந்தத் துவாரத்தை மேலும் விரிவாக்கிச் சமூக அதிகாரத்தை நோக்கி நகர்வதற்கான சிந்தனையை உள்ளடக்கிய ஒரு திரைமொழிக் காவியமாக 'பரியேறும் பெருமாள்' எனது பார்வையில் இருக்கிறது.

மிக நுட்பமாகத் தேர்வுசெய்யப்பட்ட திரைமொழியும், திரைக்கதைத் தொகுப்பும் இணைந்த ஒளிப்பதிவினூடான அழுத்தமான காட்சிப்பதிவுகள். மீண்டும் மீண்டும் பார்க்கத் தோன்றும் இனிய இசையோடு இணைந்த பாடல்களின் ஊடாக காட்சிப்படுத்தும் நிகழ்வுகள், என மன உணர்வுகளோடு கருத்தும் கலந்திணைந்த திருப்தி.

இத்திரைப்படம் குறித்த எதிர்மறை விமர்சனங்களையும் என்னால் பார்க்கமுடிந்தது. அவ்விமர்சனங்களானது தமது முழுமையான, நிலையான, அறிதலூடான முன்முடிவுகளிலான கோட்பாட்டு விமர்சனமாக இருப்பதையும் அவதானிக்க முடிந்தது. பரியேறும் பெருமாள் ஒரு கலைப்படைப்பல்ல,அது பிராந்திய அரசியலையே முன்வைக்கின்றது. அனைத்துக்கும் மேலாக இது ஒரு தலித் சினிமா அல்ல என்பதாக எதிர்மறையான விமர்சனம் வரையறுக்கின்றது. சாதிய பிரச்சனைகளைப் பேசும் படமாக இருந்தால் அதை ஒரு கலைப்படமாகவே எடுக்கவேண்டும். சாதியம் பற்றிய படமாக இருந்தால் அது ஒரு முழுமையான தலித் அரசியலை முன்வைத்து அதற்கான தீர்வையும் முன்வைப்பதாக இருக்கவேண்டும் என்பதுதான் இதுபோன்ற எதிர்மறை விமர்சனங்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

எதிர்பார்ப்புகளைச் சாத்தியமாக்கும் முயற்சிகளில் பயணிக்கும்போது, எதிர்கொள்ளும் பன்முக நெருக்கடிகளை நமது இலட்சியத்திற்காக அலட்சியப்படுத்தும் போக்கில் எம்மை நகர்த்திக்கொண்டிருப்பது, நிலையான கருத்தியல் கோட்பாட்டு ஆளுமைகளாகும். ஆயினும் நாம் பன்முக சிந்தனைகளை, பன்முக அடையாளங்களை மதிப்பவர்களாக காட்டிக்கொள்ளும் முற்போக்கு அடையாளத்தை போர்த்திக்கொள்ளவும் ஆசைப்படுகின்றோம். பல்வேறு 'இலட்சிய அடையாள முன்னெடுப்புகளுக்கு' ஏற்பட்டுவரும் நெருக்கடிகளைப்போன்றே தலித் சினிமா, தலித் இலக்கியம், தலித் அரசியல், தலித் கோட்பாடு எனும் அடையாங்களுடான முன்னெடுப்புகளும் எதிர்கொள்ள நேர்ந்திருக்கிறது. அதாவது முழுமையான நிலையான கருத்தியலாக முன்வைத்து செயல்படும்போது எதிர்கொள்ளும் நெருக்கடிகள்.

தலித் அரசியலை முன்வைத்து செயற்பட்ட கட்சிகள், தலித் அமைப்புக்களுக்கிடையிலான முரண்பாடுகள். சாதிய ஒடுக்குமுறை, சாதிய மனநிலை, சாதிய மேலாதிக்கம் என மக்களுக்கிடையிலே உள்ள விருப்பு-வேறுபாடுகளுக்கு மத்தியில் தலித் என்பதன் அடையாளத்தின் பெறுமதி என்ன? அது வெறும் குறியீடாக நிலைத்திருக்கின்றதா? அல்லது இலட்சியச் செயற்பாட்டிற்கான உந்துசக்தியாகத் தொடர்கின்றதா? இவைகள் தொடர்பாக நாம் தொடர்ந்து சிந்திக்கவும் தொடர்ந்து உரையாடுவதற்கும்கூட, பரியேறும் பெருமாள் எனும் 'திரைப்படத்தையும்' நாம் ஒரு ஊற்றுத் தண்ணியாகக் கருதலாம்.

நாகராஜ் மஞ்சுளே இயக்கிய 'சாய்ராட்' சாதிய சமூகத்தின் புறநிலைப் பாசங்கையும் குடும்ப அமைப்பில் சாதிய மேலாதிக்க ஒடுக்குமுறை பேணப்படும் இரக்கமற்ற வன்மத்தையும் சித்தரிக்கும் ஒரு மராட்டியத்திரைப் படம். கடற்றொழிலாளர் குடும்பத்து இளைஞனுக்கும், ஒடுக்குமுறைச் சாதிய ஊரிலுள்ள அரசியல்வாதியின் மகளுக்குமிடையிலான காதலை மையமாகக் கொண்ட படம். காதலித்து ஊரைவிட்டு ஒடித் திருமணம் செய்து பிள்ளை பெற்று நீண்ட நாட்கள் கடந்த பின்பும் வஞ்சகமாக நேசம்பாராட்டி இருவரும் கொடூரமாகக் கொல்லப்படுவது க்ளைமாக்ஸ். இதில் இளைஞனின் பெற்றோரின் மறைமுகமான நிர்ப்பந்த சம்மதத்துடனும் கொலை நிகழ்த்தப்படுவதாக ஊகிக்க வைப்பதன் ஊடாக விசம் கலந்த சாதியத்தின் காற்று, ஒடுக்கும் சாதியினரையும் சுவாசிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை சித்தரிக்கின்றது 'சாய்ராட்' எனும் திரைப்படம்.

ஒடுக்கும் சாதியைச் சேர்ந்த ஒரு சிறுமி மீதான ஒடுக்கப்படும் சாதியின் முதிராத பையன் ஒருவனுக்குத் தோன்றும் ஒருதலைக் காதலை மையமாகவும், அதில் அப்பையன் எதிர் கொள்ளும் மன நெருக்கடிகளையும் அவன் குடும்பத்தின் வாழ்வையும் சித்தரிப்பதை மையமாகக் கொண்ட திரைப்படமான

'ஃபன்றி' (Fandry) யை இயக்கியவரும் நாகராஜ். இத்திரைப்படத்தின் க்ளைமாக்ஸில், நாயகனான சிறு பையன் கல்லொன்றை எடுத்து வீசுவதோடு இருள்சூழ்ந்து நிறைவு பெறுகிறது. பார்ப்பவர்களை, சமூகத்தை நோக்கி வீசம்படும் ஒரு கல் என்பதாக இயக்குனர் சித்தரிப்பதை பார்வையாளர்களால் புரிந்துகொள்ளமுடியும். இவ்வாறு வீசப்படும் கல் சாதிய மனநிலைக்கு எதிரானதாகவும் கருதப்படுமாயின் அக்கல் தலித்துகளையும் காயப்படுத்தவே செய்யும்.
இயக்குனர் நாகராஜின் 'Sairat' எனும் திரைப்படமானது மூன்று மணி நேரத்து திரைமொழிக்குள் எம்மைக் கட்டிப்போட்டு அப்படத்தின் பல்வேறு சனரஞ்சகச் சித்தரிப்பின் ஊடாகவே ஆணவக் கொலையின் வன்மத்தை இறுதியாக காட்சிப்படுத்துகிறது.


மாரி செல்வராஜின் 'பரியேறும் பெருமாள்' முன்வைக்கும் திரைமொழிக் கருத்தியலுக்கும், நாகராஜ் மஞ்சுளே இயக்கிய 'சாய்ராட்' முன்வைக்கும் திரைமொழிக் கருத்தியலுக்குமான முக்கியத்துவத்தையும் வேறுபாட்டையும் புரிந்துகொள்வதற்கான பன்முகப்பார்வையாக இவற்றைக் கருதலாம்: 'sairat'ல் ஒடுக்கப்படும் சாதியைச் சேர்ந்த நாயகனின் தகப்பன் கிராமத்துப் பஞ்சாயத்தின் தீர்ப்பை எதிர்நோக்கிக் கூனிக்குறுகிக் குற்றவுணர்வோடு இவ்வாறு இறைஞ்சுகிறார்; Pleace forgive my grave mistake./ The day my son left our home he was dead for me./ I have nothing to do with him now and never will in the future./ I swear on all our gods./ I had 3 proposals for my daughter./ But the all went back./ Don't push us into hell like this./ I beg of you./ Please don't push me into hell.

இதில் பஞ்சாயத்து நீதிபதிகளாக இருப்பவர்கள் ஒடுக்கும் சாதியினர் என்பது உணர்த்தப்படுகிறது. கிராமத்து நீதியின் அதிகாரம் ஒடுக்குபவர்களிடம். தனது குடும்பத்திற்கான, தனது மகனுக்கான நியாயத்தைக் கோரி 'எதிர்ப்பதற்கு வலுவற்ற' நிலையில், தனது நலன்களை ஒடுக்குபவர்களின் நலன்களோடு இணைத்துக் கொள்வதால் (நிர்ப்பந்தம்) அதுவே அவர்களது ஒடுங்கிப்போகும் வாழ்வின் இயல்பாகக் காட்டப்படுகிறது. எனவே சாதிய மேலாதிக்க ஆணவமானது தனது மகளைக் கொல்லும் உரிமை தனக்கிருப்பதுபோலவே, தனது மகளைக் காதலித்துத் திருமணம் செய்த ஒடுக்கப்படும் சாதியைச் சேர்ந்தவனைக் கொல்லுவதற்கான உரிமையை தனது நீதித்துறை அதிகாரத்தின் மூலமாகப் பெறுகிறது. இவ்வாறாகவே ஒடுக்கப்படும் சமூகத்திற்கான வக்கீல் அதிகாரத்தை நோக்கிச் சித்தரிக்கப்படுவதற்கான புனைவுப் பாத்திரம்தான் 'பரியேறும் பெருமாள்.' சாதிய-சமூக ஒடுக்குமுறைகளுக்கெதிராகத் தொடர்ச்சியாகப் பேசியும் எழுதியும் வருபவர்களில் சிலருக்குப் பிரதானமான இப்பாத்திரமானது ஒடுக்கப்படும் சாதியினருடனான சமரசத்தை பேணும் மனதை வெளிப்படுத்துவதாகவும், மறைமுகமாக மேல்நிலையாக்கத் தன்மை கொண்ட பாத்திரமாக சித்தரிக்கப்பட்டிருப்பதாகக் கருதும் எதிர்மறை விமர்சனத்தைத் தோற்றுவிக்கும் 'மனநிலையையும்' அவதானிக்கமுடிகிறது. 'எனக்குத்தெரியும் சார் நீங்க நீங்களாகயிருக்கிற வரைக்கும் நான் நாயாத்தான் இருக்கணும் என நீங்க எதிர்பார்க்கிறவரைக்கும் இங்கே எதுவுமே மாறாது அப்படியேதாயிருக்கும்.' என்பது சமரசநோக்கற்ற நாயகனின் தீர்க்கமான சாதியப் புரிதலாக முன்வைக்கப்படுகிறது. இருப்பினும், அந்த வக்கீல் அதிகாரத்தை நோக்கிய மனமானது, சில தருணங்களில் தயங்குகிறது, பேசுகிறது, உரையாடுகிறது. சில தருணங்களில் சீறுகிறது, எதிர்த்தும் போராடுகிறது. எங்கும் ஒடுக்கப்படும் நலன்களோடு தனது நலனை இழப்பதாகக் காட்டப்படவில்லை.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல, தனது மகளைப் பரியனும் காதிலிக்கின்றான் என நம்பும் வகையிலான திரைமொழி சித்தரிக்கப்பட்டிருக்குமாயின் மராட்டிய இயக்குனர் நாகராஜ் மஞ்சுளேயுடைய சாய்ராட் படத்தின் க்ளைமாக்ஸை பரியேறும் பெருமளிலும் நாம் எதிர்பார்த்திருக்க முடியும். மாரி செல்வராஜின் புனைவின் நோக்கமும் எதிர்பார்ப்பும் வேறு, நாகராஜ் மஞ்சுளே சொல்கின்ற விதமும் எதிர்பார்ப்பும் வேறு. இரண்டுமே ஒடுக்கப்படும் சாதிகளின் நலன்களோடு நெருக்கமானதே. எனவே இவைகள் தலித் சினிமாவா இல்லையா? ஒடுக்கப்படும் சாதிகளுக்கு சார்பானதா? என்பதெல்லாம் அவரவர் சிந்தனையின், எதிர்பார்ப்பின், முன்முடிவுகளின் தன்மையோடு இணைந்ததாகும்.

'பிடித்தமான-முடிவான' கொள்கைகளின், தத்துவக்-கோட்பாடுகளின் அழுத்தம் காரணமாகவும் அதன் ஆளுமையில் வழிநடத்தப்பட்டு 'பெருமிதம் கொள்ளும்' முற்போக்கு அடையாளம் என்பதும், பல வழிப்பாதைகளுக்குத் தடையாகவே நிலைத்து வருகிறது. பிற சிந்தனையாளர்களின் 'பிரச்சாரர்களாக மட்டும்' தேங்கிநிற்கும்; நிலை மாறவேண்டும். தேடிக்கண்டடையும் வழிகளோடு ஒவ்வொருத்தருக்குமான தனித்துவமான, 'தகுந்த வழிமுறைகளையும்' இணைத்துக் கொள்வதன் ஊடாகவே புதிய பாதைகள் புலப்படும். எனவே சாதியம் - தலித்தியம் குறித்து ஒரே வழியில் தொடர்ந்து பயணித்து முட்டி மோதி நிற்காது பல்வேறு பாதைகளின் சாதியப்பாடுளை உணர்த்தி நிற்பதாக 'பரியேறும் பெருமாளையும்' கருதலாம்' என்கிறேன்.

'சாதியும், மதமும் மனித வாழ்விற்கே விரோதமானது' என மாரி செல்வராஜ் நம்புவதற்கு மாறாக 'சாதியும் மத அடிப்படைவாதமும்' எனச் சிந்திக்கலாம் என்பது மட்டுமே 'பரியேறும் பெருமாளில்' நான் முரண்படும் புள்ளி. (எழுத்தோட்டத் தகவல் குறிப்பில் அவதானித்தது)



ஓவியம் - Egon Schiele

நாவல் பகுதி

# கோளறு பதிகம்

யதார்த்தன்



மன்னார் களமுனையில் இருந்த முதன்மையான பெரிய மெடிக்ஸ் பேஸ் அது. வெரோனிக்கு தண்டனைக்காலத்தின் இரண்டாவது மாதம். சில நாட்களாக அவளுடைய முகம் அடிக்கடி தட்டுப்பட்டது. புதிதாக வந்திருக்க வேண்டும். அவள் பார்வையிலும் உடலசைவுகளிலும் சரியான துடுக்குத்தனம். ”சரியான வாய்” என்று பரவலாக அவளைப்பற்றி அபிப்பிராயம். ஆனாலும் டக்கென்று ஒட்டிவிடுபவள். நான்கைந்து நாட்களாக அவளுடைய கண்கள் தன்னைக்கவனிப்பதை வெரோனிக்கா உள்ளுணர்ந்தாள். எல்லோரிடமும் இருந்து ஒதுங்கியே இருக்க நினைத்திருந்தாள். யாரிடமும் பெரிதாகப்பேச்சுக்கொடுப்பதில்லை, கேட்ட கேள்விக்குமட்டும் பதில். யாரும் எதுவும் கேட்பதில்லை. பொறுப்பாளர் மட்டும் அழைத்து வேலை சொல்லுவாள் அல்லது அறிக்கை பற்றி ஏதாவது கேட்பாள். மற்றபடி மெடிக்ஸ் எப்போதும் வேகமாக இயங்கிக்கொண்டிருக்கும். மன்னார் களமுனைகள் சண்டை நடந்துகொண்டிருப்பதால் தட்சிணாமருதமடுவில் இருந்த மெடிக்ஸ் களமுனையின் பிரதான சிகிச்சையிடமாக மாறியிருந்தது. வெரோனிக்கா ஒரு தாதியைப்போல வேலை செய்துகொண்டிருந்தாள். உடலை அங்கே நிகழச்செய்தாலும் ஆன்மாவை ஏழு கடல் தாண்டி எங்கோ மறைத்து வைத்து விட்டு, தன்னைத் தனிமைப்படுத்துவதிலேயே குறியாகவிருந்தாள். செந்தழல் மணலாறில் வீரச்சாவடைந்த பிறகு யாருடனும் ஒட்டுவதில்லை என்ற நினைப்பிலிருந்தாள். மணலாறு இவளுடன் பயிற்சி பெற்றவர்களில் பாதிப்பேரைக்கொண்டு போய்விட்டது. முன்னேறிய இராணுவ அணிகளை பழைய நிலமைக்குத் திருப்ப அன்றைக்குப் பதினைந்து பேரைக்கொடுக்க வேண்டியிருந்தது. போதாத குறைக்கு, தண்டனை வேறு வந்து சேர்ந்தது. செந்தழலின் நினைப்பு அடிக்கடி அடி நெஞ்சைப் பிசைந்து அழவிடும். இனியும் இதுதான் நடக்கப்போகிறது. எல்லாத்திசைகளிலும் யுத்தம் சதிரைத்தொடங்கியாயிற்று, தண்டனை முடிந்ததும் மீண்டும் படையணிக்குத்திரும்ப வேண்டும். அங்கேயும் இனிப் புதுமுகங்களே அதிகம் தட்டுப்படும். யாருடனும் ஒட்டுவதில்லை. தண்டனை முடிந்ததும் தாமரையை ஒருமுறை போய்ப்பார்த்துவிட்டு படையணிக்குத் திரும்பவேண்டும். அந்த ஏழுகடலுக்கு

அந்தப்பக்கம் தாமரை மட்டும்தானிருந்தாள். மற்றபடி வெரோனிக்கா தனித்திருப்பதை நிம்மதியாக உணர்ந்தாள். அல்லது அதுவொரு பெருத்த நிம்மதி என்று தனக்குச் சொல்லிக்கொடுத்து மனதை நம்பச்செய்திருந்தாள்.

ஆனால் அந்தத் துடுக்குப்பெண்ணின் கண்கள் சீண்டிக்கொண்டேயிருந்தன. சிரித்தாள். “பேரென்னப்பா?” “சாப்பிட்டாச்சோ?” “எந்த இடம்?” “சோதியா படையணியோ மாலதியோ?” என்னத்துக்கு பணிஸ்மெண்ட்?” “கதைக்க மாட்டீரோ?” நேரம் தவறாமல் வந்து நின்றாள். “நீர் வேதக்காரப் பிள்ளையோ?” இது யாரிடமும் விசாரித்து அறிந்திருக்க கூடியதல்ல. பொறுப்பாளருக்கு கூட இயக்கப்பேரும் படையணியும் குற்றமும் தண்டனைக்காலமும், தகட்டு இலக்கமும்தான் தெரிந்திருக்க வாய்ப்புள்ளது கிறிஸ்தவ பெண் என்பதற்குரிய எந்த ருசுவையும் அங்கே வெரோனிக்கா வெளிப்படுத்தினாளில்லை. பொட்டு வேறு வைத்துக்கொள்கிறாள். தாமரை பழக்கி விட்டதில் அதுவுமொரு முக்கிய பழக்கம். எப்போதும் ஒட்டுப் பொட்டுப் பக்கற் ஒன்று வைத்திருப்பாள்.
“என்னெண்டு சொல்லுறீர்?”
“பாத்தால் வேதக்காரப் பிள்ளைபோலத்தான் இருக்கு, மேரி மாதா சிலையைப்போல. நல்ல அமுத்தமான கண்குனிஞ்ச எண்ணை வடியிறமுகம். மெல்லிய கருணை முடிஞ்சு சாதுவா சிரிக்கிற மாதிரியும் இருக்கும், புருவம் சரியான அடர்ந்தி இல்லை.அதுதான் கேட்டன். என்னோடையும் ஒரு பிள்ளை படிச்சவள் மேரி அனுசியா எண்டு,உம்மளைப்போலத்தான் இருப்பாள்”
“இல்லை நான் கிறிஸ்ரியன் இல்லை” வெறுமையைக் குரலில் சிக்கனமாகச் சொற்களை வரவழைத்துச்சொன்னாள்.
“பொய் சொல்லாதையும்”
“நான் ஏன் உம்மளிட்ட பொய் சொல்லோணும், வேலை செய்ய விடும்” வெட்டினாள். அவள் புறக்கணிக்கும் வெரோனியின் சொற்களை தன்னுடைய சிரிப்பை அனுப்பி அதனுள் புதைத்து மறைத்தாள். அவள் அதைப்பொருட்படுத்தப்போவதில்லை என்பதை முன்பே தீர்மானித்திருந்தாள்.
“அப்ப நீர் சைவமோ?”
“ஓம்” வெரோனிக்காவால் அவளுக்கு பதில் சொல்லிக்கொண்டிருக்கும் மனதினைப் பிடித்துக்கட்ட முடியவில்லை. அவளிடம் ஏதோ இருந்தது. சொற்களை இவளனுமதி இல்லாமலே பறித்துக்கொள்ளக்கூடிய ஒன்று.
“அப்ப ஒரு தேவாரம் படிச்சுக்காட்டும்”
“உமக்கென்ன விசரோ ஏன் இப்பிடி எல்லாம் கேக்கிறீர் பேசாமல் போம், இல்லையெண்டா பொறுப்பாளரிட்ட சொல்லுவன்”
“நீர் ஒரு தேவாரம் படிச்சுக்காட்டும், பிறகு உம்மடை பக்கம் கால்- கை கூட வைக்க மாட்டன்.” உண்மைதான் தான் நினைப்பதைப்பறித்துக் கொள்ளும் ஆற்றல் மார்கழிக்கு இருக்கத்தான் செய்தது. எனினும் அவள் தன்னைக் கண்டுபிடித்துவிடக்கூடாது என்பதற்காக ஏதாவது செய்து விடவேண்டும் என்று தோன்றியது. கோளறு பதிகத்தைத் தெரிவு செய்தாள். உள்ளூர பழைய நினைவுகள் நீர்பட்ட வேர்களைப்போல நுண்ணியளவில் தளைத்து எழத்தொடங்கின. “பியந்தைக்கார்ந்தாரம்” நாவில் இசையை நெடுநாட்கள் கழித்து கொண்டுவந்து இருத்தியது. வேர்கள் வேகமாகத் தளைக்கத்தொடங்கின. உண்மையில் தான் யாருடனும் கதைக்கவோ அழவோ பாடவோ விரும்பிக்கொண்டிருக்கிறேனா? என்று கேட்டுக்கொண்டாள். ஆழ்மனம் தனக்கு அறிவிக்காமல் இன்னும் எத்தனை தீர்மானங்களில் இருக்கிறது என்று தெரியாமல் குழம்பினாள். உண்மையில் தான் பாடவிரும்பவில்லை என்று நினைத்துக்கொண்டுதான் தொடங்கினாள்.
”வேயுறு தோளி பங்கன்விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறுதிங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே.”
“நல்ல குரலப்பனே உமக்கு, சங்கீதமோ எடுத்தனீர்?”
“இப்ப நம்புறீர்தானே? போம் பேசாமல்”
“சரி நம்புறன், போறன்” சிரித்துக்கொண்டே பின்னலில் சொருகியிருந்த மெல்லிய கிளிப்புக்களை கழற்றி கேசத்தை அவிழ்த்துக்கொண்டே எழுந்து போனாள். ஆந்த சிரிப்பும் பின்னலை அவிழ்த்ததும் இணைந்து ஒரே கணத்தில் நிகழ்ந்ததைப்போல வெரோனிக்காவுக்குள் இறங்கி வெளியேறிச்சென்றன.

இவளிடம் கவனமாகவிருக்கவேண்டும். மனத்தின் பிறிதொரு இரகசியமான பகுதியில் இருந்து தகவல் சொல்லப்பட்டது. அன்றைக்கு இரவு அறிக்கைக் கொப்பியை எடுத்துக்கொண்டு மரக்குற்றி ஒன்றில் இருந்து எழுதத்தொடங்கும் போது மீண்டும் அவள் அங்கே வந்தாள். “நச்செள்ளை பொறுப்பாளர் வரட்டாம்” அவளை சட்டை செய்யாத பாவனையில் எழுந்து நடந்து போனாள். “பிள்ளை நீரும் மார்கழியும் காலமை வெள்ளண காட்டுக்க போய் காவுகட்டிலுக்கு கொட்டனுகள் வெட்டிக்கொண்டு வரோண்ணும். நூறு தடி எண்டாலும் வேணும். மற்றப்பிள்ளையள் உரப்பை தைப்பினம். காலமை வெளிக்கிடுங்கோ களப்பகுதியளுக்கு கொண்டு போய் குடுக்கோணும். வெரோனிக்கா தலையாட்டிவிட்டு வந்தாள். அவள் பின்னாலேயே தொற்றிக்கொண்டு வந்தாள். “நான் வேளைக்கு எழும்பிடுவன் வந்து எழுப்பட்டோ?” “இல்லை வேண்டாம் நான் நாலுமணிக்கே எழும்புவன்” “அப்பச்சரி” போய் விட்டாள்.

மன்னார் களமுனைகளில் சண்டை உக்கிரமாகிக்கொண்டு வந்தது. இராணுவ நிலைகள் முன்னேறிக்கொண்டே வந்தன. காயப்பட்ட போராளிகளை தூக்கிவருவதற்குரிய காவுகட்டில்கள் நிறையத்தேவைப்பட்டது. இரண்டு கட்டைகளை வெட்டி உரப்பையினுள்ளோ சாக்கினுள்ளோ இருமருங்கிலும் இணைத்து தைக்க வேண்டும். காவு கட்டிலுக்கு பாரமில்லாத அதேநேரம் வலிமையான நேரான கொட்டன்கள் தேவைப்படும்.வெரோனிக்கா கோல்சரையும் துவக்கையும் கட்டிக்கொண்டாள். தண்ணீர் போத்தல்களை நிரப்பிக்கொண்டாள். இரண்டு கீறீம்கிறாக்கர்கள் மதிய உணவுக்கேன



ஓவியம் - Egon Schiele

எடுத்துக்கொண்டாள். அவள் காலையில் சாப்பிடுவதில்லை. பொறுப்பாளர் இருவரையும் அழைத்து காட்டுக்குள் ஒரு கண்வைக்கச்சொன்னார் மல்லாவிக்கு சமீபமாக நான்கு ஆழ ஊடுருவும் ராணுவ அணிகளை சுற்றி வளைத்து முடித்திருப்பதாக செய்திவந்திருந்தது, காட்டுக்குள் இருக்கும் அணிகளும் முகாம்களும் அவதானமாக இருக்கச்சொல்லி அறிவுறுத்தியிருந்ததைச்சொன்னாள். இருவரும் தலையாட்டி விட்டு புறப்பட்டனர். ஒரு காட்டுக்கத்தியும், சாதாரண கொடுவா கத்தியொன்றும் தரப்பட்டது. வெரோனிக்கா பேஸை விட்டு இறங்கி முன்னால் நடந்து போனாள். மார்கழி விசிலடித்துக்கொண்டே தொடர்ந்து வந்தாள். அவளிடம் ஒரு வோக்கியை பொறுப்பாளர் கொடுத்திருந்தா. அது அடிக்கடி வெட்டி வெட்டி இரைந்தது. அவளுடைய விசில் சத்தம் இவளைச்சீண்டப்போகின்றாள் என்பதற்கான முத்தாய்பான அறிவிப்பு போல்தானிருந்தது."தேவை இல்லாம இவளைக்கண்டு பயப்பிடாதை, பதட்டப்படாதை" உள்ளுணர்வு அருட்டிக்கொண்டிருந்தது. கத்தியின் கூரை தடவிப்பார்த்துக்கொண்டே நடந்தாள். சற்று மழுங்கியிருந்தது. எங்காவது கல் தென்படுகிறதா என்று பார்த்துக்கொண்டே மரங்களிடையே கொடிகளைகளை விலக்கிக்கொண்டும், வெட்டிச்சாய்த்துக்கொண்டும் நடந்து சென்றாள்.

"இஞ்ச இப்பிடி உம்மெண்டு வந்தால் வேலை செய்யேல்லாது"

"கதைச்சுக்கொண்டு நிண்டால்தான் வேலை செய்யேலாது, கத்தி கூர் காணாது கல்லு ஏதாவது கிடந்தால் பாரும் தீட்ட."

"ம்ஹ்ம் நான் இரவே கருங்கல் இடிச்சு கொண்டு வந்திட்டன், கத்தி கல்லிலை தீட்டுறேல்ல மரத்திலை தீட்டுறது, எங்கையாவது காஞ்ச மரமிருந்தால் பாக்கோணும்" பொலித்தீன் பை ஒன்றைக்காட்டினாள், கறுப்பாக- மினுமினுப்பாக கருங்கல் துகள்கள். அவளே கட்டையொன்றைக்கண்டு பிடித்து கத்திகளைத்தீட்டினாள். ஏழுமணிக்கு மேலே மரங்களைத்தெரிவு செய்து ஏறி கட்டைகளை வெட்டிச்சாய்க்கத்தொடங்கினார்கள். தூரத்தில் ஷெல் சத்தங்கள் கேட்டன.ஆட்லறிகள். பிறகு மோட்டார்கள். கீழே கழட்டி வைத்திருந்த கோல்சர்களிலும் துவக்குகளைலும் கண் வைத்துக்கொண்டே வெட்டினார்கள். காட்டின் நிழற்செறிவுக்குள் பரவியிருந்த வெக்கை இருவரையும் வேகமாகக் களைக்கச் செய்து கொண்டிருந்தது. மார்கழி ஆச்சரியமாக மௌனமாக வேலை செய்தாள். கைக்கும் கத்திக்கும் அசாதாரண பிணைப்பையும் லாவகத்தையும் கொண்டிருந்தாள். காறில் எழுந்து கத்தி மரக்கொப்புகளை துண்டு போட்டு, சிராய்த்துக் கொப்பிலிருந்து கொட்டன்ளை வெட்டி விழுத்திக்கொண்டிருந்தது வெரோனி ஒரு கொட்டனை வெட்டி முடிப்பதற்கும் அவள் மூன்று கொட்டன் என்ற கணக்கில் வேலை நடந்தது.

"நீர் எந்த இடம்?" ஒரு அளவுக்கு மேலே அந்தக் கனதியை வெரோனியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அவள் பதிலுக்கு ஏதும் சீண்டலாகவோ குத்தலாகவோ பதில் சொல்வாள் என்று எதிர்பார்த்துக் கொண்டே தான் கேட்டாள். ஆனால் மார்கழி அவள் பேச்சுக்கொடுக்கட்டும் என்று காத்திருந்தவள் போல ஆர்வமாகப் பதில் சொன்னாள்.

"நான் முத்தையன் கட்டு"

"எப்ப பிடிச்சவை? எந்தப்படையணி இப்ப?"

மார்கழி பெரிதாகச்சிரித்தாள் "என்ன பிடிச்சவையோ? நான் இணைஞ்சனான்"

"எப்ப?"

"இப்பத்தான் கிட்டடில, ஒரு பத்துவருசமிருக்கும்"

"பத்துவருசமோ? உமக்கு எத்தினை வயசு?"

"இருபத்தாறு"

"பொய் சொல்லுறீர்?"

"இதென்னப்பனே, பாத்தால் தெரியேல்லையோ"

"அப்பிடி இல்லை இயக்கத்திலை சேர்ந்து பத்து வருசமெண்டால் எத்தின வயசிலை சேர்ந்தனீர்?"

"பதினைஞ்சு, பள்ளிக்கூடத்திலை பிரச்சாரத்துக்கு வந்த அக்காமாரோட ஏறிட்டன்" சிரித்தாள்.

"உம்மைப்பிடிச்சதோ?"

"ம் "

மாலை வரை கதையளந்தார்கள். வெரோனிக்கா இறுக்கத்திலிருந்து தளர்ந்து ஆர்வமாகியிருந்தாள். ஆயினும் சொந்த விடயங்களை பகிர்ந்துகொள்வதில் அவளுக்கு நாட்டமிருக்கவில்லை. சொன்ன பொய்யினை ஒரு இரகசியமாக மாற்றிப்பாதுக்காக்க விரும்பினாள். அந்தப்பொய்யின் பின்னால் சொந்த விடயங்களை மறைத்துவைத்தாள். சொந்தப்பேர் "தாமரை" என்று சொல்லி வைத்தாள். இயக்கத்திற்கு பிடிக்கப்பட்ட பிறகு உள்ள கதைகளில் அவள் எந்த இரகசியத்தையும் உருவாக்கிக்கொள்ள விரும்பவில்லை. அவற்றைப்பகிர்ந்து கொள்ளவே விரும்பினாள். தண்டனைக்குக் காரணத்தைச் சொல்லத்தொடங்கினாள்.

மணலாறு முன்னணி அரங்கில் பதினைந்து பேர் கொண்ட தன்னுடைய அணிக்கு தலைமை தாங்கிச்சென்றிருந்தாள், அதுவொரு திடீர் தாக்குதல். எனினும் போராளிகள் இரண்டு பெரிய பட்டாலியன்களை எதிர்கொண்டனர். செந்தழல் கனரக ஆயதங்களைத்தாங்கியிருந்தாள். நிலையெடுத்திருந்த நிலம் கொஞ்சம் சதுப்பு. வேகமாகக் காலால் முன்னேற முடியாது. இராணுவம் டாங்கியொன்றை இறக்கி அதனைத்தொடர்ந்து முன்னேறியது.கனரக ஆயுதங்களை வைத்திருப்பவர்களைச் சதுப்பைக்கடந்து நிலையெடுத்து டாங்கியை முடிக்குமாறு கட்டளை வந்தது. செந்தழல் யோசிக்காமல் தன்னுடைய ஆர்.பி.ஜி யினைத் தோளில் ஏற்றிக்கொண்டு பெரிய மரமொன்றின் கீழே நிலையெடுத்திருந்தாள். டாங்கி நகர்ந்து முன்னால் வராமல் தூரத்திலிருந்து சுட்டு மரச்செறிவுகளைச் சாய்த்துக்கொண்டிருந்தது. செந்தழல் தான் மறைந்திருக்கும் இடத்தை டாங்க்கோ அதற்கு துணையாக பரவியிருந்த ராணுவத்தின் இலக்கிற்கோ அசமந்தம் காட்டாமல் பொறுமையாக மறைந்திருந்தாள். வெரோனிக்கா கட்டளைகளைக் கொடுத்துக்கொண்டே செந்தழலைத் தேடிக்கொண்டிருந்தாள். வோக்கியில் "செந்தழல்... செந்தழல்" என்று கத்திப்பயனில்லை.

செந்தழல் டாங்கியிலிருந்து கண்களை எடுக்காமலிருந்தாள். ஆர்.பி.ஜின் தாக்கு தூரத்துக்குள் அது நுழைந்து விட்டால் அதை நொருக்கி விடலாம். அருகில் 'லோ' ஒன்றுடன் நிலையெடுத்திருந்த ஆண் போராளிக்கு முன்னால் செல்லும்படி சைகை செய்தாள். ஆர்.பி.ஜியை விட லோவிற்கு டாங்கியைச் சீர்குலைக்கும் சக்தி அதிகம். அதோடு அது குறித்துத் தாக்கக் கூடிய றொக்கட் வகை லோஞ்சரைக்கொண்டிருந்தது. கண் காட்டினாளேயொழிய அந்த டாங்கியைத் தான்தான் முடிக்க வேண்டும் என்று நினைத்தாள். அவன் மரங்களுக்குள்ளால் பதுக்கிக்கொண்டு போக இவளும் பதுங்கினாள். டாக்கியும் சரி ராணுவமும் சரி இலக்கில்லாமல் குண்டுகளை பொழிந்துகொண்டிருந்தன. ஷெல் வேறு அடிக்கத்தொடங்கி விட்டார்கள். டாங்கி மெது மெதுவாக முன்னேறினாலும் அது முன்னேறும் ஒவ்வொரு சாணும் போராளிகளுக்கு பேரிழப்பிற்கான சகுனத்தை நெருக்கிக்கொண்டிருப்பது போலத்தான். அந்த லோ தாங்கிய போராளி தோளில் காயப்பட்டான். யாரோ ஒரு ராணுவ வீரனின் கலிபர் குண்டு தோள்பட்டையைச் சிதைத்து விட்டிருந்தது. துடித்துக்கொண்டிருந்தான். செந்தழல் அவனருகில் போய் அவனை இழுத்து மரமொன்றில் சாத்தி விட்டு ஆர்.பி.ஜியை மீண்டும் முதுகில் கழற்றிக் கொழுவி விட்டு. 'லோ'வை எடுத்து டாங்கிக்கு இலக்கு வைத்தாள். சரியாக அதனுடைய செயின்கள் இரண்டுக்கு நடுவில் தாக்கி டாங்கி சீர்குலைந்தது. போராளிகள் ஆரவாரம் செய்தார்கள். அப்போது லோ வந்த திசை நோக்கிச் சரமாரியாகச் சுடத்தொடங்கினார்கள். திறந்த சூட்டுக்கான உத்தரவை அவர்களுடைய கொமாண்டர் பிறப்பித்திருக்க வேண்டும்.அவனுக்கு ஒரு டாங்கியை இழந்திருப்பது சாதாரணமில்லை. செந்தழல் காயப்பட்ட போராளிகளை அப்புறப்படுத்தச்சொல்லி வோக்கியில் வெரோனிக்காவிற்கு அறிவித்தாள். வோக்கியை வைப்பதற்கு முன் இராணுவத்தின் ஒரு ஆர்.பி.ஜி இவள் நிலையெடுத்திருந்த பாலைமரத்திற்கு அருகில் வந்து வெடித்தது. அதன் நெருப்பிலிருந்து சிதறி வந்த இரும்புத்தணல் துண்டொன்று செந்தழலின் இடுப்பை ஊடுருவி மற்றப்பக்கமாக வெளியேறியது.

பதினைந்து உடல்களையும் ஆயுதங்களையும் கை விட்டு இராணுவம் பழைய நிலைகளுக்குத் திரும்பியது. போராளிகளின் பக்கம் செந்தழல் உட்பட நான்கு பேர் வீரச்சாவு. செந்தழல் வீரச்சாவடைந்தது சொல்லப்பட்டதும் வெரோனிக்கா உடைந்து போய் அவளைத் தேடி வந்தாள். அதற்குள் செந்தழலின் உடல் கொண்டு செல்லப்பட்டாயிற்று, சில பெண்போராளிகள் இராணுவத்தினரின் உடல்களை எடுத்து வந்து பெரிய தறப்பாளின் மேல் அடுக்கினர். அழுது கொண்டே வோக்கிகளில் தன்னுடைய குழுவிலிருக்கும் போராளிகளை நிலைகளுக்குத் திரும்புமாறு அறிவித்தபடி நடந்தவளின் கால்களில் இராணுவவீரன் ஒருவனின் சப்பாத்துக்கால் இடறியது. குனிந்து பார்த்தாள் குடல் பகுதி வெளியே தள்ள சோர்ந்து போயிருந்தது உடல். ஏதோ கோபம் உந்தித்தள்ள இடறிய அவனுடைய காலைத் தன் காலால் ஒரு உதை உதைந்து விட்டுக் கடந்து சென்றாள்.

செந்தழலின் இறுதியஞ்சலிக் கூட்டமும் வித்துடல் விதைப்பும் விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் நடந்தது. முடிந்ததும் வாகனத்திற்காகத்

துயிலுமில்லத்திற்கு முன்பிருந்த தேக்கங்காட்டில் சில போராளிகளுடன் காத்திருக்கும் போது, ஒரு போராளி அவளிடம் கடிதமொன்றைக் கொண்டு வந்து கொடுத்தாள். விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தாள். ஏன் என்று தெரியாமல் விசாரணைக்குச் சென்ற பொழுது இவளுடைய படையணியின் தளபதியும், இவளுடைய பொறுப்பாளரும் மற்றுமொரு படையகப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த இளம்போராளி ஒருவனும் இவளை விசாரித்தார்கள்.
இவளுடைய பொறுப்பாளர்.

“லெப்டினன்ட் நச்செள்ளை, களத்தில் இராணுவ உடலொன்றிற்கு காலால் உதைஞ்சிருக்கிறீங்கள், மானுட அறத்தின் படியும் அமைப்பின் நடைமுறைகளின் படியும் அது தவறான நடத்தை. அதாலை உங்கட ராங் இரண்டாம் லெப்டினன்ட் ஆகக் குறைக்கப்படுவதோட, மூண்டு மாசம் நீங்கள் மெடிக்ஸ்சில பணிஸ்மெண்ட் செய்ய வேண்டி இருக்கும். ஏதாவது ஆட்சேபணை இருந்தால் சொல்லலாம்.”
“அவங்கள் எங்கடை ஆக்களின்ர பொடிய எடுத்தால், கீறிக் கிழிச்சு நிர்வாணமாக்கி ரோட்டுரோட்டாக் கட்டி இழுத்துச் சிதைச்சுத்தான் எங்களிட்ட தாறாங்கள்…”
வெரோனிக்கா முடிக்க முதல் அருகில் இருந்த தளபதி இவளை இடைமறித்து “இஞ்ச பாரும் பிள்ளை, நாங்கள் ராணுவம் இல்லை. நாங்கள் விடுதலைப்போராளியள், இராணுவ எதேச்சாதிகாரக் கட்டமைப்புக்கும் விடுதலைக்காகப் போராடுற எங்களுக்கும் இதுதான் வித்தியாசம், அதாலை நீங்கள் இந்த விசயத்தைச் சரியாய் விளங்கிக்கொள்ளவேணும், என்னதான் கோவம் கவலை இருந்தாலும், நிதானமில்லாமல் நடக்கக்கூடாது. உங்கடை அறிக்கையள் செயற்பாடுகளைப் படிச்சனான். பொறுப்பாளரும் சொன்னவா. இணைக்கப்பட்டுக் குறைஞ்ச காலத்திலை பயிற்சியிலையும், பரீட்சையள்ளையும், களமுனையிலும் சரி உங்கட செயற்பாடுகள் திருப்தியாய் இருக்கு எண்டதாலைதான், ஒரு ராங் மட்டும் குறைச்சு மெடிக்ஸ்சுக்கு அனுப்புறம். விளங்குதோ?”
”அப்ப என்னை விருப்பமில்லாமல் பிடிச்சுக்கொண்டு வந்து இயக்கத்திலை சேத்தது எந்த மானுட அறத்தில வரும்?” வாய் உன்னியது, மானிட அறம் என்ற அந்த வார்த்தை அவர்களிடமிருந்து மிகுந்த செயற்கைத்தனத்துடன் வெளிப்பட்டதை நெஞ்சு உணர்ந்து அந்தரம் குரலை இறுக்கியிருந்ததை மார்கழியிடம் நினைவு கூர்ந்தாள்.
”அவா சொன்னவா எண்டு நீரும் தலையாட்டிப்போட்டு வந்திட்டீரோ?” மார்கழி சிரித்துக்கொண்டே கேட்டாள்.
“வேற என்ன செய்யிறது?”
”சரி விடுமப்பா, சண்டேல்ல நிக்கிறத விட இது பறவாயில்லைத்தானே?”
“ஹ்ம்ம், சரி நீர் என்ன செய்தனீர்?”
“காதலிச்சனான், அதுதான் பணிஸ்மெண்ட்”
“முந்தித்தானே காதலிச்சா பணிஸ்மெண்ட், இப்ப என்ன?”
“அது ஒரு பெரிய கதையப்பா?”
“என்ன கதை, லைன்ல நிக்கேக்க ஆமிக்காரர் ஆரையும் விரும்பீட்டீரோ?”
“அடியே, நீ சரியான ஆள்தான் போல, அமசடக்கி!”
அப்ப என்னெண்டு சொன்னால்தானே தெரியும்.
“அப்ப நான் சோதியா படையணில இருந்தனான், வெத்திலைக்கேணிக்குக் கிட்ட தலைவற்ற முகாமொண்டு இருந்தது அதால கடல் பக்கம் இருக்கிற காட்டுக்கு எங்கடை பிள்ளையள்தான் பாதுகாப்புக் குடுத்தவளவை. நான் ஒரு நாலு சென்ரிக்குப் பொறுப்பாய் இருந்தனான். வெத்திலைக்கேணி பக்கத்து காடுகள் சரியான அடர்த்தி,சும்மா உள்ளுக்குபோய் வெளியிலை வரேல்லாது. நான் அண்டைக்கு ஒரு இரவு சென்ரியிலை நிண்டனான். சுடுதண்ணிப் போத்தில் ஒண்டு எப்பவும் என்னோட இருக்கும். என்னாலை சாப்பிடாமை கூட இருக்கேலும் ஆனால் தேத்தண்ணியில்லாமல் இருக்கமாட்டன். அண்டைக்குக் கொஞ்சம் கூதலும். அண்டைக்கு இரவுக்கு மட்டும் நாலஞ்சு தேத்தண்ணி போகப்போகுதெண்டு நினைச்சுக்கொண்டு இரவொரு பதினொரு மணி போல தேத்தண்ணி ஒண்டு போட்டு குடிச்சுக்கொண்டு கட் சத்தத்தை கேட்டுக்கொண்டு குத்தியொண்டிலை சாஞ்சு கொண்டு இருந்தன். துவக்கிலை பிடிக்க சில்லெண்டு இருந்தது. இரும்பு குளிருக்கு ஐஸ்கட்டியா மாறிடுமெல்லோ, நான் துவக்கக் கைக்கு எட்ட வச்சிட்டு, தேத்தண்ணிப் பேணியை உள்ளங்கைக்க வச்சு உறுட்டிக் கையை வெதுவெதுப்பாக்கிக்கொண்டு ஏதோ பாட்டொண்டும் முணுமுணுத்துக்கொண்டு இருந்தனான். திடீரெண்டு



ஓவியம் - Egon Schiele

கொஞ்சம் தள்ளி ஆரோ வெடி வச்ச மாதிரிச் சத்தம், ஆனால் கேட்ட மாத்திரத்திலையே அடங்கீட்டுது, ஏதும் பிரமையாய்தான் இருக்குமோ எண்டு யோசிக்க எட்ட நிண்ட பிள்ளையள் அக்கா என்ன சத்தமெண்டு வோக்கிலை கேட்டாளவை, எனக்கு ஆரோ காட்டுக்க நிக்கினம் எண்டு விளங்கீட்டு டக்கெண்டு பிள்ளையளுக்கு அலேட் ஒண்டு அடிச்சன். நானும் சென்ரியைவிட்டுவிலகி மரமொண்டுக்குப்பின்னாலை

பதுங்கினன். கனநேரம் அசமந்தம் இல்லை. ஒரு இருபது நிமிசமிருக்கும் பிறகும் டப் டப் எண்டு ரண்டு சத்தம் நான் சத்தம் வந்தபக்கம் மெல்ல மெல்ல இருட்டுக்க போனன். அப்ப ஆரோ கதைக்கிறது கேட்டுது. தமிழ்ழ தான் கதைச்சினம். நான் பிள்ளையளைக் கூப்பிட்டு விசயத்தைச் சொல்லி எந்தப் பக்கம் எப்பிடி வரோண்ணும் எண்டும் சொன்னன். சொன்ன மாதிரியே அவை எதிர்பார்க்காத மாதிரிப் பிள்ளையள் பாய்ஞ்சு ஆக்களை அமத்தினாளவை. பாத்தால் இயக்கப்பெடியள் ரண்டு பேர். சிவில்தான். பெலிட் கட்டி கையில ஒரு ரி 56 வைச்சிருந்தவ. பிள்ளையள் பாஞ்சதும் ஆக்கள் வெருண்டடிச்சு “நாங்கள் இயக்கம் நாங்கள் இயக்கம்” எண்டு கத்திச்சினம் எனக்குச் சிரிப்பு வந்திட்டு. “நீங்கள் இயக்கமண்டால் அப்ப நாங்கள் ஆர்?” எண்டு கேட்டுக்கொண்டு ஆக்களின்ர முகத்திலை லைட் அடிச்சன். ஒரு நடுத்தர வயசுகாரர் மற்றது சின்னப்பெடியன். அண்டைக்குத்தான் நான் அவரை கண்டது. என்னை வடிவாய் பாத்துக்கொண்டு நிண்டார். நான் பிள்ளையளைச் சொல்லி ஆக்களின்ர துவக்கப் பறிச்சிட்டு ஆக்களை இருத்தினன் , என்ன காட்டுக்க செய்யிறியள் எண்டு கேக்க. உக்குளுவான் அடிக்க வந்தனாங்கள் எண்டான் அந்த சின்னப்பெடியன். நாங்களும் அங்கை உக்குளுவான் அடிக்கிறானாங்கள். உனக்கு உக்குளுவான் தெரியும்தானே? முயல்மாதிரிக் கொஞ்சம் பெரிசு, வலு வேகமாய் ஒடும், ஆனால் என்ன ஒடிப்போய் பொந்துக்க தலைய மட்டும் நுழைச்சு இறுக்கிக் கண்ண மூடி தான் ஒளிஞ்சிட்டன் எண்டு நினைச்சுக்கொள்ளும். ஆள் எப்பவும் குண்டில வெடி வாங்கிறது அதால தான். நான் அவரிட்ட என்ன பேர் எண்டு கேட்டன். அவர் “திகழ்சீரன்” எண்டார். சின்னப்பெடியனுக்கு என்ன பேர் எண்டு கேக்க அவன் ’சின்னப்பெடியன்’ தான் பேர் எண்டான். பொறுப்பாளர் அப்பிடித்தான் கூப்பிடுறவர் எண்டான். நான் ஆர் பொறுப்பாளர் எண்டு கேக்க இவரைத்தான் அவன் காட்டினான். எனக்கு சிரிப்பு வந்திட்டு. அவற்ற தகட்டை வாங்கிப்பாத்தன். கேட்ட உடனை ஒண்டும் கேக்காமல் தந்திட்டார். ஆள் முதல் வெருண்டாலும் பிறகு என்னை கணக்கெடுக்காத மாதிரி நக்கல் பார்வையும் பதிலும். ராதா வான்காப்பு படையணிக்காறர்ட தகடு. பெரியாக்கள் தான். ஆனால் என்ர வேலையை நான் சரியாத்தான் செய்வன் எண்டு அவருக்குக் காட்டோணும் எண்டு நினைச்சன் தகட்டை வச்சுக்கொண்டு என்ர பொறுப்பாளருக்கு அடிச்சு விபரம் சொன்னன். பொறுப்பாளர் இவேன்ர பேரும் விபரமும் சொன்னதும் பதறிப்போய் ஆக்களை விடுங்கோ எண்டு சொன்னா. நான் ஆக்களுக்கு தேத்தண்ணி ஒண்டு போட்டு குடுக்கச் சொல்லிட்டு குடிச்சு முடிச்சதும் கொண்டுபோய் விடுங்கோ எண்டு பிள்ளையளிட்ட சொல்லிப்போட்டு என்ர சென்ரிக்கு வெளிக்கிட்டுப்போட்டன். அதுக்குப் பிறகு தலைவற்ற மீற்றிங் ஒருக்கா நடக்கேக்க ஆள் வரியுடுப்பெல்லாம் அடிச்சுக்கொண்டு வந்தார். என்னைக் கண்டதும் வந்து கதைச்சார். எனக்கு அவரைப் பிடிச்சுப்போச்சு எண்டு காட்டிக்கொள்ளாமல் நிண்டன். ஆள் அத்தனைக்கு என்ர விபரமெல்லாம் ஃபைலோட வாங்கி இருப்பார் எண்டு எனக்கு தெரியும். இருந்த இடம் அப்பிடி. எனக்கு ஃபைல் ஒண்டும் தேவையில்லை, ஆவரே எல்லாம் சொன்னார்.

அவர் பார்த்த பார்வைக்கும் கதைச்ச கதைக்கும் கடிதம் வருமெண்டுதான் நினைச்சன். ஆனால் அந்த மனிசன் எழுதவே இல்லை. இந்தாளைப் பாத்துக்கொண்டு நிண்டால் சரி வராதெண்டு நானே சும்மா நலம் விசாரிச்சுக் கடிதம் போட்டன். பதில் வந்துது. நான் விசாரிச்சதுக்கு மட்டும் சிக்கனமாய் பதில் எழுதி ஒரு கடிதம், உலகத்திலையே வன்வேட் ஆன்சர் எக்சாமுக்கு பதிலெழுதின மாதிரி எழுதப்பட்ட காதல் கடிதம் எங்கடை மட்டும்தான்.

பிறகொரே கடிதம்தான். நானும் ஒண்டும் சொல்லேல்ல, அவரும் ஒண்டும் சொல்லேல்ல, ரண்டு பேருமே பிடி குடுக்கிறதா இல்லை. ஒரு நாள் எனக்கு ஏதோ நெஞ்செல்லாம் பாரமாய் இருந்துது.... பின்ன “எனக்கு உங்களை விருப்பம்” எண்டு பத்து பக்கத்திலை கைப்பட, அவற்றை படமெல்லாம் தீட்டி அனுப்பினன். கடிதத்திலை கடைசில “எனக்கென்ன தருவீங்கள்?” எண்டு கேட்டு அண்டலைன் ஒண்டும் அடிச்சிருந்தனான். ஏழெட்டு நாள் கழிச்சு பதில் வந்துது.

“போராட்டத்திலை கலியாணம் எல்லாம் சரிவராது நிரந்தமில்லாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறம், சமாதானம் எப்ப எண்டாலும் உடையும், உடைஞ்சால் நீர் ஒருபக்கம் நான் ஒருபக்கம் துவக்கத் தூக்கிக்கொண்டு காட்டுற திசைக்குப் போகத்தான் வேணும். நீர் ஒரு பணிஸ்மெண்டோட ஒரு வருசத்திலை விலகலாம். அது சுலபம். நான் விலகிறதுக்கு கடிதம் குடுத்தாலும் என்னை அவ்வளவு சுலபமாய் விட மாட்டாங்கள் நான் இருக்கிற இடம் அப்பிடி, தெரியும்தானே? சும்மா ஆசையளை வளத்துக்கொள்ளாதையும். தமிழீழம் கிடைச்சால் பாப்பம்”

எண்டு எழுதி பின் குறிப்பு போட்டு “கடிதத்தோட குடுத்து விட்டிருக்கிறன்” எண்டு எழுதி அண்டலைன் அடிச்சிருந்தார். என்ன குடுத்து விட்டவர் எண்டு சொல்லு பாப்பம்?

-என்ன?

மார்கழி பதில் சொல்லாமல் தன்னுடைய பொக்கற்றுக்குள் இருந்து ஒரு சோடி பைக்கற் உடைக்காத பெரிய எவரடி பற்றியை எடுத்தாள் கூடவே கழுத்திலிருந்து சோடியாக ஒட்டப்பட்டிருந்த சயனைட் குப்பியையும் கழட்டிக் கைகளில் ஏந்திக்காட்டினாள்.

“இந்த குப்பியும் பற்றியும் தான்”

“சரி பணிஸ்மெண்ட் என்னத்துக்கு?”

“நான் கோவத்திலை துவக்கை லோட்பண்ணி பேஸிலை நிண்ட தென்னைக்கு சுட்டு, வட்டு பட்டுப்போச்சு”

“நம்புற மாதிரி இல்லை”

“ஓம் பொய்தான் சொன்னனான்”

.

***

யதார்த்தன் எழுதிக்கொண்டிருக்கும் ‘நகுலாத்தை’ நாவலின் ஓர் அத்தியாயம்.

# கதை காவுதல்



நீள்கயிறாய் இறங்கிய வெயில் பொட்டு தரை தடவியது.
கை நிறைய இருந்த பாம்பு
வளைந்து ஊரின் ஒட்டையில் புகுந்தது.
ஊறிய ஓலை நுனியில் துடிக்கும் வெளிறிய நீர் மொட்டை
உடைத்து ஊற்றி விழுத்தியது நீல நிறக் கதிர்.
ஆயிரம் கைகளின் நடுவில் ஓடும் ஆயுள் ரேகையை
மறித்துச் சொன்ன கதைகளில் தவழும் கிழவி
வளைந்து நடந்து நதியில் விழுந்தாள்.
ஊருக்கு ஒரு நதியும் ஒரு கிழவியும்
கதைகளைக் காவினர்.
ஓலைக்குள் செருகிய பாம்புக் கதைகளை நதியாய் வளைக்க
வெற்றுத் தினுசாய்த் துடிக்கும் மொட்டை
விழுத்திப்போனது
கயிற்றில் ஊர்ந்த பாம்புக்கதிர்.



• கஜ்சஜா

# “அவர்கள்”

பேசக் கூடிய இடத்திலிருந்து என்னை நீ அழைக்கவில்லை
தவிர்க்கப்பட வேண்டிய சொற்களையும்
காக்கப்பட வேண்டிய மவுனக் கணங்களையும்
அறுதியிட்டுச் சொன்ன பின்பே என்னை அவிழ்த்து விட்டாய்.
கைகள் கட்டப்பட்டே இருந்தன.
நீ தெரிவு செய்த வார்த்தைகளை நான் பேசப்போவதேயில்லை.
தனித்து, என்னைப் பிரித்தெடுத்த சங்கிலியில்
இன்னமும் பிணைக்கப்பட்டிருப்பவர்களுக்காகவும் நான் பேசப்போவதில்லை
நீ தொலைத்து விட்ட சாவியினால் மட்டுமே
இணைந்திருந்த அவர்கள் எப்போதோ மரணித்துவிட்டார்கள்.

நானே தோண்டி எடுத்த குழியிலிருந்து
எனக்கான மரணக்குறிப்பை எழுதியது போல்
அவர்களே அடுக்கிய கொள்ளிக் கட்டைகளில்
இருக்கும் அவர்களின் கதைக் குறிப்பு.



குறிப்புக்களைக் கொண்டு தேடவல்ல திசையிலும் கிடையா எலும்புகளை
எங்கிருந்து பொறுக்குவது?
ஈழம் என்பது தேசமல்ல
கதை.

தனிப்பட்ட தகவல்: உனக்கும் தெரிந்த எனக்கும் தெரிந்த “அவர்கள்” என்பவர்கள் யார் என்று நீ என்னைக் கேளாதே.


ஓவியம் - Egon Schiele

# உச்சரிக்க மறுக்கும் பெயரைக் கொண்டலைதலின்

அப்பிய கறுப்பு நிறமாய்
அகல விரித்த கண்களைக்  கொண்ட தலையுடன் நின்ற என் கைபிடித்து
அவன் கையில் சேர்த்த போது என் முகம் மறைத்தது ஏன்?

முகமூடியற்ற தலையைக்  கண்கொள்வதில்
கரைச்சல் இருந்திருக்கக் கூடும்.

யாருடைய சாவும் என்கையில் இல்லை.

தற்காப்பு வித்தை மட்டும் பழகி
தெருச்சண்டைக்குள் நுழையமுடியாது.

கடவுளின் தீட்டுத்துணியை மட்டும் காவித்திரிவேன்
என்பதில் என்ன தற்காப்பு?

மோப்ப நாயின் பாய்ச்சலில் மடியும் முன்னங்கால் படிவம்
கைப்பிடியில் தெரிந்தது.


முகர்ந்து கொள்ள முடியாத அழுகிய உடலின்
பக்கத்தைத் தாண்டும் வேளையில் வளையும் உன் உதட்டுசெருகலின்
மறைவு இடத்திலிருந்தும் எழுந்து நக்கியது
நீ உச்சரிக்க மறுத்த என் பெயர்.

நான்கு மூலைகளுக்குள்ளும் தனித்து விடப்பட்டு
எடுத்த புகைப்படத்தில்
மூலையை மட்டும் பார்த்த கண்ணைக் கொண்டு நீ அலையாதே

முகமூடியற்ற தலையைக் காணும் போது
கண்ணையாவது மூடிக் கொள்
கைபிடித்து அளையாதே.

# மரணம்

சந்தனி ப்ரார்த்தனா
தமிழில் - எம்.ரிஷான் ஷெரீப்



சிங்கள மொழியில் சிறுகதைகளையும், கவிதைகளையும் எழுதி வரும் எழுத்தாளரான சந்தனி ப்ரார்த்தனா ஒரு ஊடகவியலாளரும் ஆவார். தற்போது இலங்கையின் தொலைக்காட்சியொன்றில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகக் கடமையாற்றி வரும் இவரது இலக்கியப் படைப்புகள் விரைவில் தொகுப்புக்களாக வெளிவரவிருக்கின்றன.

சூரியன் நெருப்பாய் தகித்துக் கொண்டிருந்தது. அந் நெருப்பில் சுற்றுச் சூழலும் எரிந்து கொண்டிருந்தது. அவள் சுற்றி வரவும், கீழேயும் பார்த்தாள். தீப் பிடித்த நகரமானது, அவளை விடவும் கீழே, பாடசாலை மைதானத்தையும் தாண்டி, மற்றுமொரு பாடசாலைக் கட்டடத்தையும் கடந்து வியாபித்திருந்தது. தெருவில் வாகன நெருக்கடி. பாதசாரிகள் கடக்க மஞ்சள் குறுக்குக் கோடு. வாகனங்களின் ஹோர்ன் ஒசை. பாதையின் இருமருங்கிலும் பாடசாலைச் சீருடைகளணிந்த மனிதப் பிராணிகள். மஞ்சள் குறுக்குக் கோட்டருகே போலிஸ் அதிகாரியொருவர் கடமையிலிருந்தார். அவர் ஒரு கரத்தை உயர்த்தியதும் சடுதியாக விரைந்த ஒரு குழு தெருவைக் கடந்தது.

அவள் மேலே பார்த்தாள். தெளிந்த நீல ஆகாயத்தில் பறவைக் கூட்டமொன்று அரை வட்டத்தில் பறந்து கொண்டிருப்பதை அவள் கண்டாள். அவளது இடக்கைப் பக்கமாக வானத்தில் கண்ணைக் குருடாக்கும் விதத்தில் சூரியன் காய்ந்து கொண்டிருந்தது. அவள் அத் திசையைப் பார்க்காதிருக்க முயற்சித்தாள். அவள், அந் நகரத்துக்கு முதுகைக் காண்பித்து, பாடசாலையைப் பார்த்தவாறு நின்று கொண்டாள். தொடர்ந்து தனதிரு விழிகளையும் மூடிக் கொண்டாள்.

பறவைக் கூட்டம் தனது பறத்தலைப் பூர்த்தியாக்கி, அக் கட்டட உச்சிக்கு மேலால் ஆகாயத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. சரியாக அக் கணத்தில்தான் அப் பாடசாலையின் ஏழு மாடிக் கட்டடத்தின் உச்சியிலிருந்து எண்பது கிலோ மனித உடலொன்று பாடசாலை மைதானத்தின் மீது விழுந்தது.

*****

எங்கும் பேரமைதி நிலவியது. தலையுயர்த்திப் பார்க்கையில் கண்களைக் குருடாக்கி விடும் விதத்தில் சூரியன் காய்ந்து கொண்டிருந்தது. தரையில், பாடசாலைச் சீருடையால் மூடப்பட்ட, உருவமும் உயிருமற்ற ஒருடல். சூழவும் பரந்திருந்த சதைத் துணுக்குகள்.

திடீரென திகைப்பைப் பிரதிபலிக்கும் ஒசைகள் எழுந்தன. போர்த்தப்பட்டிருந்த அமைதியெனும் போர்வை அதனால் கலைந்தது. தொடர்ந்து அமைதியைக் குலைத்தவாறு ஒப்பாரி ஒசைகள் மேலெழுந்தன. ஆங்காங்கே கட்டடத்தின் ஒவ்வோரிடத்திலிருந்தும் வெளிறிய முகங்கள் கீழே நோக்கின. மைதானத்தை நோக்கி ஒடி வந்து, சடலத்தை விட்டும் சற்றுத் தள்ளி நின்று கொண்டார்கள் சில பார்வையாளர்கள். தொலைபேசி உரையாடல்கள் நிகழ்ந்தன. நகரத்தின் வாகன நெருக்கடியை ஊடறுத்தவாறு ஆம்புலன்ஸ் வண்டி வந்து நின்றது. படுக்கை வெளியே எடுத்து

வைக்கப்பட்டது. பயிற்றப்பட்ட கரங்கள் உயிரற்ற உடலைத் தூக்கி வைத்து போர்வையொன்றால் மூடின. ஆம்புலன்ஸ் வண்டி புறப்பட்டது. இன்னும் மைதானத்தில் காய்ந்து கொண்டிருந்தன இரத்தமும், சதைத் துணுக்குகளும்.

போலிஸ் வந்தது. மஞ்சளும், கறுப்பும் கோடுகளிட்ட பொலிதீன் கீற்றுக்களால் அந்த இடத்தை வளையமிட்டது. அவசரமாக அழுத்தப்படும் தொலைபேசி எண்கள். விடாது ஒலிக்கும் தொலைபேசிகள். எங்கும் தொடர்ந்தன தொலைபேசி உரையாடல்கள்.

இவ்வாறாக, பாடசாலைக் கட்டடத்தின் உச்சியிலிருந்து கீழே குதித்த மாணவி, பற்றியெரிந்து கொண்டிருந்த நகரத்தின் மீது பெற்றோலை ஊற்றியிருந்தாள்.

*****

“என்னோட தங்க மகளுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்கல… எப்பவும் போலத்தான் காலையில ஸ்கூலுக்குப் போனா… நேத்து நடனப் பயிற்சிக்கு ஆயிரம் ரூவா வேணும் அம்மான்னா. எங்கிட்ட இருக்கல.. அதனால நாளைக்குத் தரேன்னு சொன்னேன்… ஐயோ.. அதுக்கப்புறம் என்ன நடந்துச்சுன்னு எனக்குத் தெரியலயே.. ஸ்கூல்லருந்து என்னோட வேலைத்தளத்துக்குக் கூப்பிட்டுச் சொன்னதும்தான் எனக்கே விவரம் தெரிய வந்துச்சு.. ஐயோ…”

*****

“மத்தியானம்தான்… ஆமா… மிஸ் அவளைத் திட்டினாராம். அவள் ஒரு பிள்ளையோட ஆயிரம் ரூவாயைத் திருடிட்டாளாம்…”

“அவளுக்கொரு காதலனும் இருக்கானாம்ல…”

“நாந்தான் முதல்ல மைதானத்துக்கு ஒடிப் போனேன்… காணச் சகிக்கல… முகத்தோட ஒரு பக்கம் நசுங்கிப் போயிருந்துச்சு.. கண்களும் திறந்திருந்துச்சு…”

“ஐயோ… இந்தப் பிள்ளை தேடிக்கிட்ட வினை…”

“ஹேய்… அந்தப் பிள்ளை ஸ்கூலுக்கு மொபைல் ஃபோனொண்ணு கொண்டு வந்து அகப்பட்டாளா?”

“நிஜமா அந்தப் பிள்ளை காசு திருடியிருந்தாளா?”

“தெரியலை ஐயோ… தெரியலை”

“இப்படிச் செத்துப் போனவங்க பேயா அலைவாங்களாம்ல?”

“அது ஏழு நாள் ஈமச் சடங்குகளை ஒழுங்காச் செய்யலைன்னாத்தான்!”

*****

பாடசாலைக் கட்டடத்தின் உச்சியில், ஆகாயத்தை நோக்கியிருந்த மொட்டை மாடியில் ஒரு பழைய கதிரை. அதன் ஒரு கால் பாதத்தின் கீழே காற்றில் பறந்து சென்றிடா வண்ணம் வைக்கப்பட்டிருந்தது ஒரு கடிதம். அதில் இருந்தன இரண்டு வரிகளும், கண்ணீர்த் துளியொன்றும்.

நான் பணம் திருடவில்லை அம்மா..
என்னை மன்னியுங்கள்..!

*****

“சரி… மிஸ் சொல்லுங்க இன்னிக்கு பகல் என்ன நடந்துச்சுன்னு…”

“ஸ்கூல் நேரத்துக்குப் பிறகு வைக்கப்படுற புலமைப் பரிசில் வகுப்புல அந்த நேரம் நான் படிப்பிச்சுட்டு இருந்தேன். திடீர்னு ஜன்னலுக்குப் பக்கத்துல ஏதோ விழுறது போலக் கண்டேன். என்னன்னு ஜன்னலால எட்டிப் பார்த்தா…. ஐயோ என் உடலே சிலிர்த்துப் போயிடுச்சு. என்ன நடந்ததுன்னு சுய நினைவுக்கு வர்றதுக்கே எனக்கு கொஞ்சம் நேரம் எடுத்துச்சு. நான் மெதுமெதுவா படிக்கட்டுல இறங்கி அந்த இடத்துக்கு நடந்து போனேன். அங்கே இந்த மாலா மிஸ்ஸும், கீதா மிஸ்ஸும் முன்னாடியே வந்திருந்தாங்க. ஸ்கூல் பிள்ளைங்க கொஞ்சம் பேரும் வந்திருந்தாங்க. அவங்க முகங்கள்னா இப்ப நினைவுக்கு வரல. இந்த காசு திருடிய விஷயம் பத்தி எனக்கு ஒண்ணும் தெரியாது சார். அதை அந்த வகுப்புக்குப் பொறுப்பாயிருக்கும் ஜெயந்தி மிஸ்கிட்டதான் கேட்கணும்…”

“எங்க அந்த ஜெயந்தி மிஸ்? ஜெயந்தி மிஸ் சொல்லுங்க என்ன நடந்துச்சுன்னு..”

“நேத்து பின்னேரம் ஸ்கூல் விடப் போற சமயம் பன்னிரண்டாம் வகுப்புப் பிள்ளைகள் கொஞ்சம் பேர் என்னை சந்திக்கன்னு ஸ்டாஃப் ரூமுக்கு வந்தாங்க. வகுப்புல ஒரு பிள்ளையோட ஆயிரம் ரூபாவைக் காணலன்னு சொன்னாங்க. அதனால நான் அந்த வகுப்புக்குப் போனேன். போறப்போ ஸ்கூல் விடுற மணியடிச்சது. ’எல்லோரோட புத்தகப் பைகளையும் பரிசோதிக்கணும்… அதனால யாரும் போயிடாதீங்க’ன்னு உத்தரவிட்டேன். தொடர்ந்து வகுப்புப் பிள்ளைகளை வரிசையா நிக்க வச்சு அவங்களோட புத்தகப் பைகளைப் பரிசோதிச்சேன். இந்தப் பிள்ளை வரிசையின் கடைசில நின்னுட்டிருந்தா. கொஞ்சம் சஞ்சலத்தோட இருக்குற மாதிரித் தெரிஞ்சது… எப்படியோ அந்தப் பிள்ளையோட புத்தகப் பையிலிருந்து ஆயிரம் ரூபா கிடைச்சது.. ஆகவே நான் மற்றப் பிள்ளைகளை வீடுகளுக்குப் போகச் சொன்னேன். இந்தப் பிள்ளை அந்தக் காசு தன்னோடதுன்னே சொன்னா.. பிறகு நான் அந்த ஆயிரம் ரூபாவையும் அவகிட்டயே கொடுத்து வீட்டுக்குப் போகச் சொன்னேன்..”

“அப்போ இந்தப் பிள்ளைகள் எல்லோரும் ஏதோ மொபைல் ஃபோன் விவகாரம்னு சொல்றாங்க... அது என்ன மிஸ்?”

“நானும் கூட அந்த மாதிரியொரு கதையை இன்னிக்கு, இந்தச் சம்பவம் நடக்குறதுக்குக் கொஞ்சம் முன்னாடி கேள்விப்பட்டேன். ஆனா நான் புத்தகப் பையைப் பரிசோதிச்ச நேரம்னா அவகிட்ட எந்தவொரு ஃபோனும் இருக்கல...”

*****

இது எஃப்.எம் ரேடியோ. செய்தி குறுந்தகவல் சேவை. அசுப செய்திகளை உங்களிடம் முதலில் கொண்டு வருவது நாங்கள்தான். மேலும் மேலும் செய்திகளை உடனடியாகத் தெரிந்து கொள்ள தொடர்ந்தும் எம்மோடு இணைந்திருங்கள். மாலை ஆறு மணி, இரவு ஏழு மணி, இரவு எட்டு மணி ஆகிய நேரங்களில் செய்திகளை எமது தொலைக்காட்சி சேவையிலும் கண்டு களியுங்கள்.

*****

“பிள்ளை வீட்டுக்கு வந்து ஒண்ணும் சொல்லலையா அம்மா? ஸ்கூல்ல இப்படியெல்லாம் நடந்துச்சுண்ணு ஏதாவது?”

“ஐயோ இல்லை ஐயா... நேத்து வீட்டுக்கு வந்ததுமே தலை வலிக்குதுன்னு சொல்லிட்டுப் படுத்துகிட்டா... ஐயோ என்னோட மகள்... உடல் பருமன் அதிகமாயிடுச்சுன்னு எப்பவும் மன வருத்தத்தோட இருந்தா.. இப்போ நடனப் பயிற்சியெல்லாம் செய்றதால பருமன் குறைஞ்சிடும்னு அவளோட அப்பாவும் சமாதானப்படுத்தினார்...”

..........

“என்னது? திருட்டா? என் மகளா? ஐயோ என்னோட மகள் அப்படிப்பட்டவளில்ல... ஐயோ இது அவதூறு..” என்று கதறிய அம்மா மயங்கி விழுந்தாள்.

*****

“மகளுக்கு இன்னிக்கு மாலை வகுப்பிருந்தது... அதான் அவளைக் கூட்டிட்டுப் போக வந்தேன்... என்ன ஸ்கூல்ல ஒரே கூட்டமாயிருக்கு?”

“ஒரு பிள்ளை மாடியிலிருந்து குதிச்சிட்டா!”

“ஆ! செத்துட்டாளா?”

“செத்துட்டாளாவா? குதிச்சது ஏழாம் மாடியிலிருந்து..”

“எதுக்காகக் குதிச்சிருக்கா?”

“ஏதாச்சும் காதல் பிரச்சினையிருக்கும்... சரியாத் தெரியல என்னன்னு...”

*****

பாடசாலை வளாகத்தினுள்ளே கேமராக்கள். வாயிலருகிலிருந்தே முண்டியடித்து நுழையப் பார்க்கும் கேமராக்கள். எவருக்கும் உள்ளே வர அனுமதியில்லை. பாடசாலை மதிலுக்கு வெளியே விழித்துக் கொண்ட கண்களோடும், கூர்ந்து கவனிக்கும் செவிகளோடும் ஒரு நகரம். தகவல்களுக்கு சிறகுகள் முளைத்து மதிலைத் தாண்டிப் பறக்கின்றன. கைத் தொலைபேசி கேமராக்கள் ஒளிப்பதிவு செய்து கொள்கின்றன. முகப்புத்தக, வாட்ஸப் பரிமாற்றங்கள். எதிலும் செத்துப் போன மாணவியின் புகைப்படங்கள். விழுந்து இரத்தம் காய முன்பு எடுக்கப்பட்ட புகைப்படங்கள். செய்தி இணையத்தளங்கள் விழித்துக் கொள்கின்றன.

’மாணவி தற்கொலை செய்து கொண்டதற்கான காரணம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. காதல் தொடர்பு காரணமாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.’

தகவல்கள் பறக்கின்றன. வழமை போலவே தெருவில் வாகன நெருக்கடி. ஆனால் ஏனைய நாட்களைப் போல எவரிடமும் முணுமுணுப்பில்லை. ஒரிரு மணித்தியாலங்களுக்கு முன்பு ஒரு மாணவி விழுந்து செத்துப் போன பாடசாலையினருகே வாகனக் கண்ணாடிகள் கீழிறக்கப்படுகின்றன. ஆர்வமிக்க விழிகளின் கேள்விகளைப் புரிந்து கொண்ட பாடசாலை மதிலருகே நின்றிருக்கும் விழிகள் அவைகளை நெருங்குகின்றன.

*****

“இந்தப் பிள்ளை அவ்வளவாகக் கதைக்குற பிள்ளையில்ல... கூட்டாளிகளும் அவ்வளவா இல்ல...அவளோட உடல் பருமனை வச்சு வகுப்புல பிள்ளைகள் எல்லோரும் அவளைக் கிண்டல் பண்றதா அண்மையில் கேள்விப்பட்டேன். நல்லாப் படிப்பா.. ஒவியமெல்லாம் ரொம்ப நல்லா வரைவா.. கொஞ்ச நாட்களுக்கு முன்னாடி வேற வகுப்புப் பிள்ளைகளோட பாடசாலை வேலைகளுக்காகவும் ஒவியம் வரைஞ்சு கொடுத்திருந்தா. நடன வகுப்புகள்ல அவ பங்கெடுத்துக்க ஆரம்பிச்சதுக்கப்புறம்தான் வகுப்புல அவளையும் வரவேற்க ஆரம்பிச்சாங்க..



ஓவியம் - Egon Schiele

ஆனா பெருசா எதுக்கும் பாய்ஞ்சு ஒடி வர்ற பிள்ளையில்ல அவள்…”

“சரி… இன்னிக்கு என்ன நடந்துச்சு?”

“இன்னிக்கும் பிள்ளைகள் நேத்து நடந்த பிரச்சினையோடுதான் இருந்தாங்க. இந்தப் பிள்ளை காலையிலேயே வகுப்புக்கு வந்திருந்துச்சு. நான் வகுப்புக்கு வந்தப்ப அதுவும் சாதாரணமாத்தான் இருந்துச்சு. மதிய உணவு இடைவேளைக்கு முன்னாடி வகுப்புல சில பிள்ளைகள் என்னைக் காண வந்திருந்தாங்க. நேத்து இந்தப் பிள்ளையோட நடவடிக்கை சந்தேகத்துக்குரியதா இருந்துச்சுன்னும், இவள் அந்தக் காசு காணாமல் போன பிள்ளையோட புத்தகப் பைக்குக் கிட்ட நின்னுட்டிருந்ததை கொஞ்சம் பேர் கண்டதாகவும், நான் புத்தகப் பையைப் பரிசோதிக்குறதுக்கு முன்னாடி அவ மொபைல் ஃபோன் ஒண்ணு வச்சிருந்ததாவும் அவங்க சொன்னாங்க. நான் அவங்க பேச்சைக் கண்டுக்கல.. ஏன்னா நான் பார்த்தப்போ அவளோட புத்தகப் பையில எந்த ஃபோனும் இருக்கல.. எனக்கு இந்தப் பிரச்சினையை எப்படியாவது தீர்த்துட்டாப் போதும்னு இருந்துச்சு.. அந்தப் பிள்ளைக்கிட்ட அப்புறமாப் பேசிக்கலாம்னு நெனச்சேன்.. வந்திருந்த பிள்ளைகள்கிட்ட அவள்தான் திருடினான்னு நமக்கு உறுதியாச் சொல்ல முடியாதுன்னு சொன்னேன்…

அந்தப் பிள்ளைகள் வகுப்புக்குப் போனாங்க.. நான் கொஞ்சநேரத்துக்குப்பிறகுஅந்தவகுப்புக்குப்போறப்போ வகுப்புல ஒரே சத்தம். எல்லாப் பிள்ளைகளும் நின்னுட்டிருந்தாங்க. இந்தப் பிள்ளை மாத்திரம் மேசையில் தலைவச்சுப் படுத்துட்டிருந்தா. பிள்ளைகள் எல்லோரும் அந்தப் பிள்ளையைத் திருடின்னு சொல்லிட்டிருந்தாங்க. ஒண்ணும் செய்ய இயலாத பட்சத்துல நான் சொன்னேன்.. இந்தப் பிள்ளைதான் திருடினான்னு நினைக்குறவங்க கையைத் தூக்குங்கன்னு.. வகுப்புல எல்லாப் பிள்ளைகளுமே கையைத் தூக்கினாங்க.

இந்தப் பிள்ளை தலையைத் தூக்கி அவங்க எல்லோரையுமே பார்த்துச்சு.. மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு எல்லாப் பிள்ளைகளும் லைப்ரரிக்குப் போயிட்டாங்க… நான் இந்தப் பிள்ளைக்கிட்ட எதுவும் கேட்கவோ, பேசவோ போகல பிள்ளை கதைக்கக் கூடிய நிலைமைல இருக்கலங்குறதால…”

“அப்போ நேத்து… இந்தப் பிள்ளையோட புத்தகப் பையிலிருந்து ஆயிரம் ரூபாயைக் கண்டெடுக்குறப்போ வகுப்புல மற்றப் பிள்ளைகளும் அங்கேயிருந்தாங்களா?”

“ஆமா… மொத்த வகுப்பும் அங்கிருந்துச்சு…”

பேரமைதி எங்கும்!

*****

“நான் இந்தப் பாடசாலையுடைய அதிபர் என்பதால் இந்த நிகழ்வைப் பற்றி தற்போது என்னால் எதுவும் கூற முடியாது. போலிஸ் விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறது. எனது சேவைக் காலத்தில் நான் முகம்கொடுக்கநேர்ந்துள்ளமிகவும்துரதிர்ஷ்டவசமான சம்பவம் இதுதான்.

…… என்னது? எதற்கு ஆசிரியர்களைத் திட்டுறீங்க? நாந்தான் சொல்றேன்ல..போலிஸ் இன்னும் காரணத்தைக் கண்டுபிடிக்கலன்னு… என்னது? யார் நீங்க? எந்த மீடியாலருந்து? வெளியே போங்க… இப்ப எங்களுக்கிருக்குற முக்கியமான வேலை, மீடியாக்களுக்கு பதில் சொல்லிட்டிருக்கிறதில்ல… ”

*****

வகுப்பாசிரியையோடு வகுப்பில் மொத்தம் முப்பது பேர். மற்றும் சடலமொன்று. கதைக்க முடியாத சடலம் குறித்துக் கூறப்படும் கதைகள் முப்பது.

"இப்ப இங்க பெயர் கூப்பிடுற வரிசைப் பிரகாரம் ஒவ்வொருத்தரா வந்து அவங்களுக்குத் தெரிஞ்சதெல்லாம் சொல்லணும்... அவரை, இவரைக் காப்பாத்தணும்னு பொய்யெல்லாம் சொல்லக் கூடாது... தெரியும்தானே? ரொம்பப் பாரதூரமான சம்பவமொண்ணு நடந்திருக்கு.. உங்களைப் போல ஒருத்தரோட உயிர் போயிருக்கு.. அவருக்காக நாங்க உண்மையைக் கண்டுபிடிக்கணும்.."·

"நேத்து பின்னேரம் சுபாஷிணியோட ஆயிரம் ரூபாயைக் காணல்ல. அதை நாங்க போய் ஜெயந்தி மிஸ்கிட்ட சொன்னதும் அவர் வந்து எல்லா பைகளையும் பரிசோதிச்சார். இவளோட பையிலருந்து ஆயிரம் ரூபா அகப்பட்டுச்சு.. நாங்க ஸ்கூல் விட்டு வீட்டுக்குப் போயிட்டோம்... நேத்து பணம் காணாமப் போறதுக்கு முன்னாடி இவள் சுபாஷிணியோட பைக்குப் பக்கத்துல நின்னுட்டிருந்தா.. அவகிட்ட ஒரு ஃபோன் இருக்குறதையும் கொஞ்சம் பேர் கண்டிருக்காங்க.. அதையும் நாங்க மிஸ்கிட்ட சொன்னோம்... ஆனா அவள் என்ன செஞ்சாலும் மிஸ்ஸுக்கு அவள் மேலதான் நம்பிக்கை அதிகம்..."

"அவளுக்கொரு காதலன் இருக்கான்னு சொல்ல முடியாது... அவள் அப்படியொண்ணும் அழகில்ல... எங்ககிட்டயும் ஒண்ணும் சொன்னதில்ல. சொல்ற அளவுக்கும் நாங்க அவளோடு அவ்வளவா நெருக்கமான தோழிகளில்ல. அவள் எப்பவும் தனியாத்தான் இருப்பா. எப்பவும் படிச்சுட்டேயிருப்பா..."

"என்னோட காசுதான் காணாமப் போச்சு... அப்பாதான் நேத்து காசு கொடுத்தார்..."

"அப்பா எதுக்குக் காசு கொடுத்தார்?"

"ஒரு கிழமை கைச் செலவுக்கு..."

"ம்ம்"

"நான் எப்பவும் புத்தகப் பையோட உள்ளறையிலதான் காசை வைப்பேன். நேத்தும் அப்படித்தான். பகலுணவு வேளையில அந்தக் காசிருந்தது நினைவிருக்கு.. ஸ்கூல் விடப் போறப்போ வீட்டுக்குப் போறதுக்கு பஸ்ஸுக்குக் காசெடுக்கத் தேடினப்போதான் ஆயிரம் ரூபா நோட்டை மட்டும் காணல... உடனே போய் ஜெயந்தி மிஸ்கிட்ட சொன்னோம்... ஆனா அப்பவும் நான் இவங்ககிட்ட சொன்னேன் மிஸ்கிட்டயெல்லாம் இதைச் சொல்லத் தேவையில்ல... எங்களுக்கு இந்த ஆயிரம் ரூபாயெல்லாம் ஒரு பெரிய காசில்லன்னு... ஆனா வகுப்புல மற்றப் பிள்ளைங்கதான் மிஸ்கிட்ட சொல்லவே வேணும்னு சொன்னாங்க.. எங்களுக்குள்ளேயே ஒரு திருடி இருக்குறது ஒரு பிரச்சினைதானே... இல்லையா சார்?"

"சரி... அந்தப் பிள்ளை உங்க புத்தகப்பைக்கருகில நின்னுட்டிருந்ததாச் சொன்ன சமயத்துல நீங்க எங்க இருந்தீங்க?"

"நான் பக்கத்து வகுப்புல இருந்தேன்... அங்க போயிட்டு வர்றப்போ என்னோட புத்தகப் பை கீழ விழுந்து அந்தப் பிள்ளை அதை எடுத்து வச்சதா வகுப்புல இருந்த மற்றப் பிள்ளைகள் சொன்னாங்க..."

"சார் அந்தப் பிள்ளை இவங்க சொல்ற மாதிரி ஒரு பிள்ளையில்ல.. அவள் ஓவியம் வரைவா... புத்தகங்கள் வாசிப்பா... அமைதியான பிள்ளை... அவளுக்கு தோழிகள் யாருமேயில்லன்னு சொல்றது பொய்.. வகுப்பில எல்லோருக்குமே அவள் தோழிதான். அவள் எல்லோருக்கும் உதவிகள் செய்தாள். நேத்து என்ன நடந்துச்சுன்னு எனக்குத் தெரியல.. அம்மாவுக்கு சுகமில்லாததால நான் நேத்தும், இன்னிக்கும் ஸ்கூலுக்கு வரல... இந்த விஷயம் கேள்விப்பட்ட உடனே நான் அப்பாவைக் கூட்டிட்டு ஸ்கூலுக்கு வந்தேன்.. செத்துப் போயிட்டான்னு தெரியும்.. அவளுக்கு ரொம்ப அடிபட்டிருக்கா சார்?

*****

கறுப்பு நிறப் புத்தகப் பையொன்று. அதனுள்ளே புத்தகங்கள், குடையொன்று, ஒரு கடித உறைக்குள் மடிக்கப்பட்ட நிலையில் இரண்டு ஐநூறு ரூபாய்த் தாள்கள், பிரிக்கப்படாத உணவுப் பார்சலொன்று. பையைக் கையிலேந்தி கண்ணீர் வடித்தவாறு அம்மா.

"ஐயோ மகளே... நீ இன்னிக்கு பட்டினியாவே இருந்தாயோ மகளே..?"

மரணத்தின் வீச்சம் எங்கும் பரவுகிறது.

*****

"ஹலோ! ஹலோ! எடிட்டரா? அந்த ஸ்கூல் பிள்ளை குதிச்ச இடத்துலதான் நின்னுட்டிருக்கேன்... இல்லல்ல.. பாடியை அப்பவே எடுத்துட்டுப் போயிட்டாங்க

நாங்க வர்றதுக்கு முன்னாடியே... மொபைல் ஃபோனொண்ணுல எடுத்த போட்டோ ஒண்ணுன்னா இருக்கு... சரி... சரி... 'மாணவி ஏழு மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை' ன்னு போடட்டுமா? சரி.. சரி ! "

......

"தலைப்புச் செய்தி மாறுது... இதை எழுதிக்குங்க... வீடியோவும் இன்னும் கொஞ்ச நேரத்துல கிடைச்சிடும் தயாரா இருங்க...முதல் பக்கத்துலேயே பெரிசா போட்டுடலாம்..."

*****

"சொல்லுங்க பிள்ளைகளே... இந்தச் செத்துப் போன பிள்ளை ஸ்கூலுக்கு ஃபோன் கொண்டு வந்த கதை என்னது? யார் அந்தக் கதையை முதலில் சொன்னது?"

வகுப்பாசிரியையோடு சேர்த்து மொத்தம் முப்பது பேர். மற்றும் சடலமொன்று. முப்பது வாக்குமூலங்கள். மேலுமொன்று.

"சார்... எனக்கு உங்ககிட்ட ஒண்ணு சொல்லணும்..."
"இந்தப் பிள்ளை முன்னாடியும் சொன்னீங்கதானே?"
"சார்... நான் இப்ப சொல்லப் போறது மத்தப் பிள்ளைகளுக்குத் தெரிய வேணாம்"
"நீங்க கொடுக்கப் போறது வாக்குமூலம்... அது உண்மையா இருந்தா உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் வராது பிள்ளை..."
"சார் அந்த ஃபோன் சுபாஷிணியோடது... அவ அதை வீட்டுக்குத் தெரியாம ரகசியமா வச்சுட்டிருக்கா..."

"அப்படீன்னா அந்த செத்துப் போன பிள்ளையும் அந்த ஃபோனை பாவிச்சுட்டிருந்தாளா?"

"எனக்குத் தெரிஞ்சளவுக்கு இல்ல சார்... காசு காணாமப் போச்சுன்னு சொல்லிட்டிருந்த சுபாஷிணி, மிஸ் வந்து பைகளைப் பரிசோதிக்குறதை விரும்பல..."

"ஆனா செத்துப் போன அந்தப் பிள்ளை ஃபோனைக் கையில வச்சுட்டிருந்ததைக் கண்டவங்களும் இருக்குறாங்க இல்லையா?"

"அப்படிச் சொல்றவங்களும் அவங்களேதான்... இல்லையா சார்?"

பின்னப்பட்ட கூந்தலின் நுனியைக் கோதி விடும் விரல்கள். மேசையில் சாய்ந்திருக்கும் ஒரு தலை. வேகமான, உஷ்ணப் பெருமூச்சு. முகத்தில் வழிந்தோடும் கண்ணீரும் மூக்குச் சளியும். தலையைக் கோதி விடும் ஒரு கரம்.

"அழாதே சுபாஷிணி... நீதான் தப்பு பண்ணலையே..."

*****

மைதானத்தின் இரத்தக் கறை மீது ஈக்கள் மொய்க்கத் தொடங்கியிருந்தன. காய்ந்த இரத்தக் கறைகள் மீது மணல் கொட்டப்பட்டது. சூரியன் மறையத் தொடங்கியிருந்தது. பார்த்துக் கொண்டேயிருந்ததில் சோர்ந்து போனவர்கள் கலைந்து சென்றார்கள். மிகுதியை இரவில் பார்க்கலாம். இரவுணவைச் சாப்பிட்டுக் கொண்டே பார்த்துக் கொண்டிருக்கும் தொலைக்காட்சி செய்திகளில் பார்க்கலாம்.

அவரது தலை குனிந்திருந்தது. கையில் கைக்குட்டையொன்று. கண்ணீரால் ஈரலித்துப் போயிருந்த கைக்குட்டையொன்று.

"மகள் நேத்து காலையில எப்பவும் போல ஸ்கூலுக்குப் போயிருந்தா சார்... போறதுக்கு முன்னாடி என் பொஞ்சாதிகிட்ட நடனப் பயிற்சியிருக்குன்னு ஆயிரம் ரூவா கேட்டிருக்கா... அவகிட்ட இருக்கல... அதனால நான் கொடுத்தேன் சார்... ஐநூறு ரூவா நோட்டு ரெண்டு கொடுத்தேன் சார்... லீவு முடிஞ்சதால நேத்தே வேலைக்குக் கிளம்பிப் போயிட்டேன் சார்... நேத்து காலையில மகள் ஸ்கூலுக்குக் கிளம்பிப் போனப்பதான் மகளைக் கடைசியாக் கண்டேன்... எதுக்காக என் மகள் குதிச்சா சார்?"

*****

மஞ்சள் நிற கடித உறையொன்று அங்கிருந்தது. உள்ளே ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் இரண்டு.

"காணாமப் போனது ஆயிரம் ரூபாய் நோட்டொண்ணுன்னுதானே சொன்னீங்க சுபாஷிணி?"
அங்கு பேரமைதி நிலவியது.

"இப்ப உண்மையை சொல்லணும்... நாங்க உனக்கு எந்தத் தொந்தரவும் தர மாட்டோம்... எங்களுக்கு உண்மையைத் தெரிஞ்சுக்கணும்... ஃபோன் உன்னோடதுன்னு நாங்க கண்டுபிடிச்சிட்டோம்... நிஜமாவே ஆயிரம் ரூபா காணாமப் போச்சா? இல்லன்னா அது பாரதூரம் தெரியாம நீ சொன்ன பொய்யா சுபாஷிணி?"

"ஃபோன் என்னோடதுதான் சார்... என் காசு எதுவும் காணாமப் போகல... அந்தக் காசு... காசு... நான்... நான் காசு காணாமப் போயிடுச்சுன்னு சொன்னதால இப்படியெல்லாம் நடக்கும்னு நெனச்சுக் கூடப் பார்க்கல சார்... எல்லோருமே அவளைத் திருடின்னு சொன்னப்போ நான் அமைதியா இருந்துட்டேன்... அதுதான் தப்பாயிடுச்சு சார்... ஐயோ சார்... இந்த விஷயம் என் வீட்டுக்குத் தெரிய வேணாம் சார்... நான் அந்தக் காசை தருணுக்குக் கொடுத்தேன்னு தெரிஞ்சா வீட்ல என் தோலை உரிப்பாங்க சார்....!"

# ஏழாவது கறுப்பு இரேகை



நஸீகா முஹைதீன்

மூத்தாப்பாமூன்று நாட்களுக்கொருமுறை உடுப்புக்கழுவுவார். உப்புச்சவுக்காரம்பாதி வாங்கிக் கொடுப்பேன். கருங் கல்லிலிருந்தபடி வெள்ளைச்சாரனை அடித்தடித்துக் கழுவுவார்.பச்சை பெல்ட் பாம்பு போல கிடக்கும். ஒருநாள் பெரிய பேசனில் கிடந்த தண்ணீரில் கொழுவியிருந்த பெல்ட்டைப் எடுத்துப்போட்டு பாம்பு நீஞ்சி வருதாம் என்று விளையாடினேன். பளார் என முதுகில் விழுந்த உம்மாவின் அடியின் பின்னரே உள்ளிருந்த காசெல்லாம் நனைந்தது

வசியம் நிறைந்திருக்கும் இருட்டில் மழை உச்சத்தில் பொழிந்து கொண்டிருக்கிறது. எனது படுக்கையறைச் சுவர்கள் பின்பக்கப் பூச்சின்றி நீர் ஊறிக் கிடந்தன. ஆங்காங்கே கொழுவியிருந்த ஓவியங்களைக் கழற்றி மேசைமேலேகுவித்துவைத்தேன்.கறுப்பும்,பச்சையுமாக சுவரின் நிறம் மாறிப் போயிருந்தது.இன்று முழுவதும் அதைப் பார்த்துக் கொண்டிருக்கலாம்.புதுமையான செய்தியைத் தரக் கூடியதாக அவை இருந்தன. ஈரத்தை நாக்கால் நக்கினேன். சுவர் பூராகவும் கன்னத்தைத் தேய்த்தேன்.மூத்தாப்பாவின் தாடி உரசியது.சுவரில் இளநீரைப்போல சுவையான தண்ணியின் இனிப்பும்,மூத்தப்பாவின் வாசனையும் இருந்தது.படுக்கை அறையிருக்கும் இடத்திலே முன்பு கிணறு கட்டியிருந்தோம். எத்தனை பெரிசு,சிறிசு என்றெல்லாம் அளவு சொல்ல முடியாது.கிணறு இருந்தது.கூடவே எங்கள் மூத்தாப்பாவும் இருந்தார். மூத்தாப்பாவுக்கு அந்தக்கிணறு என்றாலே கொள்ளைப் பிரியம்.குளிக்கச் சென்றால் பாதிநாளை வீணாக்கி விடுவார். தண்ணீரை வாரி வாரித் தலையில் ஊற்றிக்கொள்ளவதைப் பார்த்தால் ஆசையாயிருக்கும்.

அவருடன் குளிக்கும் ஆசையில் பக்கத்தில் போய் நின்று கொண்டேன். வாளியைக் கவிழ்க்கும் போது அவரில் பட்டுத் தெறித்த தண்ணீர் அவரின் முழங்கால் அளவிருக்கும் எனக்குப் பொழிந்தது.அது சின்ன மழை.

பத்துப் பதினைந்து வாளிகள் ஊற்றி விட்டு மூத்தாப்பா நிறுத்திக் கொண்டார்.அத்தோடு ஊத்தை தேய்க்கும் படலம் ஆரம்பித்தது.என்னைப்பிடித்து கை,கால் முகத்தினோரம்,காது மடக்கம் அதன் குளிர்ச்சி பரவிய கழுத்துப்பின்புறமெனத் தேய்க்கும் போது சதை இழுத்து வருவதைப் போலிருந்தது.இத்தனைக்கும் நான் தனியே குளிக்கும் போது ஊத்தையே தேய்ப்பதில்லை. சவுக்காரம் கூட முட்டியாய் தெரியும் வயிற்றில் மட்டுமே போடுவேன்.ஆனால் மூத்தாப்பாவோ சீவனைப் பிடுங்கி எடுத்தார்.பல் பொடியால் ஊண்டி பல்லைத் தேய்த்து விடும் போது முரசு கரைந்தது.துப்பினேன்.குட்டியாய் இரத்தம் எச்சிலுடன் விழுந்தது.அவரைப் பார்க்கிறேன். ஆயிரம் தடவைகள் தன்னைத் தேய்க்கிறார்.தினமும் இப்படிக் குளித்தால் அவரில் ஊத்தையே இருக்காதே. பழகி விட்டது.

அன்றைய குளியல் சடங்கு முடிந்ததும் உம்மா மஞ்சள் பெனியனும்,வெள்ளை ஜம்பரும் போட்டு விட்டாள். வீட்டிற்கு பின்னால் கிடக்கும் பூனைக் குட்டியை தொட்டுப் பார்த்தது தோன்றியது.மென்மையின் பூப்பு.மூத்தாப்பா தாழம்பூ தைலத்தை தலையில் வைத்து உடலிலும் பரவ விட்டார்.எனக்கும் வைத்து தலையை படிய வாரி விட்டு பாரிஸ் பவுடரை முகத்தில் அப்பி விட்டார்.கண்ணாடிக்கு முன் நின்று பார்த்தேன்.உண்மையில் வெண்மையான பெண்ணாகியிருந்தேன்.வெண்மையென்றால் வெளுப்பில்லை.கரும் வெண்மை.ஊத்தைகள் போன பின் தோன்றும் கபில வெண்மை. உம்மாவைப்போல. இருந்தாலும் அவள் அடர்ந்த தங்க வெண்மை. மூத்தாப்பா கறுப்பு.தூய்மையான கறுப்பு.மூத்தப்பா எல்லோரையும் விட கறுப்பு..

மூத்தாப்பா வெள்ளைச் சாரமும்,வெள்ளை முழு நீளக்கை சேர்ட்டும் அணிவார்.அது புனிதமானதாக இருக்கும். ஒரு பொட்டு அழுக்குக் கூட இல்லாத உடுப்பு. மிகப் பகுத்திரமான மனிதர்.
வெளிக்கிட்டு பச்சை பெல்டையும் எடுத்து மூத்தாப்பா உடுத்திக்கொண்டார்.ரொட்டி வாங்கப் போனோம்.



மணல் பரப்பிய தெரு. மூத்தாப்பாவின் ஆட்காட்டி விரலை பிடித்தால் முடியாது, வழுக்கும். எண்ணெய் பூசிப் பூசி அவர் தோல் இன்னும் சுருங்காமல் பளபளப்பாக இருக்கிறது. நானும் பெரியவளானதும் எண்ணை பூசிக்கொள்வேன் என நினைப்பேன். வழியில் காணுவோரெல்லாம் மூத்தாப்பாவுடன் மரியாதையாகப் பேசினார்கள்.நின்று சலாம் கூறினார்கள்.மூத்தாப்பா கொஞ்ச காலத்துக்கு முதல் பெரிய வயல்,வெள்ளாமை என்று வசதியாக இருந்தாராம்.பென்னம் பெரிய வீடெல்லாம் இருந்ததாம்.ஒரே இரவில் அவர்கள் முந்தைய ஊரில் ஏற்பட்ட பிரச்சினையால் எல்லாத்தையும் இழந்து வந்துவிட்டார்கள். உம்மாவை வைத்துக்கொண்டு இந்த மனிசன் படாத பாடெல்லாம் பட்டிருக்கிறார். இடமில்லாது தெருவில் படுத்துறங்கிய நாட்களுமுண்டு என உம்மாகூறி இருக்கிறாள். இதைச் சொல்லும் போது அவளைப் பார்க்கப் பாவமாக இருக்கும்.மூக்குச் சிவந்து கன்னங்களுக்கு அவளது துக்கம் விரவி வரும்.

பத்து ரூபாய்க்கு மூனு ரொட்டி வாங்கிக்கொண்டோம். பருப்பும், இறைச்சிக்கறியும் கலந்து வாசனையாக இருந்தது.உம்மாவுக்குக் கசறு வாங்க வேண்டும். கசறுக்கடை ரொட்டிக்கடையிலிருந்து சிறு தூரம். ஆனாலும் எட்டு மணிக்குத்தான் பொரித்த கசறுகளை சீனிப்பாகில் போட்டுக் கலக்குவார்கள். ஒரு செக்கன் முந்தாது. ஒரு செக்கன் பிந்தாது.எட்டென்றால் எட்டு. நேரமிருந்ததால் சில்லறைக்கடையில் பல்லி முட்டாஸ் பக்கட் வாங்கப்போனோம். மூத்தாப்பா வெளியில் தொங்கிய வாழைக்குலையில் இரண்டு பழத்தை இழுத்தார்.என் கற்பனைக்கு வாழைக்குலையென்பது குடை.சுள்ளென அடிக்கும் வெயிலில் வாழைக்குலையை பிடித்துக்கொண்டு நடந்தால் ஜில்லென்றாகி விடும்.மூத்தாப்பா பல்லி முட்டாசுப் பக்கட்டை நீட்டினார்.பெருநாளாய் இருந்தது.அடிக்கடி நான் பெருநாளை இவ்விதமாகக் கொண்டாடினேன். ரொட்டிக்கடைக்குப் போகும் போது உற்சாகமாய் இருக்கும்.எல்லாமே என் நம்பிக்கை.நம்பிக்கை கொள்வது மிகப்பெரிய வெற்றி.நம்பிக்கை அதுதானே எல்லாம்.அது இருக்கும் வரை தானே எல்லாம். எனக்கென்றால் நம்பிக்கை தொண்டையிலிருந்து அடிவயிறு வரை தொடர்கிறது. வீட்டுக்கு திரும்பும் போது சந்தோசத்தில் மூத்தாப்பா பலநேரங்களில் பாடும் பாடல்களை மாறி மாறிப் பாடினேன்.

"மண்ண மொழி மானே வெள்ளி மீனே
பசும்மீனே
மண்ண மொழி மானே...

மூத்தாப்பா சிரித்தார்.ஆயிரம் சுடர்களின் வெளிச்சம் தெறித்து உச்சி குளிர்ந்து போனது.

வீட்டிற்கு வந்ததும் மீண்டும் கிணற்றுத் தண்ணீரில் கால் கைகளை கழுவிக் கொண்டோம்.ரொட்டிப் பார்சலைப் பிரித்து ஒள்ளுப்பம் பீங்கானில் வைத்துத் தந்தார்.எனக்கு இரண்டு துண்டுகளுக்கு மேல் இறங்காது.எண்ணமெல்லாம் பல்லி முட்டாசிலே இருந்தது.கடகடவென்று ரொட்டியைத் தின்று விட்டு முட்டாசைப் வாய்க்குள் போட்டேன். நட்சத்திரமோ, நட்சீரமோ போட்டு இருந்தார்கள்.கொஞ்ச காலம் நானும், மூத்தாப்பாவும் நாட்களை இப்படித்தான் கடத்திக் கொண்டிருந்தோம்.

டீவியில் அப்போதெல்லாம் காலையில் பத்து மணிக்கு திரைப்படம் போகும்.நாடகங்கள் பெருமளவில் பார்த்த ஞாபகமில்லை.காலையில் போடும் படத்தை மட்டும் பார்ப்போம். விஜயகாந்த் படமென்றால் மூத்தாப்பாவிற்கு போதை ஏறிவிடும்.அந்த காலத்தில் என்னுடைய சூப்பர் ஹீரோ விஜயகாந்த் தான். பக்கத்து வீட்டு பிள்ளைகளோடு விளையாடும் போது என்னை விஜயகாந்த் ஆகவே நினைத்துக்கொள்வேன். பக்கட் வைத்த கவுனிற்குள் மரக்கம்புகளை வைத்து துப்பாக்கி என பாவனை செய்து கொள்வேன். மூத்தாப்பா பழக்கித்தந்த அ, ஆ,1, 2 களைப் போட்டு சைன் வைப்பேன்.கணிதமும்,தமிழுமாகவே கல்வி

தொடங்கியது. ஆங்கிலமெல்லாம் ஐந்தாம் தரத்திலே எழுதக்கற்றுக்கொண்டேன்.காலத்தின் புண்ணியம்...

மூத்தாப்பா சாப்பிட்டு முடிந்ததும் கிணற்றுத் தண்ணியையே குடிப்பார். நாங்களெல்லாம் உம்மா ஐந்தாறு வீடு தொலைவிலிருக்கும் குழாய்க்கிணறில் எடுத்து வரும் தண்ணீரைக் குடிப்போம். அவர் அதைத்தொடவே மாட்டார். அந்தக்கிணற்றிலே சீவன். அது இளநீரைப் போல இருக்குமென்று சொல்லுவார். சில நேரங்களில் உம்மம்மாவின் வாசனை எனவும் கூறுவார். உம்மம்மா எங்கள் பூர்வீக கிராமத்தில் பெரிய கிணறும் அதைச் சுற்றி பல்வேறு நிறத்தில் நாட்டப்பட்டிருந்த ரோசாச்செடிகள் உள்ள இடத்திலேயே இருப்பாளாம்.அங்கிருந்து வந்த ஏக்கத்திலேயே இப்போதிருக்கும் இடத்தை வாங்கிய கொஞ்சநாளில் இறந்து போனாளாம்.இந்தப் புதிய காத்தான்குடியை விட தன் பூர்வீக கிராமத்தையே நினைத்து புதுக்கிணற்றை வெறித்தபடி அழுவாளாம்.அவள் கண்ணீரெல்லாம் சேர்த்த கிணறு. அதே வாசனை. அதனாலேயே மூத்தாப்பா கிணற்றுத் தண்ணீரில் குளித்தாலே போதும் அத்தரை பூசிக்கொண்டது போலிருக்கும் என்பார். பலநேரங்களில் அது மெய்தான். அவர் இன்னும் மூத்தம்மாவை காதலிக்கிறார் எனத் தோன்றும்.

மூத்தாப்பா எப்போதும் வானத்தையே பார்ப்பார். சுட்டெரிக்கும் வெயிலில் நின்று கூட.கண்கள் கூசாமல் பார்ப்பார்.வானத்தைப் பார்த்து கைகளிரண்டையும் உயர்த்திக் கொள்வார்.வாயில் எதையோ முணுமுணுத்தபடி கைகளால் வெயிலை வாரி முகத்தில் தடவிக் கொள்வார்.

“என்ன மூத்தாப்பா செய்றீங்க”

“வானம் என்ட ஜீவாதாரம்.அங்கருந்து வாற மழதானே என்ன வாழவச்சது” என்பார்.தன்னுடைய வயல் நிலம் தனக்காக காத்திருக்கும் என்றும் அவர் நம்பினார். வயல் நிறைக்கும் மழை,மழை வற்றும் வெயில் என அவர் பழைய வாழ்க்கைக்கு திரும்ப நினைத்தார்.

மூத்தாப்பா மூன்று நாட்களுக்கொருமுறை உடுப்புக் கழுவுவார். உப்புச் சவுக்காரம் பாதி வாங்கிக் கொடுப்பேன். கருங் கல்லிலிருந்தபடி வெள்ளைச்சாரனை அடித்தடித்துக் கழுவுவார். பச்சை பெல்ட் பாம்பு போல கிடக்கும்.ஒருநாள் பெரிய பேசனில் கிடந்த தண்ணீரில் கொழுவியிருந்த பெல்ட்டைப் எடுத்துப்போட்டு பாம்பு நீஞ்சி வருதாம் என்று விளையாடினேன். பளார் என முதுகில் விழுந்த உம்மாவின் அடியின் பின்னரே உள்ளிருந்த காசெல்லாம் நனைந்தது தெரிந்தது.பிறகு வெயிலில் காயவைத்து எடுக்கப் பெரும்பாடாகிப் போனது.ஆனால் மூத்தாப்பா ஏசக்கூடவில்லை. முதுகைத் தடவித் தடவி ஒட்டக்கத்தின் கதை சொன்னார்.

“ஒட்டகங்கள நாளக்கி குர்பானி குடுக்குற என்டா அடுத்தன்டு அதே இடத்தில போய் இருக்குமாம். அவ்வளவு நன்மையான மிருகம் அது.நாமளும் அப்புடித்தான் இருக்கனும்”

எனக்கு ஒட்டகத்தை பற்றி அப்போது தெரியாது. மாட்டைப்போல அதை கற்பனை பண்ணிக் கொண்டேன். எனக்கு ஒட்டகம் மீது தனிப்பெருங் கருணை பொங்கிற்று.

“மூத்தாப்பா நானும் பெல்ட்ட அ கழுவத்தான் எடுத்த”

அழுது நிறுத்தி விக்கல்களைப் போல ஏக்கங்களை விடத் தொடங்கியிருந்தேன்.மூக்கு வடிந்தது.உம்மா தாவணியைக் கொண்டு வந்து சீறி எடுத்தாள்.மூக்கு பிஞ்சிடும் போல் இருந்தது.அதிலிருந்து மூத்தாப்பாவின் பெல்ட்டைத் தொடுவதில்லை.அங்கர் மட்டைகள், நெஸ்ப்பிரே பக்கட்டுக்களைக் கிழித்து ஆடு,மாடு என்று உருவகப்படுத்திக் கொண்டேன்.மூத்தாப்பாவின் ஒட்டகங்கள் எனக்குப் புதிது.மாட்டை விட பெரிதாக கிழித்து வைத்துக்கொண்டால் ஒட்டகம்.

மூத்தாப்பா எனக்கு ஆசிரியர்.என்னுடைய கற்பனைகளை,நச்சரிப்புகளை,மேல் முரசும்,காதும் சேர்ந்து கடிக்கும் போது ஏற்படும் அரிப்புணர்வை தீர்க்கும் சூட்சுமம் அவருக்குத் தெரிந்திருந்தது.நான் கேள்விகளைக் கேட்டுக்கொண்டேயிருப்பேன்.

“மூத்தாப்பா கடல்ல இரிக்கிறது வேற தண்ணியா,நாம குடிக்கேலாதா?”

அவர் சிரித்தார்.

“அது கடல் தண்ணி,தொட்டால் உப்புக் கரிக்கும். மேகங்கள அடுக்கின வானம் ஒரு தண்ணியத்தான் கொட்டுது.இருந்தாலும் ருசி வேற.கிணத்துத் தண்ணி,ஆத்துத்தண்ணி,கடத்தண்ணி”

எனக்கு கடினமாயிருக்கிறது.புதிய சொற்களை கற்றுக்கொள்வதில் மாச்சல்காரியாகவே இருந்தேன்.

“மழ கூட தண்ணி.அது மழத்தண்ணி,கடல் கூட தண்ணி அது கடல் தண்ணி.நல்ல காலம் எல்லாத்தண்ணியும் உப்புத் தண்ணியா இரிக்கல.நாமெல்லாம் மௌத்தாப்போயிருப்பம்”
இந்த விதமாக எங்கள் உரையாடல் நீண்டு கொண்டே செல்கின்றன.

இரண்டு நாட்கள் கழிந்தன.டீவியில் அன்று ஹிந்திப்படத்தை மூத்தாப்பா பார்த்துக் கொண்டிருந்தார்.வேறு விளையாட்டுக்கள் இல்லாததால் அவர் பக்கத்தில் போய் இருந்தேன். மொட்டத்தலையோ முழங்காலோ..இலவும் புரியவில்லை.பாணி மட்டும் புரிந்தது.

“என்ன மூத்தாப்பா பாணின்டு சொல்றான்”

அவர் தன்னுடைய கோணல் பற்கள் தெரியச் சிரித்தார். பாணி என்றால் தண்ணீர் என்றார். எனக்கு கோபம் வந்தது. பாணி என்றால் உம்மா இடியப்பத்திற்கு மாவும்,சீனியும்,தேங்காய்ப்பாலும் போட்டுச் செய்யும் கூழ் தானே. இதென்ன தண்ணிக்கு பாணி என்கிறார். மூத்தாப்பாக்கு ஒன்டும் தெரியாது என்ற முடிவில் அங்கிருந்து கிளம்பிவிட்டேன். உம்மாவிடம் போய் பாணி என்றால் என்ன எனக் கேட்டேன். அவளும் சீனி போட்டுச் செய்வதையே சொன்னாள்.

அடுத்தமுறை மூத்தாப்பா குளிக்கும் போது கிணற்றிற்குள் பாணி என்றேன்.மூத்தாப்பா கத்தரிக்காய்களையும்,தேங்காய்களையும் கிணற்றிற்குள் போட்டிருந்தார்.

“கிணறு நல்லத செய்யும்.ஒட்டகத்தகப் போல. கத்தரிக்காய் அழுகாது.முத்திப்போகாது. தண்ணீர் பார்த்துக்கொள்ளும்.தண்ணீரோ, ஒட்டகமோ எல்லாமே நலவிற்காகப் பிறக்கிறது.ஒட்டகத்துக்குள்ள இரிக்கும் தண்ணீர். சுடுமணல்ல பாலைவனத்துப் பிரயாணிகளை காப்பாத்தும்.அப்ப ஒட்டகம் கிணறுதான்”

அல்லாவே.. மூத்தாப்பா எத்தனை அறிவாளி. அந்த காலத்து எஸ் எஸ் சி.தேங்காய் கணக்குகளைக் கூட சீக்கிரம் பார்த்து விடுவார்.ஐம்பது தேங்காய்கள்,ஒவ்வொன்றும் முப்பத்து இரண்டு ரூபாய் படி.ச்சூ பெரிய கணக்கு. ஒட்டகத்தை போல. நான் இரண்டையும் இரண்டையும் கூட்டுவேன். இரண்டு கைகளிலிலும் இரண்டெடுத்து நான்கெனக் கூட்டுவேன்.

மூத்தாப்பாவும்,கிணறும் எனக்கு சின்ன வயதில் பெரிதாக தெரியவில்லை.இப்போது இரண்டுமே பொக்கிசம்.எதில் இருந்து எது எனத்தெரியவில்லை. எப்படியோ இரண்டுடன் இரண்டு.இரண்டிலிருந்து இரண்டு. அகலத்திறந்திருக்கும் நெஞ்சத்தில் ஈரத்தை தேக்கி வைத்திருப்பதிலோ, பாசிகளைப் போல துன்பம் படர்தலிலோ.இருந்தாலும் தருணத்தில் தாகமும், அன்பும் தீர்த்து விடுவது. ஆக ரெண்டும் ஒன்னுதான்.

பத்தாம் மாசத்துடன் மழைக்கால அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தன. உம்மா சோர்வாக உட்கார்ந்திருந்தாள். மழை நீர் எப்படியோ வீட்டில் புகுந்து விடும். இருக்கும் ஒத்தைப் பலகைக் கட்டிலில் சமாளிக்க வேண்டும். கக்கூசும் நிரம்பி விடும். இந்தமுறையாவது கல்லால் உயரமான அறையொன்றை கட்ட நினைத்திருந்தாள். வாப்பா யாவாரம் முடிந்து மூன்று நாட்களில் வந்த பிறகே முடிவு தெரியும். அவளுக்கு நம்பிக்கையில்லை. தண்ணீரை நினைத்து அவள் திகிலடைந்திருந்தாள்.

“எதுல தண்ணி இல்ல.எல்லாத்துலயும் தண்ணி இருக்கு. வாழத்தண்டு,அது தாங்கி நிற்கும் புளிக் கதலி அது இறங்கும் தொண்டைக்குழி, பக்கத்து வீட்டுத் தென்னை மரத்தில், தேங்காய் பதுக்கி வைத்திருப்பதில்,இன்னும் கரைச்ச சோற்றில்,அதில் போட்டுப் பிசைந்த ஊறுகாயில்”

தண்ணி வானத்திலிருந்து பூமிக்கா அல்லது பூமியிலிருந்து வானத்திற்கா? எனக்கிருந்த பெருங்குழப்பமிது. பெரியவளானதும் தெளிந்து விடும். மூத்தாப்பா மழைக்காகப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். ஒளியாக மின்னும் கிணறு மழையால் நிரம்பி விடும். கோப்பையாலேயே அள்ளிக் குளிக்கலாம்.கறுத்த வானம் அவருக்கு பழைய ஞாபகங்களை ஊட்டியது. உம்மம்மாவும் மழைக்கிணறு போல. அவளுக்குக் குளிர்ச்சியான உடல்.பெரியநீர்தேங்கியகண்கள்.கொஞ்சமென்றாலும் கலங்கி விடுவாளாம். சாம்பலான அவள் தேகமும் கிணற்றின் சுவரைப் போலத்தான். அள்ளி வழியும் நெஞ்சு.கிணறு தான் அவள். அது கடந்தகாலத்து இணைப்பு.இனப்பிரச்சினை காலத்துக்கு முன்பிருந்த செல்வங்களின் கடைசித் தொடர்ச்சி.

கிணறு ஒரு பெண்ணைப் போல உன்னைப்போல என்பார் மூத்தாப்பா.அவரின் நரை முடி அரிசி பேக்கை உம்மா அவிழ்க்கும் போது உருவும் நூல் போல சுருண்டு இருக்கின்றது.

“பொம்புளயப் போலயா”

பெரிய கேள்வி கேட்டு விட்டேன்.

“ஓம்..தண்ணிக்குள்ள இருந்துதானே நாம வாரம். மேகங்கள ஒட்டி பெய்விச்ச மழத்தண்ணி கிணத்துல தங்கிறது போல உம்மாட வயித்துத் தண்ணிக்குல நாம தங்கிறம்”

சொன்னேனே.. மூத்தாப்பாக்கு எல்லாம் தெரியும். எனக்கு என்றால் இப்போதைக்கு தண்மையாயிருக்கிறது. உம்மாவின் வயித்துக்குள் தண்ணி இருக்கு. அதுக்குள்ள நாம இருந்திருக்கம். அதான் முட்டி போல வயிறு சாச்சிக்கும் பெரிசாருக்கு. நான் இருக்கக்குள்ளயும் உம்மாட வய்று இதப்போல இருந்திருக்கும்.

இரண்டு நாட்கள் கழித்து வாப்பா வந்துவிட்டார். நித்திரைக் கண்ணிலிருந்து எழுப்பி சோலாப்புரி சப்பாத்தும்,இழுத்துத் தின்னும் முட்டாசும் தந்தார். எனக்கு மிதப்பது போல இருந்தது. செம்மஞ்சள் நிற பல்ப்பில் அவர் தலைமுடிகள் நெருப்பைப் போல இலங்கிக் கொண்டிருந்தன. பாணிக்குப் பிடிக்காத நெருப்பு. மறுபடியும் கனவிற்குள் சென்றுவிட்டேன்.

காலையில் எழுந்ததும் வாப்பாவின் உற்சாகம் என்னைத் தொற்றிக் கொண்டது.உம்மா குதூகலித்தாள்.மூத்தாப்பா களையிழந்த முகத்தோடு கிணற்றுப் படியில் குந்தியிருந்தார். துக்கம் பீறிட்டு வழிந்த முகத்தின் வெக்கையில் சுற்றி மஞ்சள் பிரவாகித்தது.

“என்ன மூத்தாப்பா தனியரிக்கீங்க”

பேசவில்லை. அமைதியுற்றிருந்தார்.எண்ணங்களை அசைபோட்டுச் சப்பும் பற்கள்,இடுக்கில் சிக்கிக்கொண்ட இறைச்சியாய் உள்ளேயோ வெளியேயோ.எல்லாம் சுலபமாக முடிந்துவிடும்.தூக்கிச் சாத்தி அணைத்து மெல்ல முறுகி...
கிணற்றை இரண்டு கைகளாலும் வருடி முத்தமிட்டார்.

“பாணி நமக்கு இனி கெடைக்காது”

மூத்தாப்பா மருமகனை எதிரியைப்போல பார்த்தார்.

“ரெண்டு நாளையால கிணத்த உடைக்க வருவாங்களாம்”

காதோரம் சிக்கிக் கிடந்த சுருட்டை முடியை கைகளால் பிரித்தவாறு உம்மா சொன்னாள். சீனியால்

செய்யப்பட்ட குவளை வடிவான தின்பண்டத்தை வாயில் திணித்தவாறு அவளை கூர்ந்து நோக்கினேன். அவள் நன்றாக இருக்கிறாள்.தொலைவிலிருந்து மட்டும் குரூரமான குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

அந்த நாள் முடிவதற்குள்ளேயே மூத்தாப்பா வருத்தத்தில் விழுந்தார். அவ்வளவு சீக்கிரமாக நோயில் விழலாமா என்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. கிணத்துத் துக்கமென்றாள் உம்மா. உடம்பெல்லாம் கொதித்தது. கொஞ்சம் ஆறியது.பிறகு அதே கொதிப்பு. காய்ச்சலுக்கும்,துக்கத்திற்கும் நடுவில் நான்.குளிசைகள் போல நாட்கள் கசந்தன.இடை இடையே பஞ்சு இருமல். நெஞ்சைப் பொத்திக்கொண்டு அமர்ந்திருப்பார். வெம்மிய துக்கத்தில் கண்கள் எரிந்தன. ஈக்கள் மொய்த்த பிளேன்டிக் கோப்பைகள் அடிக்கடி மூத்தாப்பாவின் அருகில் தென்பட ஆரம்பித்தன.

நான் மூத்தாப்பாவின் இறப்பு பற்றி சிந்திக்கலானேன். மழைக்காலம் முடிவதற்குள் மூத்தாப்பா இறந்து விடுவார் என்று தோன்றியது. உம்மாவின் மீதெழும் கோபம்.வருவதை உரைப்பதைப் போல எல்லாம் நடந்தன.மூத்தாப்பா மௌத்தாகப் போகிறார் என்றே எண்ணி எண்ணியிருந்தேன்.மற்றவர்கள் என்னைப் போல இல்லை.இயல்பாக இருந்தார்கள். எப்போதும் சோகமான என்னைப் பார்த்து சிரித்தார்கள்.

அன்று பள்ளிவாசல் பெருநாளின் கடைசி நாள். சந்தைக்குச் செல்ல மூத்தாப்பாவை அழைத்தேன். சோர்ந்து போய் என்னை கசிந்து பார்த்தார்.

உம்மாவுக்கும் நெஞ்சுருகியது.கனக்க காலத் தொடர்பை அறுத்து விட்டாள் போலும். அவள் பிறக்க முந்திய உறவு. உம்மம்மாவின் முடியை மூத்தாப்பா பிடித்தபோது. அதற்கும் முந்தி... அனைத்தும் முற்றுப்பெற்றது அவளால்.

மீண்டும் மழை கொட்டியது.மூன்று நாட்களாக நிற்காத மழை.புதிய அறையில் இப்போது தஞ்சமடைந்தோம். மூத்தாப்பா அசைவில்லாது பலகை கட்டிலில் கிடக்கிறார்.தேயிலைச் சாயம் மட்டும் கற்கண்டோடு குடித்தார்.உம்மா பக்கத்து வீட்டு கிணற்று நீரை அவருக்காக அள்ளி வந்தாள்.சைகையால் தேவையில்லை என்றார்.கண்ணுக்குள் சிக்கிய நீரை கையால் அழுந்த உம்மா துடைத்தாள்.

மூன்றாம் நாள் மழை நின்றது. தண்ணீரை நிலம் குடித்தாலும் ஈரம் மேலே கிடந்தது. கிணறு இருந்த இடத்தில் எஞ்சிய சிறு பூமியின் மணலை கொஞ்சமாக சிரட்டையால் தோண்டினேன்.வெள்ளை நீர் ஊறியது. வேகமாக சென்று மூத்தாப்பாவை எழுப்பினேன்.

“புதுக்கிணறு வந்துட்டு”

அவரின் ரப்பைகள் துடித்தன.உதடுகள் காய்ந்த ஒரம் வடிந்த புன்னகை.

“வாங்களன் பாப்பம்”

தள்ளாடி எழுந்தார்.வெறும் கால்களால் வெளியே வந்து வானத்தை கண்டார். நான் தோண்டிக்கிடந்த இடத்தைக் காட்டினேன். அவ்வளவு தான்.

குழியில் ஊறிய தண்ணீரை முகர்ந்தார்.கடற்கரையில் இருந்து எடுத்து வந்து பரப்பிக் கிடந்த மணலோடு கலந்து போன தண்ணீர் உம்மா காய்ச்சும் பாணி போலவே இருந்தது.வயிறு குலுங்கினார்.தண்ணிரை கைகளால் அள்ளி தலையில் ஊற்றினார். நானும் அப்படியே செய்தேன். இனிப்பான பாணி எங்களிலிருந்து வடிந்தது. கால்களை நனைத்தார். மணலை அள்ளிக் குளித்தார்.துள்ளினார்.நானும் கீசிட்டேன்.மூத்தாப்பாவிற்கு எதையோ பெரிதாகக் குடுத்த கொண்டாட்டம். மழைக்கு நன்றி தரையில் சொல்லிக் கொண்டேன். மேகம் ஒரு கயிற்றைப் போட்டு நல்லதை உறிஞ்சிக் குடிக்கும். மேகம் கூட கிணறு.

மூத்தாப்பா அந்த சம்பவத்திற்குப் பின்னால் நீடிக்கவில்லை.மூத்தாப்பா போன பின், நான் பெரியவளாகிவிட்டேன். என் சிறு பிள்ளைத்தனங்கள் மறைய ஆரம்பித்தன. இருந்தும் எண்ணமெல்லாம் பழையதிலேயே நாட்டம் கொண்டன. அங்கேயே தங்கிவிட்டன. மற்றெல்லாம் மாறி விட்டன.ஊ... ஊ... என அடிக்கும் பேய்க்காற்றில் இப்போதெல்லாம் பட்டம் விடுவதில்லை. வீட்டிற்கு பின்னால் கிடந்த படிக்கட்டில் செங்கல் அரைத்துச் சொதி வைப்பதில்லை.நானும் மூத்தாப்பாவும் நடந்து திரிந்த மணல் ஒழுங்கை கொங்கிறீட்டாகியது. சின்னப் பெட்டிக்கடைகள் எல்லாம் பெரிய கடைகளாகின. முன்னர் இருந்த அவற்றின் அடையாளங்கள் முழுதாக மறைந்து விட்டன. இன்னும் கொஞ்ச காலம் என் குழந்தைப் பருவத்தை மூத்தாப்பாவுடன் கழித்திருக்கலாம் என்ற ஏக்கம் என் தொடைகளைக் கீறிக் கீறி இருந்தன.

உம்மாவும் பிறகு உணரத் தொடங்கினாள்.கனிந்து கனிந்து அழத் தொடங்கினாள்.இன்றைக்கெல்லாம் கரண்ட் போய்விட்டால் உம்மா கன்னத்தில் கை வைத்திருப்பாள்.திருமணமான பின் எனது வீட்டார் மோட்டரில் தண்ணி ஏத்திக் குளிப்பது கூட என் கணவனுக்கு கேடாகவே இருந்தது. தண்ணிப்பஞ்சம்.தண்ணீரில் எதுவும் கிடைக்கும். அங்கு இல்லாதது ஒன்றுமேயில்லை.ஆனால் மூச்சை அடைத்து வெறுமனே தாங்கிக்குள் வைத்தால்.. உம்மா அதைத்தானே செய்தாள்.சட்டி,பானைகள் அடிக்கடியான மின்வெட்டு முடியும் வரை நாறிக் கிடக்க ஆரம்பித்தன.

உம்மாவுக்கு இதெல்லாம் நடக்கும் போது என்னுள் மிருகத்தனமான சந்தோசம் ஏற்பட்டது.மனசு குதூகலித்தது.துள்ளியது.கொண்டாடியது.மேலே ஏறியது, பேறு அடைந்தது.இந்த சந்தோசங்கள் வருத்தமில்லாமல் மாறுவதற்கு எனக்கு குழந்தையொன்று பிறக்க வேண்டி இருந்தது.குழந்தை பிறந்ததும் பேத்திக்கான உம்மம்மாவாய் அவள் மாறிப் போனாள். பிறகு கிணற்றைப் பற்றி நினைப்பதில்லை என்றிருந்தேன். கோடைகாலம் முழுவதும் தான். ஆனால் மழை வந்ததும் மீண்டும் எல்லாம் இன்று மாறிப்போயிருந்தது. மூத்தாப்பா மழையெனப் பொழிந்தார்.



ஓவியம் - Egon Schiele

# மாயக்காட்சிகள்

பனி கொட்டிக் கொண்டிருக்கும்
பொழுதுபட்ட நேரம்

வானும் கீழும் ஒன்று போலொரு வண்ணம்

நட்சத்திரமொன்று மின்னியதைக் கண்டேனா?
இல்லை
காற்றின் விசுக்கலில்
வீதி விளக்கின் வெளிச்சத் துண்டொன்று
தவ்விப் பறந்ததோ?

மேல் வீட்டுச் சன்னலால் விழுகிறது
கசங்கிய காகிதக் கைக்குட்டை
Oh là là
இக்கணமே நனைந்து போனதே

வசிப்பிட விண்ணப்பத்திற்காக வரிசையில் நின்ற பாதங்கள்
ஈரம் சுவறி விறைத்து நான் வீழ்ந்த
குளிர் நாளொன்று நினைவில் வருகிறது

அறையில் மெழுகுவர்த்தி நூர்ந்த வாசம்

இனியென்ன?
இமைகள் கற்களைக் கட்டியிழுத்துக் கனக்கின்றன

பயங்கரங்களின் தொகுப்புகளை
சேகரித்த மூளை
இயந்திரத்தைத் திருகத் தொடங்குகிறது

ஈஸ்மன்ட் கலரில்
மாயக்காட்சிகள் திரையிடப் படுகின்றன
எல்லா நாட்களும்
பயங்கரக்காட்சிகள்!

• தர்மினி



தாகத்திற்கு  ஒரு மிடறு
ஒரு வார்த்தை உனது
பிறகு
ஒரு மிடறு
ஒரு வார்த்தை எனது
மாறி... மாறி...
என் தனி நடிப்பிற்குக் கைகளையாவது தட்டு

மறுமொழிகளற்ற
என் கேள்விகள்
சன்னலை உடைத்தபடி பாய்கின்றன
அங்கு கீழே கிடப்பதும்
உன் மூன்றாங்காது தான்

தூரத்தில்
ஒளிர்ந்த புள்ளியொன்று அணைந்து
டப்பென்று வீழ்கிறது

வானத்தில்
வெள்ளிப்பூக்களைச் சுமந்த கப்பல் தடுமாறுகிறதே
கவிழுமா ?

உடைந்து ஒழுகிப் பரவும் நீரைப் போல
ஓடித்திரிகின்றனவே முகில்கள்

ஒன்றுமில்லை
அலுக்காத ஆகாயத்தை வேடிக்கை பார்க்கிறேன்

◇



ஓவியம் - Egon Schiele

# எலும்பை ஊடறுக்கும் குளிர்கால நினைவுகள்

சி.புஷ்பராணி



யன்னலின் வழியாக வெய்யிலின் ஒளி தகதகத்தது. குளிர் காலத்துக்குரிய இருள் மூட்டத்தின் சாயல் துளி கூட இருக்கவில்லை. மெல்லிய ஜக்கட் ஒன்றைப் போட்டுக்கொண்டு கீழே இறங்கிவிட்டேன். குளிர் எலும்பின் வழி உள்நுழைந்து உதற வைத்தது. திரும்பிப்போய் தடித்த ஜக்கட் மாற்ற நேரமில்லை. மடைச்சி நான்,யன்னலைத் திறந்து குளிருகின்றதா என்று பார்த்திருக்கவேண்டும். பிரான்சுக்கு வந்த புதிதில் வெளியே வெய்யில் வந்துவிட்டது என்று எண்ணி சாதாரண ஆடையுடன் வெளியில் போய் ,குளிர் தாங்கமுடியாமல் பல தடவைகள் வீடு திரும்பியிருக்கின்றேன். அவசரமான வேளைகளில் இது பற்றியெல்லாம் நான் யோசிப்பதேயில்லை. இன்று முக்கியமான அலுவல் பிந்திப்போனால் இன்னும் நாட்களைத் தள்ளிப்போட்டுவிடுவார்கள். பறக்காத குறையாக பஸ்ஸைப் பிடிக்க ஒடினேன் .மென்மையான குளிராயிருந்தால் ஒருவாறு தாங்கிக்கொள்ளலாம்; ”ஆ... இப்படிக் குளிருகின்றதே...” கைகளால் ஜக்கட்டை இறுக்கிப்பிடித்துக்கொண்டே பஸ்ஸில் ஏறியமர்ந்தேன்.. கழுத்தைச் சுற்றிக்கட்டும் துணியும் இலேசாகவிருந்ததால், இன்னும் குளிராயிருந்தது..பஸ்ஸினுள் கணகணத்த வெப்பம் இதமாயிருந்தது. திரும்ப இறங்கி அதிகதூரம் நடக்கவேண்டுமென்ற நினைப்பே குளிர் ஏறி விறைக்கவைத்தது. ஜக்கட்டே குளிர்பரவி அதிகமாக நடுங்கியது.

குளிர் உடலைத் துளைக்கும்போது, என்னையறியாமல் பழைய ஞாபகங்களில் அமிழ்ந்து சின்னாபின்னமாகிவிடுகின்றது மனம். ஒரு நாளா இரண்டுநாட்களா ... எத்தனை இரவுகள் வெறும் நைட்டியுடன் விறைக்க விறைக்க வெளியில் துடித்துப் போயிருக்கின்றேன்.மறக்க எண்ணினாலும் நடுங்கும் குளிரின் ஒவ்வொரு தருணங்களும் அந்தக் கொடுமையான சம்பவங்களால் இப்போதும் சில்லிடும் குளிர், உணர்வை உடலெங்கும் பரவி விறைக்க வைக்கின்றன. அப்போது நாம் வசித்த வீடு நிலத்தோடு அமைந்த மிகப்பழைய வீடு. இரண்டு அறைகள் கொண்ட வீட்டை, வீட்டின் சொந்தக்காரன் மேல்பூச்சுப் பூசி ஏமாற்றித் தந்திருக்கின்றான்.(வாடகைக்குத்தான்) கொஞ்ச நாட்களிலேயே ஒர் அறை, குளிரில் இளகி வெடிக்க ஆரம்பித்து. ஒருநாள் அதன் மேல்பகுதி உடைந்து விழுந்துவிட்டது.

சமையலறையோடு சேர்ந்திருந்த ஒரு பகுதிமட்டும் பின்னர் எம்மால் பாவிக்கப்பட்டது.அங்கும் குசினிப்பக்கம் நிலத்தில் தண்ணீர் ஊறி



ஓவியம் - Egon Schiele

அதிகப்படியான குளிரைத் தந்தது. சுவர்களிலும் குளிர் சுவறி மின்சாரம் சரியாக வேலைசெய்யவில்லை. உள்ளேயிருந்த அறையில் மட்டும் மின்சாரம் இருந்தது.உஷ்ணமூட்டியும் அந்த அறையிலேயே பூட்டப்பட்டிருந்தது. குசினி குளிரூட்டியைக்காட்டிலும் ,மோசமான குளிரில் உறைந்துபோனது. கீழே எந்தநேரமும் நீர்க்கசிவு வேறு.எனக்கு அதைத் துடைப்பதே பெரும்வேலையாகவிருந்தது. ஸ்வெட்டர் போட்டுக் காலுக்குத் தடித்த காலுறை போட்டுக்கொண்டு நான் சமையல் வேலைகளைக் கவனிப்பேன்.அப்படியிருந்தும் என் உடல் குளிரின் ஆக்கிரமிப்பிலேயே இருந்தது. எப்படி அந்தக் குளிரில் நின்றுபிடித்தேன் என்று நினைத்துப் பிரமித்துப்போகின்றேன்.

அதே நேரம் என் கணவனாயிருந்தவன் சொகுசாகக் கட்டிலில் சாய்ந்து ,உஷ்ணமூட்டியின் கதகதப்பில் நன்றாகப் போர்த்துக்கொண்டு டிவி பார்த்துக்கொண்டிருப்பான். வாய்க்கு ருசியாக விதம்விதமாகச் சமைக்காவிட்டால் அட்டகாசம் பண்ணி எல்லாவற்றையும் தூக்கியடிப்பான். ஒரு கணம்கூட அவனுக்கு என்மீது இரக்கமே வந்தது கிடையாது. இவனுட்பட எல்லோரும் குளிக்கும் போதெல்லாம் அடுப்பில் தண்ணீர் கொதிக்க வைத்துக் கொண்டுமிருக்க வேண்டும். களைப்பதற்கே எனக்கு அவகாசம் கிடைத்ததில்லை.

மின்சாரம் சரியாக வேலைசெய்யாததால் துவைக்கும் மெஷினும் வீட்டில் பொருத்தவில்லை. வீட்டுக்கு அண்மையில் துணி கழுவும் மெஷின்கள் உள்ள கடையும் கிடையாது. கைகளைச் சிலிர்க்க வைக்கும் குளிர். விறைப்போடு எல்லோருடைய துணிகளையும் கழுவுவேன் .தன்னுடைய உள்ளாடைகளைக் கூடக் கழுவாதவன் எனக்கு உதவவா போகின்றான். ஸ்வெட்டர், காற்சட்டை போன்றவற்றை நீரில் அமிழ்த்தியவுடனே அவை மிகப் பாரமாகிச் மிகச் சிரமத்தைக் கொடுக்கும். வாளிக்குள் வைத்துக் கழுவ முடியாததால் ,குளிக்கும் தொட்டியில் நீர் நிரப்பிக் கழுவுவேன். பெரிய படுக்கை விரிப்புக்களைப் பிழிவது என் சக்திக்கு மீறியதாகிவிடும். சில தடவைகள் அவற்றைப் பிழிய உதவும்படி இவனைக் கூப்பிடுவேன் 'வை பிறகு பிறகு பிழிந்து தருகின்றேன்' என்று மனதில் கொஞ்சம் கூட ஈரமில்லாமல் சொல்லிவிடுவான்..எனவே நானே முக்கித்தக்கிப் பிழிந்து விடுவேன்.

பிள்ளைகள் இருவரின் பள்ளிக்கூடமும் வெகு தூரத்திலேயே இருந்தது.நான் தான் தினமும் கூட்டிப்போவேன். கொஞ்சம் இயலாத நேரங்களில் பிள்ளைகளைப் பள்ளியில் விடும்படி கெஞ்சியிருப்பேன். முடியாது என்று மறுத்துவிடுவான் 'அது உன் வேலை' என்று ஆண் திமிருடன் பேசுவது இவனுக்கு வாய்ப்பாடாயிருந்தது.பேருக்குத்தான் கணவன்-தந்தை என்று இருந்தானே தவிர அவனுடைய விரல் கூட எந்த உதவிக்கும் அசைந்ததேயில்லை. கொஞ்ச நாட்கள் ஒர் உணவகத்தில் வேலை

பார்த்துக்கொண்டிருந்தான்.' வேலை முடிந்து களைப்போடு வருவேன் பியர் வாங்கி வை' என்ற கட்டளை வேறு. வாங்கிவைக்காவிட்டால் பெரிய பிரளயமே நடக்கும். பிள்ளைகளின் பள்ளிக்குப் பக்கத்தில் ஒரு பலசரக்குக்கடை இருந்தது.வேறு கடைகள் மிகவும் தூரத்திலிருந்ததால், அந்தக் கடையிலேயே அதிக விலைகொடுத்து பியர் வாங்கி வைப்பேன். எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு என்னால் ,இரவில் குடித்துவிட்டு இவன் பண்ணும் அக்கிரமங்களைத் தாங்க முடியாமல் நொறுங்கித் தவித்தேன்.மேலதிகமாக ஒரு போத்தல் வைனும் குடிப்பான் .வைன் குடித்தவுடன் இவன் உடல் தினவு உச்சிக்குப் போய்விடும்.

தொடர்ச்சியாக இவன் பண்ணும் கூத்துக்களால் என் பொறுமை எல்லைமீறிய ஒரு நாளில், "எடடா கையை" என்று ஆவேசமாகக் கத்திவிட்டேன். அக்கணமே அவன் என் முகத்தில் ஓங்கிக் குத்திய குத்தில் ,என் வாயிலிருந்து இரத்தம் வழிந்தது. குழந்தைகளான மகனும், மகளும் ஏதுமறியாது தூங்கிக்கொண்டிருப்பார்கள் .'போடி வெளியே' என்று கதவைத் திறந்து என்னை வெளியில் விரட்டிய கொடுமை பிறகு தொடர்கதையானது. குளிர் நிறைந்த மாதங்களவை .வெறும் நைட்டியோடு ,காலில் செருப்புக்கூட இல்லாமல் வெடவெடத்துக்கொண்டு வெளியில் நிற்பேன். கதவைத் தட்டிக்கொண்டு திறக்கும் படி அழுது கெஞ்சுவேன். காலையில் தான் கதவைத் திறப்பான்.என்னை அடிக்கடி வெளியில் விடுவது இவனுக்குக் குரூர விளையாட்டாகிவிட்டது.

குளிரில் அதிக நேரம் கால்கள் விறைக்க வேதனைப்படுவது பொறுக்க முடியாமல் திறப்பு அடிக்கும் கடையில் சாவி கொடுத்து இன்னொரு சாவியைப் பெற்றுக்கொண்டேன். இதை இவனுக்குத் தெரியாமல் மறைத்துவைத்தேன். அப்போது வீட்டில் டெலிபோன் வசதியில்லை. கைத்தொலைபேசியும் இல்லாத காலமது. யாருக்காவது தொலைபேச வேண்டுமென்றால் ஒரு வெட்ட வெளியில் இருந்த டெலிபோன் பூத்துக்குப் போய்ப் பேசவேண்டும். இதுவும் நாமிருந்த வீட்டுக்குக் கொஞ்சம் தூரத்திலேயே இருந்தது.இரவானால் இங்கு ஆள் நடமாட்டமே இருக்காது. ஒரு டெலி கார்டையும் வாங்கி ஒளித்து வைத்தேன். பிறகு வந்த நாட்களில் இரவானவுடன் திறப்பையும், டெலிகார்டையும் என் உள்ளாடைக்குள் மறைத்து வைப்பது வழக்கமானது .

மனைவியாகவிருந்தாலும், அவள் விருப்பமின்றி அவள் உடலைப் பலவந்தமாக ஆக்கிரமிப்பது என்பதும் ஆண் செருக்கின் வெளிப்பாடு என்பதை இவனைப்போன்றவர்களால் ஒருக்காலும் உணரவே முடியாது. தன்மீது அன்பும் இரக்கமும் காதலும் இல்லாத ஒருவனை எந்தப்பெண்ணாலும் சகிக்கவே முடியாது. வெறுப்போடு சேர்ந்த அருவெருப்பே மிஞ்சி நிற்கும். இப்படி ஒருநாள் வெளியில் நின்றபோது, குளிர் தாங்கமுடியாமல் விறைத்துப்போய்விட்டேன். உடல் வெடவெடத்து நடுங்கியது சதையைத் தாண்டி எலும்புக்குள் பாய்ந்த குளிர் எல்லை கடந்த கோபத்தைத் தர,மெதுவாகக் கதவைத்திறந்து, உள்ளேபோய் வாசலில் கிடந்த செருப்பொன்றைக் கையிலெடுத்து அடி மேல் அடி வைத்துக் கட்டிலுக்குக் கிட்ட நின்று ,வாயைத் திறந்துகொண்டு குறட்டையொலியுடன் தூங்கிக்கொண்டிருந்தவன் மீது ஆத்திரம் தீருமட்டும் ஓங்கியோங்கிச் செருப்பால் அடித்தேன். அவன் திடுக்கிட்டு அசைந்தான். மின்னல்வேகத்தில் வெளியே ஓடி , டெலிபோன் பூத்துக்குப் பின்னால் மறைந்திருந்து நோட்டமிட்டேன். வீட்டுமுற்றத்தில் நின்று அவன் என்னைச் சுற்றுமுற்றும் பார்த்துத் தேடுவது நிழலாகத் தெரிந்தது..மறுநாள்.... இவன் என்னைப்போட்டு அடித்த அடி இப்போது நினைத்தாலும் வலிக்கின்றது.

இரவில் வெறிபிடித்தவன்போல் இவன் போடும் சத்தத்தில் மகள் தூக்கம் குழம்பியெழுந்து வீரிட்டு அழுவாள். இதனால் வெளியே என்னை விரட்டும்போது மகளையும் தூக்கிக்கொண்டு ஒடுவேன். கொஞ்சம் சாமம் கடந்தபின் குளிர் தாங்கமுடியாமல் கதவைத் திறந்து பார்த்தால், கட்டிலுக்குக் குறுக்காகப் படுத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருப்பான். மகன் தூங்கிவிட்டால் எழுப்புவதே சிரமம். எதுவும் தெரியாமல் என் பிள்ளை தூங்கிக்கொண்டிருப்பான். மகள் என்னைப்போல, சிறு அசைவுக்கும் விழித்துவிடுவாள்.மகளுக்குக் குளிர் பிடிக்கப்போகின்றதே என்ற கலக்கத்தில் மெல்ல வீட்டுக்குள் போய் கீழே உட்கார்ந்து மகளை மடியில் வைத்துக்கொண்டு தூங்கிவழிவேன். விடியும் தருணத்தில் வெளியே போய் நின்றுவிடுவேன். எப்படி உள்ளே வந்தேன் என்று சந்தேகம் வரக்கூடாது என்ற எச்சரிக்கைதான்.

இதுவும் நீடிக்கவில்லை.அவன் தூங்காமல் விழித்திருந்து, என்னை வெளியில் விடுவதிலேயே குறியாகிவிட்டான். எனக்கு அப்போது பற்றீசியா, தையெப் என்ற நல்ல நண்பர்கள் இருந்தார்கள். குளிர் பொறுப்பது என்பது முடியாமல் போனபோது டெலிஃபோன்

பூத்துக்குப் போய் அவர்களுக்குத் தொலைபேசி அழுவேன். கொஞ்ச நேரத்திலேயே அவர்களுடைய சிவப்பு வாகனத்தில் வந்து சேர்வார்கள். பிள்ளைகளையும்,என்னையும் அவர்கள் வீட்டுக்கு அழைத்துப் போவார்கள். மறுநாள் வீட்டில் கொண்டுவந்து விடுவார்கள்.என்னிடம் இன்னொரு திறப்பு இருப்பதை எந்தக்கணத்திலும் அவன் அறியாது ஒளித்துவைப்பதே வேலையாகிவிட்டது.

இவர்களுக்கு எந்நேரமும் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்பதை மனதில்கொண்டு வெளியில் நிற்கும் சிலநாட்களில், என் சகோதரன் புஷ்பராஜாவுக்குத் தொலைபேசுவேன். அவ்வளவுக்கு என்னால் குளிரின் தாக்கத்தைத் தாங்கமுடியவில்லை. அவனும் ,மனைவியுடன் வந்து எங்களை அழைத்துப்போவதும் பழகிப்போய்விட்டது. பக்கத்தில் வசிக்கும் ஆட்கள் எட்டிப்பார்த்தது அவமானத்தைத் தந்தது. பகல் பொழுதுகளில் அவர்களை நிமிர்ந்து பார்க்கவே கூசினேன்.இவனுக்கு எந்த வெட்க-துக்கமும் கிடையாது. இப்படித்தான் ஒருநாள், நான் மகளை இடுப்பில் வைத்துக்கொண்டு வெளியில் நின்றபோது இவன் யன்னலைத் திறந்து பாத்திரங்களை எம்மீது வீசினான். மகள் அலறி அழுதாள். பக்கத்து வீடுகளிருந்து யாரோ போலீசுக்கு அறிவித்துவிட்டார்கள். போலீஸ் வாகனம் வந்து வீட்டின்முன் நின்றது .அதிலிருந்து இறங்கிய போலீசார் கதவைப் பலமாகத் தட்டினார். கதவைத்திறந்து இவன் எட்டிப்பார்த்தான். பிறகு போலீசார் அவனைத் தரதரவென்று இழுத்து வந்தனர். இதைப்பார்த்த நான் ,அவனை எதுவும் செய்யவேண்டாமென்று கெஞ்சினேன். போலீசார் திரும்பிப்போய்விட்டனர். பின்னாளில் என்னுடைய இந்த மடத்தனத்தையெண்ணி வருந்தியிருக்கின்றேன். நாளுக்கு நாள் இவனுடைய அக்கிரமம் அதிகரித்து என்னைப் பேதலிக்க வைத்தது.

இவனால் எனக்கு எந்த உதவியும் கிடைத்ததேயில்லை. தந்தை என்ற பாசத்தோடு பிள்ளைகளை அரவணைத்தது கிடையாது. நான்கு வயதான மகனைக் கண்டபடி அடிப்பான். இதை மகன் இப்போதும் நினைவு கூறுவான். எப்போதும் பயந்தபடியிருந்த இருந்த மகன் படுக்கையிலே சிறுநீர் கழிக்க ஆரம்பித்தான். ஒரு நாள் மகன் கட்டிலில் சிறுநீர் கழித்துவிட்டான் என்று கீழே தூக்கியெறிந்தான் இந்தக் கொடியவன். அலறிக்கொண்டே கீழே விழுந்த மகனை நான் வாரியணைத்தபோது என்னைக்காலால் உதைத்தான். ஒரு நாள், மகன் சாப்பிட அடம்பிடித்தபோது ,கட்டிலில் படுத்திருந்த இவன் எட்டியுதைத்தான் .வாயில் உணவுடன் வீரிட்ட மகனின் கோலம் இன்னும் ஞாபகத்தில் எட்டிப்பார்த்து மனதைப் பிசைகின்றது.நானும் பிள்ளைகளும் இவனிடம் பட்ட சித்திரவதைகள் கொஞ்சநஞ்சமல்ல.

நான், கைகளால் குளிர் தண்ணீரில் உடுப்புத் தோய்ப்பதைக் கவனித்த பற்றீசியாவும், தையேப்பும் கூடையுடனேயே எமது அழுக்கு ஆடைகளை அவர்கள் வீட்டுக்குக் கொண்டுபோய் கழுவித்தர ஆரம்பித்தார்கள் .இது பெரும் நெகிழ்ச்சியை எனக்குத் தந்தது. இரத்த உறவுகள் கூட இப்படிச் செய்யமாட்டார்கள். சமையல் எரிவாயு முடிந்தால் ,அதை வாங்க இருவரில் ஒருவர் என்னோடு வருவார்கள். தையெப்பே சிலிண்டரைப் பொருத்தியும் தருவார். ஒரு மகாராசன் போல இவன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பான். இந்த இரண்டு பேரையும் நண்பர்களாகப் பெற்றது பெரிய வரமாகும். இவர்கள் உண்மையான அன்பு என்றால் இதுதான் என்பதை உணர வைத்த அன்புத் தோழர்கள் .

கிறிஸ்துமஸ் காலம் ஆரம்பித்துவிட்டது .விடிந்தால் கிறிஸ்துமஸ்.பிள்ளைகள் இரண்டுபேரும் தொலைக்காட்சியில் காட்டப்படும் விளம்பரங்களில் வரும் விளையாட்டுப்பொருட்களையெல்லாம் வாங்கித்தரும்படி, பட்டியல் போட்டார்கள்.'எனக்குப் பிளேன் வேணும்-இது மகன். 'எனக்கு பார்பி--இது மகள்'சரி சரி வாங்கித்தருகின்றேன்' என்று பொய்யான வாக்குறுதி கொடுத்தேன். அம்மா வாங்கித்தருவா என்ற நிறைவுடன் இருவரும் தூங்கிவிட்டார்கள் .தகிக்கும் மனதுடன் தூங்காமல் இருந்தேன்.

சரியாகப் பன்னிரண்டு மணி.படபடவென்று கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. திறந்து பார்த்தால் தேவதூதர்கள் போல பற்றீசியாவும் தையெப்பும் கைகளில் பார்சல்களுடன் புன்சிரிப்புடன் கனிவாக நின்றிருந்தார்கள். பேச எதுவும் தோன்றாமல் ,திகைப்பு மாறாத மகிழ்ச்சியுடன் அவர்களை உள்ளே கூட்டிவந்தேன். பிள்ளைகளும் எழும்பிவிட்டார்கள். மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பார்சல்கள் பிரிக்கப்பட்டன. மகளுக்கு ஒரு பார்பி பொம்மையும் சட்டையும், மகனுக்கு ஒரு ஹெலிஹொப்டரும் உடுப்பும், எனக்கு ஒரு சட்டை, இவனுக்கு ஒரு சேர்ட். மேலதிகமாக ஒரு மின்சார வெப்பமூட்டியும். இருவரையும் அணைத்துக் கண்கலங்கினேன்.பிள்ளைகளின் மகிழ்ச்சி சொல்லும் தரமன்று.இவர்களின் நட்புக் கிடைக்காதிருந்தால் இறுக்கமான அன்றைய நாட்களின் கனதியில் என்னவாகியிருப்பேனோ தெரியாது.என் குடும்பத்தவர்களைக் கண்டால் சிடு மூஞ்சியாகிவிடும் இவன் பற்றீசியா தையெப்புடன் நன்றாகவே பழகியது பேரதிசயம்.

குளிர்காலம் எப்போது தொடங்கினாலும் இந்தக் குளிர் நினைவுகள் புத்துயிர் பெற்று என்னைத் துரத்திக்கொண்டேயிருப்பதைத் தவிர்க்க முடியவில்லை. அகந்தை கொண்ட ஒர் ஆணின் அத்துமீறலான இன்னல்களுக்கு ஆளான என் கதையின் ஒரு சிறு பகுதியைத்தான் இங்கு குறிப்பிட்டுள்ளேன்.முழுவதையும் படிக்கும்போது அதன் உணர்வுகள் உங்களையும் அலைக்கழிக்கும் என்பது எனக்குத் தெரியும்.

(எழுதிக் கொண்டிருக்கும் புத்தகத்தின் ஒர் அத்தியாயம்)

# Gilet Jaune
# கிளர்ச்சிக்கான கொதிநிலை

லக்ஷ்மன் வித்யா



பெற்றோல் விலை உயர்வைக் கண்டித்துத் தொடங்கிய 'மஞ்சள் அங்கி'(Gilet Jaune) எனும் மக்கள் போராட்டம், பெற்றோலைப் போலவே ஏனைய மக்களின் பிரச்சினைகளிலும் பற்றிக்கொண்டு எரிகிறது. 2018 நவம்பர் 17 இல் கிட்டத்தட்ட மூன்று இலட்சத்திற்கும் அதிகமான மக்களோடு தொடங்கப்பட்ட போராட்டம், இப்போது மூன்று மாதங்கள் தாண்டியும் அதிகமான கைதுகளிற்குப் பின்னரும் அதே வீச்சோடு தொடர்கிறது. முக்கியமாக அரச அதிபர் பதிவி விலக வேண்டுமென்ற குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன.

'பெருநிறுவனப் பிரபுக்களோடு சேர்ந்த மக்களை இப்படி வீதியில் இருத்தி விட்டீர்களே, மக்ரோன்!' என்ற கோஷம் அரச மாளிகையை உலுப்பியெடுக்கிறது.

இந்தப் போராட்டங்கள் ஃபிரான்ஸிற்கும் ஐரோப்பாவிற்கும் மட்டுமல்ல சர்வதேச அளவிலும் ஒரு முக்கியமான திருப்புமுனையாக மாறியிருக்கிறது. அயல்நாடுகளில் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் நிகழத்தொடங்கி விட்டன.

இச்சமூகப் போராட்டங்களது வெடிப்பானது வர்க்கப் போராட்டம் புத்துயிர் பெற்றுள்ளதைக் குறிக்கிறது. குறிப்பாக சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டதிற்குப் பின் கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களில் இன்னும் குறிப்பாக 2008 பொறிவுக்குப் பின்னான காலத்தில் சமூக முரண்பாடுகள் பெருமளவிலான பெருக்கத்தைக் கண்டிருக்கின்றன. திகைப்பூட்டும் சமூகச் சமத்துவமின்மை, மக்களின் ஒரு சிறு சதவீதத்தினரிடம் குவியும் செல்வம், வறுமை, முதலாளித்துவ சமூகத்தின் அழுகல் தன்மைகள் அனைத்தும் வெடித்து மேற்பரப்பிற்கு வந்து கொண்டிருக்கின்றன.

முதன் முதலாக 'Pricillia Ludosky' என்ற பெண்மணி ஃபிரான்ஸில் அதிகரித்துக் கொண்டு செல்லும் எரிபொருள் விலையேற்றத்தை எதிர்த்து இணையதளங்களில் பதிவு செய்து தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார், அதற்குப் பொதுமக்களின் ஆதரவை வேண்டினார். வாகனத்திற்குள் மஞ்சள் அங்கியை வெளியே தெரியும் படி வைத்து எதிர்ப்பைத் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொண்டார். சமூக வலைத்தளங்கள் செய்திகளை ஒவ்வொருவருக்கும் கொண்டு சென்றன. செய்தியையும் அதிலுள்ள நியாயத்தையும் பொதுமக்களால் புரிந்து கொள்ள முடிந்தது. எந்த அரசியல் பின்னல்களுமின்றி மக்கள் வீதிகளுக்கு வந்தனர். அரசை நோக்கி அடிப்படைகளைப் பேச ஆரம்பித்தனர்.

இரண்டாம் கட்டமாக 2018 நவம்பர் 24 இல் பரிஸ் நகரின் முக்கியமாக தெருக்களில் ஒன்று கூடி அறுபதினாயிரம் மக்கள் தங்கள் கோரிக்கைகளை உரக்க எழுப்ப, பலரும் 1789இல் மக்களால் நடத்தப்பட்ட ஃபிரஞ்சுப் புரட்சியை ஞாபகப்படுத்தினர்.

அத்தியாவசியப் பொருட்களின் மதிப்புக் கூட்டு வரி ரத்து செய்ய வேண்டும் என்பதோடு ஓய்வூதியம், சமூக உதவிகளின் பரவலாக்கல்,

செல்வந்தர்களுக்கான சொத்து வரியை அமுல்படுத்துதல் போன்ற பல பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டி நின்றது மக்கள் கூட்டம்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான முதலீடுகளுக்கு நிதி தேவைப்படுவதால் எரிபொருள் மீது அதிகப்படியான வரி விதிக்கப்படுவதாக மக்ரோன் அரசு கூறியது. நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்திருத்தப் போவதாகக் கூறிக் கொண்டு ஆட்சிக்கு வந்த அதிபர், இந்த விலை உயர்வைக் கண்டுகொள்ளாமலும், வரி உயர்வை நியாயப்படுத்துபவராகவும் மாறிவிட அரசுக்கெதிரான மக்களின் எதிர்ப்பும் கொந்தளிப்பும் அசுர வேகம் பிடித்தன

அவசரநிலைப் பிரகடனம் அறிவிக்கப்படலாமென்ற அச்சம், குறிக்கப்படும் ஒவ்வொரு போராட்ட நாளுக்கு முதல் நாள் உருவாகிவிடுவது இயல்பாகிப் போனது.

'இங்கிருப்பது அரசாங்கம் அல்ல. அவர்கள் எல்லோரும் வங்கியாளர்கள். மக்களின் நலனைக் கருதாதவர்கள். இலாபம், இலாபம், இலாபம் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவர்கள். இந்த அமைப்பு தூக்கி எறியப் பட வேண்டும். ஒரு புதிய பாராளுமன்றம் வர வேண்டும். அதில் பணக்காரர்களையும், ஏழைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவோர் அமர்ந்திருக்க வேண்டும். அதுவே மக்களில் பலரது விருப்பமும். இது நடக்காது என்பதில்லை. மக்ரோன் என்ன வேண்டுமானாலும் நினைக்கட்டும்' என்பது போன்ற மக்களின் வெறுப்பெண்ணங்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே செல்கின்றன.

இப்போராட்டக்காரர்களின் இடைவிடாத ஆவேச அலையினால் ஆட்சி தூக்கி எறியப்படலாமென்ற அச்சம் அதிகார மட்டத்தில் மெல்ல மெல்ல எழுந்தது.

கிட்டத்தட்ட எழுபது வீதமான ஃபிரெஞ்சு மக்களின் ஆதரவோடு தொடங்கப்பட்ட போராட்டம் நாட்டின் அனைத்து மக்களையும் சென்று சேர்ந்து அவர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளுக்கெதிரான போராட்ட மனநிலையைக் கிளப்பிவிட்டிருக்கிறது. பாடசாலை மாணவர்கள் அரசுக்கெதிராகப் போர்க் கொடி பிடிக்க, அந்த மாணவர்களைச் சிறைப்பிடித்து ஒரு பயங்கரவாதச் செயற்பாட்டுடன் ஒப்பிடுமளவுக்கு ஃபிரஞ்சுக் காவல்துறை நடந்து கொண்ட விதம் சமூக வலைத்தளமெங்கும் வைரலாகியிருந்தது.

நாளுக்கு நாள், குறிப்பாக ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மக்கள் கூட்டம் தெருக்களில் பெருகியபடி இருந்தது, இருக்கிறது.

'மக்களின் போராட்டக் குணத்தைப் பார்க்கும் போது நானொரு ஃபிரஞ்சுக்காரன் என்பதில் தற்போது பெருமை அடைகிறேன்' எனச் சமூக விஞ்ஞானி 'எம்மாவல் தொட்' பெருமிதம் கொள்ள, படிப்படியாக இந்த மனநிலை பரவலாக எல்லாத் தரப்பிலுமிருந்தும், எல்லாத் தலைவர்களிடமிருந்தும் வரத் தொடங்கியிருக்கிறது.

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள்



போன்ற முகமூடிகளை அணிந்து பெருநிதியச் சர்வாதிகாரத்தை நிறுவும் சதியில் உலக மக்கள் அனைவரும் அகப்பட்டிருக்கிறார்கள் என வெளிப்படையாகப் போராட்டக்காரர்கள் தெருக்களில் நின்று முழக்கமிட்டனர். அரசாங்கத்தின் ஆட்சியைக் கவிழ்க்கும் ஒரு புரட்சிகர மக்கள் கூட்டத்தாலே மாற்றியமைக்க முடிந்தாலொழிய, இந்த ஒழுங்கு இனி மாறப் போவதில்லை என்ற எண்ணம் கற்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கப்படுகிறது.

'1789 ஜூலை 14, பாஸ்டிலைக் கைப்பற்றிய தினம் தான் புரட்சி இடம்பெற்ற சுதந்திர தினம். அதன் பின் தான் நிலமானித்துவ அறிஸ்டோகிராட்டுகளின் பிரதிநிதியான லூாயிஸ் தலை வெட்டப்பட்டான் என்பதை மக்ரோன் மறந்துவிடமாட்டார். பாசிச பெத்தானுக்கு மக்ரோன் சலூட் அடித்துக் கௌரவிக்கிறார். அப்படியெனில் தந்தையர் தினத்தில் பின்லாடனுக்கும் சலூட் பண்ணியிருக்கலாமே. அவனும் பத்துக் குழந்தைகளைப் பெற்று வளர்த்தவன் தானே. மக்ரோன் எமக்கெதிராக பாசிசத்திற்கு அழைப்பு விடுக்கிறார். ஞாபகப்படுத்துவதற்காக இறுதியில் ஒன்றைக் கூறுகிறேன், மக்களின் வாழ்வுக்கு சம்பந்தமில்லாத முடிவுகளை எடுத்துப் பெரும் நிலப்பிரபுகளுக்கு சலுகை அளித்த பதினாறாம் லுயினுடைய தலை வெட்டப்பட்டதை மறந்துவிடவேண்டாம்' என முன்னாள் ஃபிரஞ்சு இராணுவ சிப்பாயாகப் பணிபுரிந்த ஒரு பெண், தான் ஒரு குடும்பப் பெண்ணாக - தாயாக எவ்வளவு கஷ்டப்படுகிறேன் என்பதை ஆத்திரத்துடன் தெளிவுபடுத்துகிறார்.

'இச்சதியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான வழியொன்று எங்கேனும் தென்படுகிறதா?' என்ற கேள்வி சில ஆண்டுகளாகப் புத்திஜீவிகள் மத்தியிலே ஏக்கமாக உருவாகியிருந்தது. பலர் இந்நிலை பற்றிக் கவலையை வெளிப்படுத்தியிருந்தார்கள். அது இன்று நிறைவேறத் தொடங்கியிருக்கிறது.

அரசுகள் என்பவை பெருநிதியங்களுக்குச் சேவைசெய்யும் நிலைக்குள் தள்ளப்பட்டுவிட்டன. அரசாங்கங்கள் அதற்குத் தரகு வேலை செய்கின்றன. இத்தரகர்களின் கருவிகளாக மீடியாக்கள் இயங்குகின்றன. ஃபிரெஞ்சுத் தொலைக்காட்சிகள் மக்களின் போராட்டத்திலுள்ள அடிப்படை நியாயங்களைக் காட்ட விரும்புவதில்லை. மாறாக அவற்றை வன்முறையாக சேதப்புள்ளி விபரங்களாகச் சித்திரிக்கின்றன. குறிப்பாக, பரிஸில் இதுவரை ஆறு மில்லியன் ஈரோ அளவிற்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக நகரசபை குறை சொல்லத் தொடங்கியிருக்கிறது.

இவை கடந்து,சில சர்வதேசத் தொலைக்காட்சிகளும் முக்கியமாக சமூக வலைத்தளங்களுமே செய்திகளின் உண்மைத்தன்மையைக் கோடிடுகின்றன.

தங்களின் இறைமையை இழந்து என்றுமில்லாதவாறு உலக மக்கள் பெருநிதியங்களின் அடிமைத்தனத்திற்குள் அகப்படும் இந்த முக்கியமான கட்டத்தில் தான் போராட்டம் வெடிக்கத் தொடங்கியிருக்கிறது. ஒரு மக்கள் கூட்டம் இறுதிவரை போராடுவோம் என்று பொங்கியெழுந்து நிற்கிறது. பச்சை பச்சையாக மீடியாக்கள் பொய்களை வார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாம் முடிந்து விட்டது, கிளர்ச்சியாளர்கள் களைத்து விட்டார்கள், எஞ்சியிருப்பவர்கள் வெறும் வன்முறையாளர்கள் என்பதை மீறி அரசாங்கம் ஆட்டம் காண்கிறது.

ஆனால், இங்கு மட்டுமல்ல உலகமெங்கும் அது அப்படி இருக்கவில்லை. குறிப்பாக, ஈரானில் வெகுசன ஆர்ப்பாட்டங்கள், ஜேர்மனியில் தொழிற்துறை தொழிலாளர்களது, ஐக்கிய இராட்சியத்தில் விரிவுரையாளர்களது , அமெரிக்காவில் ஆசிரியர்களது வேலைநிறுத்தங்களுடன் இலத்தீன் அமெரிக்கா, தென்கொரியா, கிரீஸ், சிலி, மற்றும் ஆசியாவிலும் சமூக எதிர்ப்பின் கணிசமான வெளிப்பாடுகள் அண்மைக் காலங்களில் வெளிவந்திருக்கின்றன.

சமாந்தர மீடியாக்களில் கிளர்ச்சிக்காரர்கள் வெளிப்படுத்தும் கருத்துகள் அவர்கள் எதையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது. போராட்டம் தொடங்கப்பட்ட 2018 நவம்பர் 17ம் திகதியின் பின்னர் மக்ரோன் அரசினுடைய செல்வாக்கு 21வீதத்திற்குச் சரிந்து போனது. 1968ல் ஏற்பட்ட பொது வேலைநிறுத்தம் போன்றதொரு நிலை உருவாகுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருந்தது. இன்றும் அதே நிலை தான். ஆனால் ஆரம்பத்தில் கலந்து கொள்ளப்பட்ட இலட்சக்கணக்கான மக்கள் இன்று தெருக்களில் இல்லை. ஆனால் தொடர்கிறது. ஒரு பெரும் போரைப் போல தன் மக்கள் கூட்டத்தின் மீது அரசாங்கம் படைபலத்தைப் பயன்படுத்தி அடக்கி வருகிறது. அரசாங்கம் வன்முறையை ஏவிவிடுகிறது. கைதுகளும் காயங்களும் ஏராளமானவை. பெண்கள், மாணவர்கள் என்ற எந்த இரக்கமுமின்றி தாக்குதல்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. ஆனால் சலிக்காமல் தொடரும் தொடர் போராட்ட முன்னெடுப்புக்கள் அரசு இன்னும் பகல் கனவு மட்டுமே காண்கிறதென்ற உண்மையை உரக்கச் சொல்கின்றன.

ஆனால், இப்போராட்டங்களுக்கு உந்துதலாக இருப்பது தேசிய நிலமைகள் அல்ல. மாறாக உலக நிலமைகளாகும். மக்ரோன் என்ன செய்ய முடியும், அவர் எப்படி எதிர்வினையாற்ற முடியுமென்பது சர்வதேச மூலதனத்தின் கோரிக்கைகளால் தீர்மானிக்கப்படுகிறது.

எது எவ்வாறாகினும், அடுத்த ஆறு மாத காலத்திற்குப் பெற்றோலிய உயர்வில் எந்த மாற்றமும் இருக்கப் போவதில்லை மற்றும் 'Prime d'activité' எனும் வேலை ஊக்கத் தொகையில் நூறு ஈரோ வரை உயர்வு என்ற குறிப்பிடத்தக்க மாற்றத்தை அரசு செய்து கொடுக்க முன்வந்திருக்கிறது. தவிர வேறு எந்த வித உட்புகுத்தல்களும் இல்லை. அரசின் வெறும் சமாளிப்பாகவே மக்கள் இதைப் பார்க்கின்றனர்.

அரச அதிபர் மற்றும் பிரதமர் ஆகியோர் மக்களை நோக்கி மிக ஆக்ரோஷமாகக் கூறிய வார்த்தைகள் மெல்ல மெல்லப் பலமிழக்கத் தொடங்கின. மக்களை நோக்கி பேச ஆரம்பித்தனர். ஆனாலும் மக்களுக்கு திருப்தியில்லை. அரசையே சாடுகின்றனர். குரல்கள் வீதிகளில் தொடர்ந்து ஒலிக்கின்றன. ஆனால் இன்றுவரை முதலாளிகளிகளுக்கு எதிரான எந்தவொரு வார்த்தையைக் கூட ஆட்சியாளர்கள் பேசவில்லை. பேசப்போவதுமில்லை. எந்த நெருக்கடியும் கொடுக்கவில்லை. அதைச் செய்யவும் விரும்பவில்லை.

இவை தவிர, அரச அதிபர் ஐந்நூறு மேயர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பேசியிருக்கிறார். அதன் விளைவாக அரசு 'Le grand débat national' என்னுமொரு நடவடிக்கையை எடுத்திருக்கிறது. அதாவது நாடு தழுவிய விவாதங்களை நடத்தி மக்களின் பிரச்சினைகள் பற்றியும் அவர்களுடைய தேவைகள் பற்றியும் கேட்டறிதல். இவை 15 ஜனவரி தொடங்கி 01 மார்ச் வரை நடைபெறும். கிராம, நகர சபைகளில் 'Le cahier de foléance' வைக்கப்படும். அதில் பொது மக்கள் தங்கள் பிரச்சனைகளைத் தெரியப்படுத்தலாம். இதன் மூலம் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ள முடியுமென மக்ரோன் நம்புகிறார். இணையத்தளங்களும் உருவாக்கப்படுகின்றன. (https://granddebat.fr)

நடைபெற இருக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான வியூகங்கள் இந்த மக்கள் போராட்டங்களின் போக்கை மாற்றிவிடுமென்ற அச்சம் ஏற்படுவது இயல்பு. ஏதோவொரு வகையில் அரசியல் மயப்படுத்தப்பட்டோ அல்லது பயங்கரவாதத்திற்கு எதிரான முன்னொடுப்பாகவோ மாற்றப்பட்டு விடுமோ என்ற அபாயமும் அதனால் தன்னெழுச்சியாக எழுந்த மக்கள் போராட்டம் இலக்கற்றதாகிவிடுமோ என்ற கவனமும் முன்வைக்கப்படுகிறது.

ஆனால் இது போன்ற எழுச்சியால் இந்தத் தேர்தலில் பெருநன்மை அடையப்போகின்ற தரப்பாக மாறியிருப்பது எதிர் கட்சிகள் தான். குறிப்பாக, மரின் லூ பென்னின் தீவிர வலதுசாரி அணிதான். அது இதை விட ஆபத்தானது. அவர்கள் ஒருவேளை ஆட்சிக்கு வந்தால் வெளிநாட்டவர்கள் தங்கள் உரிமைகளுக்காகவும் சேர்த்து போராடவேண்டி வரும். குறிப்பாக அகதிகள் தொடர்பான மாற்றங்கள்.

இன்னொரு பக்கமாக, ஐரோப்பாவுக்கு எதிரான இந்தத் தீவிர வலதுசாரி தேசியவாத எழுச்சியை முடக்க முற்படும் சக்திகள், மஞ்சள் மேலங்கி இயக்கத்தை ஒர் அரசியல் கட்சியாக மாற்ற முயற்சிக்கின்றன. அவர்கள் சார்பில் வேட்பாளர்களை களம் இறக்குவதற்கான திட்டங்களுடன் கலந்தாலோசனைகள் தொடங்கிவிட்டன.

உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் என்றோ அல்லது

தலைமை என்றோ எவரும் இல்லாத இந்த மக்கள் இயக்கத்துக்குள் தேர்தல் அரசியல் புகுத்தப்படுவதை பலரும் விரும்புவதாக இல்லை. இதனால் விரும்பத்தகாத வகையில் போராட்டக்காரர்களுக்குள் பிளவுகள் தோன்றியுள்ளன.

'மக்ரோனுக்கு எதிரான போராட்டத்திற்கான புரட்சிகர முன்னோக்கு என்ன?' எனும் தலைப்பில் பொதுக்கூட்டமொன்று அண்மையில் நடைபெற்றது. அங்கு பேசிய Alex Lanter (Parti de l'égalite socialiste) வரலாற்று ரீதியான அடக்குமுறைகளையும் முன்னைய சோசலிஸ்ட் தலைவர்கள் பெருநிறுவனங்களோடும் அரசுகளோடும் இன்று எப்படி ஒட்டி உறவாடுகிறார்கள் என்பதையும் வருத்தத்தோடும் கோபத்தோடும் பதிவு செய்தார்.

குறிப்பாக, 1968ல் நடுத்தர வர்க்க மாணவத் தலைவராக இருந்து அரசுக்கெதிராகப் போராடிய 'டானியல் கோன் பென்டிட்' வெட்கமில்லாமல் இன்று அரசின் பக்கம் நின்று, 'மஞ்சள் சீருடை இயக்கத்தின் பெரும்பான்மை, தேசிய முன்னணியிலிருந்தும் அதிவலதுகளின் களஞ்சியத்திலிருந்தும் வருகின்ற பாஸிச இயக்கம்' என்று அவதூறு செய்கிறார்.

ஸ்ராலினிச தொழிலாளர் பொதுக் கூட்டமைப்பு தொழிற்சங்கத்தின் (CGT) தலைவரான 'பிலிப் மார்ட்டினே', 'மஞ்சள் சீருடையாளர்கள் சகவாசம் கொள்ள முடியாதவர்கள்' என்கிறார்.

இவர்களுக்கிடையில், ஒரு தெளிவான அரசியலோ பரந்த போராட்டமோ இல்லாத பட்சத்தில், இந்த இயக்கம் பயனற்ற வெறும் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளாகச் சிதறிப் போகின்ற அல்லது உயரடுக்கின் சூழ்ச்சிகளால் விழுங்கப்படுகின்ற அபாயம் மட்டுமே இருக்கிறது. தனிமைப்படுத்தப்படுவதிலும் விலைபேசப்படுவதிலும் இருந்து இவர்களை பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை எழுப்பப்படுகிறது.

வாரத்தின் ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒரு போரை எதிர்கொள்வதைப் போன்று ஆயிரக்கணக்கான காவல் துறையினரும் கலகம் அடக்கும் சிறப்புப் பாதுகாப்புப் பிரிவினரும் களமிறக்கப்படுகின்றனர். பாதுகாப்பு குவியப்படுத்தப்படுகிறது.

இந்த பெப்ரவரி மாத நடுப்பகுதியில் பதினான்காவது சனிக்கிழமையாக மஞ்சள் அங்கிப் போராட்டத்தில் கிட்டத்தட்ட மூவாயிரம் பேர் வரை கலந்து கொண்டிருக்க, அதில் பரிஸில் மட்டும் 16 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 'மஞ்சள் அங்கி போராளிகளுடன் இணைந்து செயலாற்ற விரும்புவதாகவும் அவர்கள் போராட்டத்தைக் கைவிட வேண்டும்' எனவும் நாட்டின் முதல் பெண்மணி பிரிஜிற் மக்ரோன் அழைப்பு விடுத்திருக்கிறார்.

இப்போராட்டங்களுக்கு இடையில் வன்முறையில் ஈடுபடும் கும்பல்களிடம் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகப் பெரும்பாலான வணிக நிறுவனங்கள், போராட்டக்காரர்களால் குறிக்கப்படும் போராட்ட நாட்களைத் தங்கள் விடுமுறை நாளாக அறிவித்து விடுகின்றன. இரும்புக் கம்பிகளான கதவுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவது தொடர்கிறது.

கடந்து போன மூன்று மாதத்திற்குள் போராட்டக்காரர்கள் மக்களுக்குச் சில சலுகைகளை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

இதற்கிடையில் மக்களின் இன்னொரு மனநிலையையும் சொல்லியாக வேண்டும். போராட்ட மனநிலையைத் தாண்டி தன்னுடைய ஒரு நாளை உயிர்ப்புள்ளதாக மாற்றி விட வேண்டுமென்ற ஒரு நாள் கனவோடு ஒடுகின்ற பரிதாபநிலை ஒவ்வொரு சாமானியனுக்கும் இருக்கிறது. ஆனால் அதுவொரு சலிப்புத் தன்மையானது. இதற்கும் எங்களுங்கும் எந்தச் சம்பந்தமும் இல்லையென்ற அப்பாவித்தனம். ஃபிரெஞ்சுக்காரர்களோடு சேர்ந்து பெரும்பான்மையான இங்கு வாழும் வெளிநாட்டவரே இப்போராட்டங்களை முன்னெடுக்கிறார்கள். பல்கலைக்கழகங்களில் இருக்கும் இரண்டாம் தலைமுறைத் தமிழர்கள் போராட்டத்தோடு இருக்கிறார்கள். பெருந்தொகையாகப் போராட்டத்தளங்களில் தமிழர்களைக் காணமுடிவதில்லை. அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல முடியும், 'பல ஆண்டுகளாக நாம் இங்கு வாழ்கிறோம். நம் பரம்பரை இன்னும் அதிகமான காலம் இங்கு தான் வாழப்போகிறது. குளிரில், வீதிகளில் நாள் முழுக்க நின்று போராடும் இந்தஃ பிரஞ்சு மக்கள் எமக்காகவும் சேர்த்தே போராடுகிறார்கள்' என்பதே.

இறுதியில், இந்தப் போராட்டங்களின் பின்னர் அரச அதிபர் பதவி விலக வேண்டுமா என்ற அண்மைய கருத்துக் கணிப்புக்களில் 55%மான மக்கள் தமது கருத்தை ஆம் எனப் பதிவு செய்திருக்கின்றனர். இதுவொரு முக்கியமான தீவிரப் போக்கைக் காட்டி நிற்கிறது.

உலக சோசலிஸ்ட் வலைத்தளத்தில் 'Alex Lantier' இப்படி எழுதுகிறார். 'ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் பிரெஞ்சு அதிபருக்கும் ஐரோப்பா எங்குமான இதேபோன்ற அரசாங்கங்களுக்கும் எதிரான ஒரு பொது வேலை நிறுத்தத்தை ஒழுங்கமைக்கும் பணி இத்தகைய இயக்கத்திற்கு குரோதமானதும் அதனை நடத்தி முடிக்கப் போவதில்லை என்னும் திண்ணமுடையவையுமான தொழிற்சங்கங்களின் பொறுப்பில் விட முடியாது. ஃபிரான்ஸிலும் ஐரோப்பா எங்கும் தொழிற்சங்கங்கள் மற்றும் போலி இடதுக்கட்சிகளது சூழ்ச்சிகளுக்கு எதிராக ஒரு உண்மையான பொது வேலைநிறுத்தத்திற்கு ஒழுங்கு செய்வதற்கும் தொழிலாளர் வர்க்கத்தில் அதற்கான அடிப்படையை உருவாக்கித் தருவதற்கும் நடவடிக்கைக் குழுக்களை உருவாக்குவதே முன்னோக்கிய பாதை'.

தொழிலாளர் வர்க்கமானது, தான் ஒர் ஒடுக்கப்பட்ட வர்க்கம் அல்ல, ஒரு புரட்சிகர வர்க்கமாகும் என்பதை எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது. முதலாளித்துவ ஒழுங்கமைப்பு மற்றும் நிலையான தன்மைகளின் மேற்பரப்பிற்கு கீழே ஒர் உள்நாட்டுப் போர் பிரான்ஸில் கொதித்துக் கொண்டிருக்கிறது.

# ஈழ இலக்கியமும் பிணச் சோதனை விமர்சன மரபும்(?)



அனோஜன் பாலகிருஷ்ணன்



தனிப்பட்ட வாழ்கையில் அலைக்கழிப்பும் துயரம் நிறைந்த அனுபவமும் இருந்தால் நல்ல இலக்கியம் பிறக்கும் என்பது பொதுவான நம்பிக்கை. டால்ஸ்டாய், ஜெயமோகன், ஷோபாசக்தி, மிலன் குந்தேரா, ஹனீப் குரேஷி வரை அதற்கான முன்னோடிகள் இருக்கிறார்கள்தான். ஆனால் வெறுமே துயரும் அலைக்கழிப்பும் மட்டுமே நல்ல இலக்கியத்தைப் படைப்பதற்குப் போதுமானதாக இருப்பதில்லை. நல்ல உதாரணம் ஈழத்து எழுத்தாளர்களின் ஆக்கங்கள். ஈழம் என்றாலே போர், கண்ணீர், இனப்படுகொலை என்ற எண்ணமே மனதில் வரும். அதெல்லாம் சரிதான், ஆனால் அவற்றை முன்னிறுத்தி எழுதப்படும் படைப்பில் இலக்கியத்தரம் இருக்கிறதா என்பதே இலக்கியத்திற்கான அடிப்படை. இலக்கியம் என்பதே நிகர் அனுபவத்தைக் கொடுக்கக்கூடியது. அது ஆசிரியரின் தேடலின் ஊடாக தனக்கான கண்டடைதலை நிகழ்த்தும் ஒரு களம். அதென்ன இலக்கியத்தரம் என்ற வினா காலங்காலமாக எழுப்பப்படுவது. அதற்கான பதில்களும் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்ட பின்னரும் மறுபடியும் முதலிலிருந்து எழுப்பப்படுவது வழமை. அப்படி ஒரு நோயுற்ற சிதிலம் அடைந்த உடல்தான் ஈழ இலக்கிய உலகம். அதேநேரம் லௌகீக உலகில் அலைக்கழிப்பு இன்றி அகத்தத்தளிப்பில் நல்லிலக்கியம் படைத்தவர்களும் இருக்கிறார்கள்தான். ஆ.மாதவன், சுந்தரராமசாமி, பூமணி, அ.முத்துலிங்கம், இமையம், கலாமோகன் என்று ஒரு வரிசையை அதற்குச் சொல்லமுடியும். அலைக்கழிப்பும் அனுபவங்களின் செறிவும் ஒருபோதும் இலக்கியத்தின் முக்கிய அடிப்படையாகக் கொள்ள இயலாது.

ஈழ இலக்கியம் என்பதே அரசியலால் பிணைக்கப்பட்டதாக மாறிவிட்டது, அரசியலைப் பேசும் வெளிதான் ஈழ இலக்கியம் என்றான பின்பு இங்கே வெறும் ஒற்றைப்படையான பிரச்சாரங்களே இலக்கிய அந்தஸ்தைப் பிடித்துவிடுகிறன. வெறுமே ஒர் இனத்தின் துயரைச் சொல்வதோ அவர்களின் விடுதலையைப் பாடுவதோ இலக்கியத்தின் இடம் அல்ல. இதை

மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டியுள்ளது.

நாவலுக்கும் நெடுங்கதைக்கும் வித்தியாசம் உள்ளது. நாவல் விரிவுத்தன்மையால் தன்னை விரித்துச் செல்லும். கதாமாந்தர்களின் வாழ்வியலின் வரலாறுகள் அவற்றினூடாகச் சொல்லப்படும். நிறைய கதை மாந்தர்கள் உலாவருவார்கள். நாயகன் நாயகி என்கிற இரண்டு சட்டகங்கள் மட்டுமே இருப்பதில்லை. பல்வேறு முரண்பாடுகளுக்கு இடையால் மானுடர்களின் இருப்பையும் அதன் சுழற்சியையும் விவாதிக்கும். நாவலின் அடிப்படையே மற்றமையின் மற்றையை தரப்பையும் விவாதிப்பதே. அடிப்படையில் அவை தத்துவநோக்கைக் கொண்டிருக்கும். நெடுங்கதையில் கதாமாந்தர்களின் வரலாறுகள் இருப்பதில்லை. அதீத தத்துவத் தேடல்களும் இருப்பதல்லை. குறைந்த கதாமாந்தர்களின் விசாரணை ஊடாக நகர்வது. நாவலில் இருந்து வரலாறுகள் பிய்த்து எறியப்படும் போது நெடுங்கதையாக மாறிவிடுகின்றது. இமையம் எழுதிய 'எங்கதெ' நாவல் இல்லை. அது நெடுங்கதை. இதேபோல் இலக்கிய அழகியலின் வகைமைப்பாடுகள் நிறையவே உண்டு. அவற்றைப் பற்றிய விவாதங்கள் இல்லாமல் பொத்தாம் பொதுவாக எல்லா இலக்கிய ஆக்கங்களையும் ஒரே தராசில் வைத்து எடை போட இயலாது.

யதார்த்தவாத எழுத்து, இயல்புவாத எழுத்து, மிகை புனைவு வாதம், செவ்வியல் என்று இன்னும் இன்னும் இலக்கிய அழகியலை விவாதிக்கலாம். அவை இன்னும் சுவாரஸ்யமானது. இக்கட்டுரையின் நோக்கம் அவற்றை விவாதிப்பதல்ல என்பதால் அவற்றை இங்கே தவிர்த்துவிடுகிறேன். இந்த அழகியல் நிலைப்பாடுகள் கருத்துருவாக்கங்களால் உருவாக்கப்படுபவை. முன்னோடிகள் இதுவரை உருவாக்கிய விவாதங்களின் தொடர்ச்சியில் இருந்து அடுத்த தலைமுறை விவாதித்தும் மறுத்தும் கொண்டு செல்ல வேண்டியவை. உலக இலக்கியத்தில் மாஸ்டர் படைப்புகளாகக் கொள்ளப்படுபவையுடன் ஒப்பிட்டே இவற்றை விவாதிக்க இயலும். இவை எல்லாம் ஈழத்தில் நிகழ்கிறதா என்பதே இக்கட்டுரையின் முதன்மையான நோக்கம்.

***

ஈழத்து இலக்கிய வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால் இவ்வாறு வகுத்துக்கொள்ளலாம். மு.தளையசிங்கத்தின் 'ஏழாண்டு இலக்கிய மறுமலர்ச்சி', மு.பொன்னம்பலத்தின் 'திறனாய்வு சார்ந்த பார்வைகள்' புத்தகத்தின் வாசிப்பின் மூலம் எனது புரிதல்களை அவர்களின் புரிதல்களின் ஊடாக என் சிந்தனையை இவ்வாறு தொகுக்கிறேன்.

அ. 1930-1940 ஈழ இலக்கிய முயற்சிகளின் ஆரம்பகாலம்.

ஆ. 1940- 1950 ஈழ இலக்கியப் போக்குகளில் தீவிரம் கூடிய மறுமலர்ச்சிக்காலம்.



மு.தளையசிங்கம்

இ. 1950-1965 ஈழ முற்போக்கு இலக்கியம் எழுச்சியுற்ற காலம்.

ஈ. 1965-1975 ஈழ முற்போக்கு, நற்போக்கு இலக்கியத்தின் விவாதங்கள் மோதல்கள் உருவாகிய காலம்.

உ. 1975-1985 இலங்கைவாழ் இனங்களுக்கு இடையிலான மோதல்கள் விரிவடைந்து இனப்பிரச்சினை விரிவடைந்த காலம்.

ஊ. 1985-2009 போர்ச்சூழலுக்கு உரிய காலம்.

எ. 2009 க்குப் பின்னர் பின்போர்ச்சூழலுக்கு உரிய காலம்.

ஈழ எழுத்தாளர்கள் சிறுகதைகள் எழுத ஆரம்பித்த போது பெரும்பாலும் அவை தமிழக இதழ்களிலேயே ஆரம்பத்தில் வெளியாகத் தொடங்கின. கிராம ஊழியன், கலைமகள் போன்ற பத்திரிகைகளில் இவை அதிகம் வெளியாகியுள்ளன. இருந்தபோதிலும் ஈழத்துக்கு என்ற தனித்தன்மையைக் கொண்டிராமல் தமிழக எழுத்தாளர்கள் எழுதும் கதைகளின் பாணியை ஒட்டியே அவை இருந்திருக்கின்றன. இந்திய சுதந்திர எழுசியின் மீதான ஈர்ப்பு, காந்தியின் மீதிருந்த பெரும் பற்று போன்றவை அவ்வாறான எழுத்துமுறைக்குள் தள்ளியதாக மு.பொ குறிப்பிடுகிறார்.

அதற்குப்பின் தோன்றிய மறுமலர்ச்சிக் காலத்தில் ஈழத்து நிலப்பரப்பில் நிகழும் கதைகளாகப் பரிமாணிக்கத் தொடங்கின. சுயாதீனமாகத் தமது நிலம் சார்ந்த சிக்கல்களையும் வாழ்வியலையும் எழுத்துக்குள் புகுத்தும் முயற்சி இக்காலப்பகுதில் நிகழ்ந்துள்ளன. இது ஒருவகையான மறுமலர்ச்சியை இலக்கியத்தில் உண்டு செய்ததாகக் கருதப்படுகின்றது.

இதன்பின்னர் ஏற்பட்ட முற்போக்கு இலக்கியம்

என்பது பெரும் வீச்சில் நிகழ்ந்த ஒன்று. இதுவரை வடக்கில், கிழக்கில் ஏற்பட்டிருந்த சாதிய ரீதியான ஒடுக்குமுறைகளுக்கு எதிரான குரலாகவும் வர்க்கப் பிரச்சினையை முதன்மைப்படுத்தி தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையிலான இலாப நட்டக் கணக்கை கேள்விக்கு உட்படுத்தி தொழிலாளர்களுக்கான விடிவே மானுடத்தின் முழுமையான விடுதலை என்ற நோக்கை நோக்கி எழுதப்பட கதைகளாகவும் அவை இருக்கின்றன. முற்போக்கு இயக்கங்களின் தேவைகள் இன்றுபோலவே அன்றும் தேவையாக இருந்த சூடான காலப்பகுதி (இதனை ஒரளவு விரிவாகப் புரிந்துகொள்ள 'எழுநா' வெளியீடான அ.கௌரிகாந்தன் எழுதிய 'யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலாந்தரும்' என்ற ஆய்வு நூலை வாசிக்கலாம்). யாழ்ப்பாணக் கல்லூரியில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் கல்வி கற்க உள்வாங்கப்பட்டபோது அதனை எதிர்த்து உயர்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். எனினும் அந்தப்பாடசாலையின் அதிபரின் பிடிவாதத்தால் உயர்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களின் பகிஷ்கரிப்பு தோல்வியிலே முடிந்தது. இவ்வாறான பகிஷ்கரிப்புச் சம்பவத்தால் சீற்றம் அடைந்த அந்தப் பாடசாலையின் முற்போக்குச் சிந்தனைகளைக் கொண்ட பழைய மாணவர்கள், யாழப்பாண மேட்டிமைச் சமூகத்தின் **'பிற்போக்குச் செயற்பாடுகளை'** எதிர்க்க ஒர் அமைப்பாகத் திரண்டனர். பின்னர் அதுவோர் சமூக இயக்கமாக விரிவடைந்தது. பின்னர் அவ்வமைப்பு யாழ்ப்பாண **'வாலிபர் காங்கிரஸ்'** என்று அழைக்கப்பட்டது. இவ்வமைப்பில் இருந்த பலர் இடதுசாரிச் சிந்தனைகளைக் கொண்டிருந்தனர். இந்த அமைப்பின் செயற்பாடுகளும் சிந்தனை அலைகளும் இலக்கியம் வரை நீண்டதாகப் புரிந்துகொள்ள இயல்கிறது. இந்த அமைப்பிலிருந்தவர்களால் நேரடியாக இலக்கிய எழுத்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா என்று அறியமுடியவில்லை. எனினும் இவர்களது தாக்கம் முற்போக்கு இலக்கிய எழுத்து முறைக்கு அடிப்படையாக இருந்துள்ளது என்பதை மறுக்கவியலாதாகிறது.

க.கைலாசபதி 1957-ல் 'தினகரன்' பத்திரிகையின் ஆசிரியராக வந்தபின்னர், முற்போக்கு எழுத்தாளர்களுக்கு இன்னும் வாய்ப்புக்கள் குமிந்தன. ஒருகட்டத்தில் முற்போக்கு எழுத்தாளர்களின் கதைகள் எல்லாமே பிரச்சாரமாக அமைய ஆரம்பித்தன. எந்தவித இலக்கியத் தகுதிகளும் இன்றி வெறுமே சாதிய, வர்க்க விடுதலையைப் பேசுகின்றன என்ற உள்ளடக்கத்துக்காக அவை பிரசுரிக்கப்பட்டன. ஈழ இலக்கியம் இலக்கிய அந்தஸ்தை இழந்து குப்பைக்காடாக மாறிக்கொண்டிருந்தது. இவற்றையெல்லாம் க.கைலாசபதி தன் மார்சிய பார்வையால் **"இதுதான் சரியான கலை"** என்று திறனாய்வுக் கட்டுரைகளையும் எழுதி எழுதிக் குமிக்க ஆரம்பித்திருந்தார்.

இலக்கியத்தின் அடிப்படையில் வாழ்க்கை சார்ந்த தேடல் இருக்கும். இருப்பையும் பிரபஞ்ச இயக்கத்துக்கான தத்துவார்ந்த கேள்விகளுக்கான விடைகளையும் நோக்கிச் செல்லும். ஒரு வாழ்க்கையை வெறுமே முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலான இலாப நட்டக் கணக்கிலிருக்கும் சமத்துவத்ததின் ஊடகப் பார்க்க இயலாது. சரியான ஊதியப் பகிர்வும், அந்தஸ்தும் கிடைத்தால் ஊழியர்கள் விடுதலை அடைந்துவிடப் போவதும் இல்லை. வாழ்க்கை என்பது எண்ணற்ற கேள்விகளாலும் தனிப்பட்ட அகங்கார மோதல்களாலும் நிரம்பியது. உண்மை என்று நாம் நம்பும் ஒன்று பாதிதான் உண்மை; மிச்ச உண்மை மற்றைய தரப்பிலிருப்பது. இதனைத் துழாவிக் கண்டடைய வைப்பது இலக்கியம். இந்தப் புரிதலின்றி வெறுமே சூத்திரங்கள் ஊடாக அணுகிப்பார்க்கும் பார்வையைக் கொண்டது கைலாசபதியின் அணுகுமுறை. இந்த அணுகுமுறையில்தான் செ.கணேசலிங்கனின் செவ்வானத்தை மிகச்சிறந்த நாவல் என்பதோடு நில்லாமல், புதுமைப்பித்தனின் கதைகளில் வரும் பிச்சைக்காரர்கள் எப்படி வர்க்கரீதியாகச் சுரண்டப்பட்டு பிச்சைக்காரர்களாக ஆக்கப்பட்டார்கள்என்பதைச்சொல்லவில்லை என்று புதுமைப்பித்தனை நிராகரிக்கிறார். இது போன்ற அணுகுமுறையாலும், கைலாசபதியின் அரவணைப்புடனும் எண்ணற்ற பிரச்சாரங்களை எல்லாம் சிறுகதைகள் என்று வெளியிட்டது தினகரன்.
கைலாசபதியின் இலக்கிய அணுகுமுறைக்கு எதிராகக் குரல்கள் அன்றைய காலத்திலும் எழத்தான் செய்தன. அதில் வலிமையாகத் தன் கருத்துகளைப் பதிந்தவர்களில் முக்கியமானவர் மு.தளையசிங்கம். **'விமர்சக விக்கிரகங்கள்'** என்ற தன் கட்டுரையில் மு.தளையசிங்கம், ஏ.ஜே கனகரந்தினா, செந்தில்நாதன், சிவகுமாரன், சில்லையூர் செல்வராசா, காவலூர் ராசதுரை, எஸ். பொன்னுத்துரை, கைலாசபதி, கா.சிவத்தம்பி பற்றி அவர்களது விமர்சன முறைமையில் உள்ள ஆழமற்ற தன்மையையும் இலக்கியம்

மீதான நுண்ணுணர்வுப் போதாமையையும் காரசாரமாகக் குறிப்பிட்டு விவாதிக்கிறார். அதற்கான உதாரணங்களை அந்தந்த எழுத்தாளர்கள் எழுதியவற்றோடு சேர்ந்து வாசித்தால் இன்னும் திறப்புகள் கிடைக்கும். இதில் கவனிக்க வேண்டியது மு.தளையசிங்கம் அவர்கள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரின் பலவீனங்களைச் சுட்டிக்காட்டி எழுதிய கட்டுரைகளை 'தினகரன்' வெளியிட மறுத்ததுதான். தங்களுக்கு எதிராக எழும் தர்க்கபூர்வமான விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள முடியாத மனநிலையிலே கைலாசபதியும் சிவத்தம்பியும் இருந்திருக்கிறார்கள். இதனால் தான் மு.தளையசிங்கம் கல்விமட்டங்களில் உயர்பதவியில் இருக்கும் பேராசிரியர்களை 'துரைமார்கள்' என்று அழைத்துச் சீண்டிப் பார்க்கிறார். சமூக மட்டத்தில் தங்களுக்கு இருக்கும் கௌரவம், எழுத்துலகில் தாம் தான் சிறந்த சிந்தனைவாதிகள் என்பதை அடுத்த தலைமுறை அவர்களின் போதாமையைச் சுட்டிக்காட்டி விவாதிக்கும்போது அல்லது உடைக்கும்போது அந்தக் கருத்துகளை அடியோடு ஒலிக்காமல் செய்யும் நடவடிக்கைகளைத்தான் செய்திருக்கிறார்கள். இந்த வரலாறுகளை விளங்கிக்கொள்ளாமல் கைலாசபதியையும், சிவத்தம்பியையும் தூக்கிப்பிடிப்பவர்கள் நம் சூழலில் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவ்வாறு இன்று பேசுபவர்கள் ஈழத்துக்கு என்று விமர்சன மரபு இன்னும் இருக்கிறது என்று அப்பாவித்தனமாக நம்புகிறார்கள். ( எது? தன் கருத்துகளுக்கு எதிரான கருத்துகளைக் கொண்டு விவாதிக்க வருவதை முற்றாக நிராகரிப்பதா ஈழத்து விமர்சன மரபு?)

ஆரம்பத்தில் முற்போக்கு எழுத்தாளர் அணியில் எஸ். பொன்னுத்துரை இருந்தாலும், அவரது தனிப்பட்ட தேடல் என்பது வெறுமே வர்க்கம், சாதீயம் சார்ந்த ஒன்றல்ல. யாழ்பாண இடை நிலை வர்க்கத்து அகவுலகத்தை நுண்மையாகக் காட்சிப் படுத்துவதில் அவர் எழுத்து வென்ற ஒன்று. காமம் x வாழ்க்கை சார்ந்து அவர் எழுதியவை முற்போக்கு எழுத்தாளர்களால் கடுமையாக மறுக்கப்பட்டன. இவை மஞ்சள் பத்திரிகை வகையான எழுத்து என்று அன்றைய காலப்பகுதியில் ஒதுக்கப்பட்டது. இதனால் சீண்டப்பட்ட எஸ்.பொ முற்போக்கு முகாமிலிருந்து வெளியேறி நற்போக்கு முகாமை உருவாக்கினார். உண்மையில் இந்த முகாம் முற்போக்கு எழுத்தாளர்களைச் சீண்டிப்பார்ப்பதிலே அதித நேரத்தைச் செலவிட்டது. தன்னைக் கலகக்காரனாகக் காட்டிக்கொள்ள சிகரெட் பிடிக்கும் புகைப்படத்தைத் தன் நாவல் பின்னட்டையில் எல்லாம் பிரசுரித்தார். இதுவோர் ஆரோக்கியமான விவாதமாக இருக்காமல் இலக்கியப் பூசலாகவே அதிகம் இருந்ததாக மு.தளையசிங்கம் குறிப்பிடுகிறார். அதேநேரம் முற்போக்கு அணியின் தலைமைப் பொறுப்பை யார் கைப்பற்றுவது என்ற போட்டியில் ஒதுக்கப்பட்டதாலே எஸ்.பொ விலகினார்; அதுவே அந்தரங்க காரணமாக இருக்கிறது - என்று மு.தளையசிங்கம் **"ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி"** நூலில் குறிப்பிடுகிறார். இன்று



மு.பொன்னம்பலம்

எஸ்.பொவை திரும்பி வாசிக்கும்போது இயல்புவாத அழகியலில் ஈழ இலக்கியத்தின் முன்னோடி என்று புரிந்துகொள்ள இயலும். "சடங்கு" நாவலில் காட்டும் சித்திரம் ஒர் தேர்ந்த ஆணின் உளவியல் மடிப்பின் கீறல்கள். இருந்தபோதும் 'நனவிடை தோய்தல்' என்ற ஆக்கமே எஸ்.பொவினது குறிப்பிடத்தக்க ஆக்கம் என்பது என் எண்ணம். அன்றைய யாழ்ப்பாணத்தின் நுணுக்கமான சித்திரமாக இன்றும் மீள்வாசிப்புச் செய்ய இயல்கிறது.

இந்த முற்போக்கு, நற்போக்கு குழுமோதலின் போது மு.தளையசிங்கம் மெய்யுள் எனும் கோட்பாட்டை முன்வைக்கிறார். மெய்யுளை ஒர் கோட்பாடாக முன்வைத்தாலும் உண்மையில் அது இலக்கியத்தை, வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கான ஒர் சிந்தனை முறைமைதான் என்றே கொள்ள வேண்டியுள்ளது. முற்போக்கு முகாமில் இருக்கும் எழுத்தாளர்களையும் சரி, நற்போக்கு அணியில் எஸ்.பொவுடன் இருந்த எழுத்தாளர்களையும் சரி தனக்குரிய இலக்கியப் பார்வையில் மிகக்கறாராகவே அணுகினார் தளையசிங்கம். அன்றைய காலத்தில் இவ்விரண்டு முகாங்களை விமர்சிக்கவும் புதிய சிந்தனையை உருவாக்கவும் மு.தளையசிங்கம் வைத்த கோணத்தை மூன்றாம் கோணம் எனலாம். உண்மையில் முற்போக்கு எழுத்தாளர்கள் என்ற பெயரை தங்களுக்குத் தாங்களே சூட்டிக்கொண்டாலும் அது உண்மையில் 'முற்போக்கு' எழுத்துத்தானா? என்பதை மு.த விமர்சனத்துக்கு உள்ளாக்குகிறார். அவை அவ்வாறு இருப்பதில்லை என்பதையும் குறிப்பிடுகிறார். (முற்போக்கும், கலாச்சாரமும் பத்து வருடத்துக்கு ஒருமுறை மாறிக்கொண்டு இருக்கும் ஒன்றல்லவா!) எஸ்.பொன்னுத்துரையின் எழுத்துப் பாணியைத் தழுவி எழுதியவர்களும் முற்போக்கு அணியில் இருந்ததை ஆதாரத்துடன் முன்வைக்கிறார். கிட்டத்தட்ட எல்லாமே ஒன்றுதான் என்ற பார்வையும் பல இடங்களில் மு.தளையசிங்கதிடன் வெளிப்படச் செய்கின்றது. கடுமையாகவே க.கைலாசபதியை நிராகரிக்கும் விவாதங்களை இன்று வாசிக்கும்போது

அதன் எதிர்கால இலக்கிய நிலைமை எப்படி இருக்கும் என்ற தளையசிங்கத்தின் ஊகங்கள் இன்று நிஜமாகி இருப்பதை வியப்புடன் நோக்க முடிகிறது.

“கைலாசபதியின் இலக்கியப் பார்வை ஆழம்தான். ஆரம்பத்தில் விரிந்து தெரிந்த ஒரு தரமான இலக்கியப்பார்வை ‘முற்போக்கு’ இலக்கியப் பார்வையாக மாறியபோது தன்னை ஒர் குறுகிய கட்சிக்குள்ளும் கொள்கைக்குள்ளும் திணிந்துத் தானும் குறுகிக்கொண்டது, பழைய தமிழ் இலக்கிய அறிவுமட்டுமல்ல மற்றைய நாட்டு இலக்கியங்களைப் பற்றித் தெரிந்திருக்கும் ஒர் ஒப்பிலக்கியப் பார்வையும் தேவை என்ற நல்ல கொள்கையும் அதனால் தேயத் தொடங்கிவிட்டது. பின்பு பின்னர் வந்த பிஞ்சுகளிடம் பின்பு அகப்பட்ட போது தேய மட்டும் செய்யவில்லை தேய்ந்து சிதைந்து கோராமாகியும் விட்டது.” - என்று குறிப்பிடும் தளையசிங்கத்தின் வரிகள் இன்றும் உண்மையுடனேயே ஈழ இலக்கியப்பரப்பில் இருக்கிறது. பகீதரன் ஈழத்து முற்போக்கு எழுத்துக்களை வாசித்துவிட்டு, “தமிழ்நாட்டில் எழுதப்படும் இலக்கியங்களை விட பத்துவருடங்கள் பின்தங்கி இருக்கிறது ஈழத்து இலக்கியம்” - என்ற ரீதியில் ஒரு கருத்தை வெளியிட்டார். இது அப்போது பெரும் சீண்டலை அனைத்துத் தரப்பு ஈழத்து எழுத்தாளர்களுக்கு இடையில் உருவாக்கியது. அதற்கான எதிர்வினைகள் வழமைபோல் சாணிபூசும் மொழியில் இருந்தன. மு.தளையசிங்கம் கூட “பகீதரனுக்குப் பைத்தியம்” என்றார்.

ஏறக்குறைய இதே காலப்பகுதியில் வண்ணநிலவன் ஈழத்து முற்போக்கு எழுத்துகள் என்று அடையாளப்படுத்தப்படும் எழுத்துகளை வாசித்துவிட்டு மிகவும் நொந்துபோய் “ஈழத்து முற்போக்கு எழுத்துகளுக்கு பூச்சிமருந்து அடிக்கவேண்டும்”- என்றார். மேலும் ‘கோட்பாடுகளால் பாலைவனமாக்கப்பட்டது’ ஈழ இலக்கியம் என்றார். இன்று ஈழ இலக்கிய வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது பகீதரன், வண்ணநிலவன் சொன்னவை எத்தகைய கூர்மையான கூற்று என்பதை அரசியல் பூசல்களுக்கு அப்பால் சிந்திக்கும் திறமையான இலக்கிய வாசகர்கள் புரிந்துகொள்வார்கள்.

இலங்கையில் வசிக்கும் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள், தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது பாரிய கனத்துடன் எழுந்தது. தமிழரசுக்கட்சி சமஷ்டிக்கோரிக்கையை முன்வைத்தது. மு.பொ மற்றும் சு.வில்வரத்தினம் இணைந்து எழுதிய மு.தளையசிங்கத்தின் ‘ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி’ நூலின் முன்னுரையில் “சமஷ்டி ஆட்சியின் தேவையை இடதுசாரிகள் உணர்ந்தபோதும், பலவித அரசியல் காரணங்களுக்காக அவர்கள் அதைப் புறக்கணித்து ஒற்றை ஆட்சி தேசியம் பேசித் தமிழ் மக்களின் ஏகோபித்த குரலை நசுக்கினர். இதுவே பொதுப் பின்னணி” என்று குறிப்பிடுகிறார்கள். அதனால்தான் இன முரண்பாடுகள் உச்சத்தை நோக்கி நகர்ந்த போதும் கம்னியூனிஸ்ட் கட்சிக்குள் அகப்பட்டிருந்த முற்போக்கு எழுத்தாளர்களாலும் கைலாசபதியாலும் இனப்பிரச்சினை சார்ந்து தங்களது உள்ளார்ந்த உண்மையை வெளியே வைக்க முடியாமல் போனது. இவர்கள் கட்சிக்காக இனமுரண்பாடுகள் நோக்கி தங்கள் தேடலை விரிக்காமல், மீண்டும் ஆலைத்தொழிலாளி x முதலாளி பிரச்சினை என்று எழுதிக்கொண்டிருந்தார்கள். அப்போதையை இனவுணர்ச்சியின் வீரியம் மக்களிடம் அதிகம் பரவத் தொடங்க, அது சார்ந்த தெளிவான பார்வையை இடதுசாரிகளால் முன்வைக்க இயலாமல் செல்ல அவர்களின் இடம் சரிந்தது என்பது வரலாற்றின் ஒருப்பக்க உண்மையாக இருக்கிறது.

இனப்பிரச்சினையின் வீரியம் கூடிப் போர்ச்சூழல் உருவாகிய ஈழ இலக்கியத்தின் காலப்பகுதியின் பேசுபொருளை எழுச்சியூட்டல், துயரைப்பாடுதல் என்ற இரண்டு தனிப்பெரும் பிரிவாக பிரிக்கலாம். நட்சத்திரன் செவ்விந்தியன், அஸ்வகோஸ், எஸ்.போஸ் போன்ற அன்றைய கால இளைஞர்கள் இன்னுமொரு புதுத்தலைமுறையாக எழுந்து வந்தார்கள். இவர்கள் எழுதிய கவிதைகள் நேரடியாக உணர்வுகளைப் பேசுவதோடு எளிமையான சொற்களுடன் நின்றுவிடக்கூடியன. புதிய அழகியல் சாத்தியங்களைத் திறந்துவிடக்கூடியன. அவ்வாறே இந்தக் கவிதைகளை அப்படியே இன்றைய தளத்திலிருந்து மதிப்பிட முடியும். இவர்கள் எழுதிய ஆக்கங்கள் எவ்வாறு விமர்சனத்துக்கு உள்ளாகின என்று தேடினால் இப்போதிருக்கும் தளத்திலிருந்து பார்க்க துன்பமே கிட்டுகிறது.

உதாரணத்துக்கு மு.பொன்னம்பலத்தின் விமர்சனங்கள் சிலவற்றைப் நோக்குவது மேலும் சில புரிதல்களுக்கு இட்டுச்செல்லும்.

**1**

சோலைக்கிளியின் கவிதைப் பாணி பற்றி ஏற்கனவே விரிவாக எழுதப்பட்டுள்ளதால் அது பற்றி விவபரிக்கத் தேவையில்லை. அவரது கவிதைகள், அஃறிணைப் பொருட்களை மனித குணாம்சங்களுக்குள் இட்டு உருவகப்படுத்துவதும், இத்தகைய உருவகப்படுத்தல்களால் ஏற்படுத்தப்படும் ஒருவகைப் படிமமும் மினுக்கமுற வெளிவருவன. சில நன்றாக வந்து வாய்ப்பதும் உண்டு. சில எல்லாவற்றையும் கெடுத்து விடுவதும் உண்டு. அண்மையில் இவர் எழுதிய கவிதை ஒன்றுக்கு வைத்த தலைப்பு ‘வறுக்க வறுக்க மணக்கும் பூச்சி’ என்பதாகும். சில பூச்சிகளைத் தொட்டாலே வயிற்றைக் குமட்டும் நாற்றம் அவ்விடத்தை விட்டு அகல அதிக நேரம் எடுப்பதுண்டு. அப்படிப்பட்ட பூச்சிகளை வறுத்தால் என்னவாய் இருக்கும் எம் நிலை? எனக்கு வயிற்றைக் குமட்டும் அந்த நாற்றத்தின் மீட்டலால் அக்கவிதையைப் படிக்கக் கஷ்டமாய் இருந்ததோடு படித்த பின்பும்

அந்த நாற்றந்தான் கவிதைகளின் கருத்தை மீறி மிதப்பதாய் இருந்தது. 'சுடச்சுட வெண்மை தரும் சங்கு" என்று பழைய கவிஞர்கள் சொன்னதில் இருந்த பொருத்தப்பாட்டை புதிதாய் கவிதை பண்ணும் நாம் யோசிக்க வேண்டாமா?

-மு.பொன்னம்பலம்-

மு.பொவுக்கு படித்தவுடன் குமட்டல் கொடுத்த சோலைக்கிளியின் அந்தக் கவிதை இதுதான்.

வறுக்க வறுக்க மணக்கும் பூச்சி
என்னை வறுக்க வறுக்க
நாணர் முறுகி மணப்பேன்.
கருகேன்!
ஒரு சின்னப் பூச்சி நான்.
இந்த உலகத்தில் மிதந்து
இயன்றால் வானத்தை எட்டுவது,
இல்லையென்றால் போவதென்ற
பெரிய கங்கணங்கள் கட்டாத
ஒரு சின்னப் பூச்சி நான்!

சூரியனைத் திருப்பி என் பக்கம் வைக்க
எனக்கும் ஆசையுண்டு, ஆனாலும்
பிறரின் ஒளியை நான் ருசிக்க விரும்பவில்லை.
என் வீட்டிற்குள் விளக்கும் பிறர் இல்லத்துள் இருளுமைன்று,
நான்–
இந்த உலகத்தில் மிதக்க ஆசையில்லை.
எண் சிறகில் இந்த உலகத்தை ஒட்டி
எங்கோ பறந்து கொண்டுபோய் வைத்து
குப்பை கூழன்களை அகற்றி,
மிகச் சுத்தமான ஒரு நிலத்தை
அதில் சிரித்த முகங்களுடன் மிருகங்களை
ஆக்கிப் பார்க்க ஒர் ஆசையுணர்டு, அதற்காக
இந்த உலகத்தில் மிதக்கின்ற ஒரு பூச்சி!
இன்னும் ஒட்டவில்லை எண் சிறகில் உலகம்.
நான் மிதக்க மிதக்க
வெயில் இறைத்து வெயில் இறைத்து
எண் நீர்நிலைகள் வற்ற
முறுக வறுக்கிறது, ஏனோ தெரியவில்லை,
நானும் கருகவில்லை!

**-சோலைக்கிளி-** *(எக்ஸில் இதழ் 4-இல் வெளியாகியது)*

இங்கு மு.பொ சோலைக்கிளி எழுதியது கவிதை அல்ல என்று மறுப்பதில் நமக்கு பிரச்சினை இல்லை. மு.பொ சொல்லவருவதை விளங்கிக்கொள்ள முடிகிறது. ஆனால், மனித மன விவகாரங்களைப் படிமமாக பயன்படுத்தும் போது, இங்கு வரும் பூச்சி போல அது ஏன் கலை ரீதியாக வெல்கிறது அல்லது தோற்கிறது என்பதை புறவயமாக விளக்கமுடியவில்லை மு.பொவால். இங்குவரும் பூச்சி ஏன் இக்கவிதையில் சரியான படிமமாக உருவாகவில்லை என்பதைத் தன்தரப்பில் தெளிவாகச் சொல்ல முடிவதில்லை. அதற்கு அவர் கொடுக்கும் விளக்கம் "வயிற்றைக் குமட்டும் அந்த நாற்றத்தின் மீட்டலால் அக்கவிதையைப் படிக்கக் கஷ்டமாய் இருந்ததோடு படித்த பின்பும் அந்த நாற்றந்தான் கவிதை களின் கருத்தை மீறி மிதப்பதாய் இருந்தது" இதைச் சொல்ல ஒர் இலக்கிய விமர்சகர் தேவையா என்ன?



க.சிவத்தம்பி

**2**

நாம் சில அவதானிப்புகளை முன்வைக்க வேண்டும். அப்போதுதான் 90களில் மிதந்துள்ள கவிதைப் போக்குகளை அவதானிக்கவும் இனி வரப்போகும் ஆரோக்கியமான போக்குகளைக் கணக்கிலெடுத்துப் பேணவும் முடியும்.

90களில் வெளிவந்த வாசுதேவனின் 'வாழ்ந்து வருதல்", நட்சத்திரன் செவ்விந்தியனின் 'வசந்தம் 91', ஜபாரின் தரப்பட்டுள்ள அவகாசம்', ஒட்டமாவடி அறபாத்தின் 'எரிநெருப்பிலிருந்த", சுபத் திரனின் 'சுபத்திரன் கவிதைகள்', அஸ்வகோஸின் 'வனத்தின் அழைப்பு ஆகிய தொகுதிகளின் கவிதைகள் ஏற்கனவே நான் குறிப்பிட்ட பாணிக் கவிதைகளில் இருந்து வேறுபட்டவையாகவும், இனிவரும் போக்குகளை நோக்கிய உணர்கொம்புடையனவாகவும் உள்ளனவென்றால் மிகைப்படுத்தலாகாது.

93ல் வெளியான வாசுதேவனின் 'வாழ்ந்து வருதல்' தொகுப்பில் உள்ள கவிதைகள் இப்புதிய போக்கின் வருகைக்கு அடிக்கல் லிட்டு பாதை அமைத்தவையாக நிற்கின்றன' ஒரு மாலையும் நானும் என்னும் அவரின் கவிதை பின்வருமாறு ஆரம்பிக்கிறது.

"வானம் இருளடைந்து காற்றுபலமாய் வீசும் இந்த மாலையில் நான் பெருக்கெடுக்கிறேன். நான் நிம்மதி இழக்கிறேன். துயரில் நெஞ்சு கசிகிறது. காரணம்புரியாது அடிவற்றில் கத்திகள் பாய்கிறது." படிமம், உருவகம், உவமை என்று எந்தவித ஆரவாரமும் இல்லாமல் சாதாரணமாக பெய்யப்படும் வார்த்தைகளால் கவிதை

ஊற்றெடுப்பதை இக்கவிதையில் காண்கிறோம். 'நான் பெருக்கெடுக்கிறேன்', 'காரணம் புரியாது அடிவயிற்றில் கத்திகள் பாய்கின்றன' - என்னும் வார்த்தைப் பிரயோகங்கள் அத்தகையன.

-மு.பொன்னம்பலம்-

மு.பொவுக்குப் படிமம், உருவகம், உள்ளடக்கம் என்பவையெல்லாம்ஆரவாரமாகத்தான்தெரிகின்றன. கவிதையில் ஏன் படிமங்கள் தேவை, அவை எப்படி கனவுத் தன்மையாக விரிகின்றன என்பதையெல்லாம் அவரால் விளக்கவும் முடியவில்லை. கடைசிவரை மு.பொவினால் படிமம், உருவகம், உவமை இல்லாமல் எப்படி கவிதை சிருஷ்டிகரம் கொள்கிறது என்பதை விளக்கவே முடியவில்லை. கவிதையில் வாசகர் கவனிக்க மறந்த கோணம், அது அரூபமாக உணர்த்தும் அகவய உணர்வை புறவயமாக எழுத்தில் கொண்டுவருவது. விவரிப்பதே விமர்சகனின் கடமை.; அவையெல்லாம் முபொவுக்கு கிஞ்சித்தும் வரவில்லை என்பதை இங்கே நோக்கலாம்.

***

இக்கட்டுரையில் ஏன் தொடர்ச்சியாக மு.பொவை மட்டுமே கருத்தில் கொள்கிறீர்கள்? வேறு விமர்சகர்கள் இல்லையா என்று கேட்கலாம்.

கைலாசபதி ஏன் ஒர் விமர்சகர் இல்லை என்பதை மேலே குறிப்பிட்டாகிவிட்டது. அவர் சமூகத்தை அளக்க இலக்கியத்தை பயன்படுத்த முனைந்தாரரே தவிர இலக்கிய விமர்சகர் இல்லை. மு.தளையசிங்கம் கைலாசபதி உட்பட அந்தக்காலத்தில் இருந்த விமர்சக விக்கிரங்களளின் போதாமைகளை தெளிவாகச் சுட்டிக்காட்டி துகிலுரித்துவிட்டார். ஆனால், அவரின் தம்பியான மு. பொன்னம்பலம் பற்றி யாரும் அதிகம் பேசியதில்லை. அதேநேரம் மு.பொன்னம்பலம் ஈழத்து விமர்சன மரபில் தனக்கு ஒர் இடம் இருப்பதாக இன்னும் நம்புகிறார். ஆக அவர் நம்புகின்ற அவரது தகுதி மீதான விமர்சனங்களை முன்வைக்கக்கூடிய சுநதந்திரமும் எங்களுக்கு கிடைக்கிறது.

மு.பொவுக்கு ஒரு மனக்குறை இன்றுவரை உள்ளது. தமிழியல் வெளியீடாக வந்த 'யதார்த்தமும் ஆர்மார்த்தமும்' என்கிற தனது புத்தகம் பெரிதாகக் கண்டுகொள்ளப்படவில்லை என்பதுதான் அது. உண்மையில் மு.பொவின் குறிப்பிடத்தக்க புத்தகங்களில் ஒன்று அது மட்டும்தான் என்பதே என் எண்ணம். ஆனால், அப்புத்தகத்திலுள்ள மஹாகவி நீலவாணன் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகள்கூட புறவயமான தர்க்கங்களுடன் நின்றுவிடுகின்றன. இன்று திரும்பிப் பார்க்கும்போது மேலதிக புரிதல்களுக்குச் செல்லவே இயலாத தன்மையுடன் வறட்டு மொழியுடனும்ன் அக்கட்டுரைகள் மேற்கோள்களுடனும் அமைந்திருக்கின்றன என்பது துக்கரமானதே. மு.பொன்னம்பலம் ஈழத்து இலக்கியத்தில் யார் யார் பங்குபற்றினார்கள் என்ற



க.சிவத்தம்பி

வரலாற்று ஆவணப்படுத்தல் வேலையைத்தான் செய்தாரே தவிர, ஒரு படைப்பை ஆழமாகச் சென்று தொட்டு இன்னுமொரு புதிய கோணத்தை வாசகருக்குக் காட்டிவிடும் விமர்சனத்தைச் செய்யவே இயலவில்லை. முயன்று முயன்று பார்த்து தோல்வியுற்றவர்.

இன்னுமொரு மு.பொன்னம்பலத்தின் கூற்றை சுட்டவேண்டியுள்ளது. கீழே பார்க்கவும்.

> "50களில் பகீரதன், ஈழத்து எழுத்தாளர்கள் தமிழ்நாட்டைவிட பத்து வருடங்கள் பிந்தியுள்ளார்கள் என்று கூறியபோது "அது அவரது அறியாமை" என நாம் சாடினோம். இன்று அதே வகைக்குரல் ஜெயமோகன் மூலம் மீண்டும் ஒலிக்கிறது. நமது சிறுகதைகள் தமிழ்நாட்டுச் சிறுகதைகளைவிட பின்தங்கி நிற்பதாகவும், ஒற்றைப் பரிமாணமுடைய தட்டையானவையாக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். இக்கூற்றைப் பகீரதனுடையதுபோல நாம் ஒதுக்கிவிட முடியாது. இதில் கணிசமான உண்மை உண்டென்பதை நாம் ஒப்புக்கொள்வது எமது இலக்கிய ஆரோக்கியத்துக்கு அவசியம்".
>
> -மு.பொன்னம்பலம்-

ஜெயமோகனின் கூற்றை பலமாக ஆமோதிக்கும் மு.பொன்னம்பலம் இன்று முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களுடன் உலாவருகிறார். இதை ஜெயமோகனின் "பூச்சிமருந்து" விவாதத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியுள்ளது.

சு.வில்வரத்தினம் கவிதைகளின் படைப்புலகம் சார்ந்து 'அகமெரியும் சந்தம்' என்ற கட்டுரையை ஜெயமோகன் 'காலம்' இதழ்-27ல் எழுதியிருந்தார். அதில் வில்வரத்தினத்தை விதந்தோதி, தாழ்த்தி சில பொதுமைப்படுதல்களால் ஈழக் கவிஞர்கள் பற்றி ஜெயமோகன் தரக்குறைவாக ஏதோ சொல்லிவிட்டார் என்ற ரீதியில் மு.பொன்னம்பலம் அதற்கு எதிர்வினையாக காலம் இதழ் 28 & 29ல் 'அகமெரியும் சந்தத்தில்' அடியோடும் நிராகரிப்பு" என்று ஒரு கட்டுரை எழுதினார். (கட்டுரையின் ஆரம்பம் இப்படி ஆரம்பிக்கும்

:ஜெயமோகன் ஈழத்துக் கவிஞர் சு.வில்லரத்தினம் 'அகமெரியும் சந்தனம்' என்ற தலைப்பில் காலம்-27 இதழில் எழுதிய விமர்சனத்தை வாசித்தபோது மகிழ்ச்சி அடைந்தேன். காரணம் எந்தத் தமிழ்நாட்டு எழுத்தாளனும் ஈழத்துக் கவிஞர் ஒருவரை விமர்சன ரீதியாக ஆய்வுசெய்து பாராட்டி எழுதியதில்லை) இன்று மு.பொவின் அக்கட்டுரையை வாசிக்கும்போது வழமைபோல் மேற்கோள்களுடனும் அகவய உணர்வுகளுக்குள் நுழையாத புறவய தர்க்கங்களுடன் எழுதப்பட்ட கட்டுரையாக இருப்பதையே சலிப்புடன் நோக்க இயலுகிறது. அதில் அடுத்த தலைமுறையில் எக்கசக்கமான கவிகள் உண்டு, அவற்றை ஜெயமோகன் கருத்தில் கொள்ளவில்லை என்ற ரீதியில் குறிப்பிடுகிறார். குறிப்பிடுவதோடு நில்லாமல் ஒரு பட்டியலையும் கொடுக்கிறார்: கருணாகரன், யேசுராசா, புஸ்பராஜன், அரவிந்தன், சிவசேகரம், சோலைக்கிளி, வாசுதேவன், ஜபார், நிலாந்தன், செழியன், முல்லைகமால், அமரதாஸ், என். கே மகாலிங்கம், பலாகணேசன், சிவரமணி, ஊர்வசி, சங்கரி, ஔவை, ஆழியாள் என்று அந்தப்பட்டியல் நீள்கிறது. அதற்கு ஜெயமோகன் நகைச்சுவையாக ஒர் பதில் பொதுவெளியில் அளித்தார். (மு.பொ குறிப்பிடும் கவிஞார்களில் பொருட்படுத்தத்தக்கவர்களின் கவிதைகளை ஜெயமோகன் மு.பொன்னம்பலத்தைவிட ஆழத்துக்குச் என்று எழுதியிருக்கார் என்பதையும் குறிப்பிட வேண்டியுள்ளது). அதாவது, ஜெயமோகன் பட்டியலின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் மு.பொ அனைவரையும் ஒரே பாயில் அமரரைவைப்பதில் இருக்கும் சமரசத்தையே வண்ணநிலவனின் பாணியில் – "அத்தனை கவிகள் நாட்டில் இருப்பின் பூச்சிமருந்து அடிக்கவேண்டும்" - என்ற ரீதியில் நகைச்சுவையாகச் சீண்டும் தன்மையில் - குறிப்பிட்டு இருந்தார்.

அதற்கு முன்னரும் இதேவிடயத்தை ஜெயமோகன் தனது பல்வேறு கட்டுரைகளிலும் உரையிலும் இதைப் பலதடவைகள் முன்னமே திரும்பத் திரும்ப குறிப்பிட்டுள்ளார். ஆனால், திடீரென்று இப்போதுதான் ஒர் உரையில் இதைக் கண்டுபிடித்து நமது அன்பர்கள் பேசியிருக்கிறார்கள். நம்மவர்களுக்கு எப்போதுமே எல்லாமே கொஞ்சம் பிந்தித்தான் தெரியவரும். இது கொஞ்சம் அதிகம்தான்; சரி இருக்கட்டும். ஒரு நகைச்சுவையையும் அதற்குள்ளிருக்கும் மெலிதான சீண்டலையும் புரிந்துகொள்ளக்கூட முடியாமல் இங்கிருந்து எழும் எதிர்வினைகளைப் பார்க்க வெட்கமாகவும் சலிப்பாகவுமே இருக்கிறது.

இங்கே வசைகளைக் கொட்டிக்கொண்டிருப்பவர்கள் தாங்களும் இலக்கியவாதிகள் தான் என்று நினைக்கிறார்கள். சிலர் வருடத்துக்கு ஒரு கதை என்ற பேரில் சிலவற்றையும், விமர்சனம் என்ற பெயரில் கதைகளைச் சுருங்க மீண்டும் சொல்பவர்களாகவும் இருப்பவர்கள். சிலர் அதுவுமல்ல.

ஒரு காலத்தில் எஸ்.பொ **"புலம்பெயர் இலக்கியம் தான் தமிழ் இலக்கியத்தை இனிமேல் ஆளும்"** - என்று சொன்னபோது சுந்தர ராமசாமி ஒர் எதிர்வினை வைக்க, இதேபோல் ஒர் கூச்சல் எழுந்தது. வெறுமனே சிற்றிதழ்களின் எண்ணிக்கையை வைத்து சொல்லப்பட்ட மிக மேம்போக்கான உணர்ச்சிக் கூற்று எஸ்.பொவினது என்பது பிற்பாடு தானாகவே தெரியவந்தது.

இன்று சாதாரணமாக ஒர் ஈழ இலக்கிய இதழைப் புரட்டினாலே அதனைத் தெரிந்து கொள்ளலாம். காரணம் நம் சூழலில் இலக்கியச் செயல்பாடு என்பது பலருக்கு ஆர்மார்த்தமானதாக இல்லை. நிறைவேற்ற முடியாத அரசியல் ஆதங்கங்களைக் கரைக்கக் காகிதங்கள் தேவையாக இருந்தன என்றளவிலே இன்று ஈழத்தின் இலக்கிய சிற்றிதழ்களை "நூலகம்" தளத்தில் திரும்பிப் பார்க்கும்போது புரிந்துகொள்ள இயல்கிறது. இன்று புலம்பெயர் இதழ்கள் ஒன்று இரண்டு தான். அவற்றில்கூட எழுத முடியாதவர்களின் வெற்றுக் கூச்சலாகத்தான் இன்றைய இலக்கியத்திற்கு சம்பந்தம் இல்லாத கூக்குரல்களை நோக்க வேண்டியிருக்கிறது.

பட்டியலின் தேவையையும், இலக்கியத் தராதரத்தைப் பற்றிபேசும் போது இங்கே இந்தக் கூச்சல்கள் எப்பவும் ஒலிப்பவைதான். ஜெயமோகன் ஈழக் கவிஞர்களில் பலரை நிராகரிக்கிறார் என்றால், இங்கிருப்பவர்கள் "இல்லை ஜெயமோகன் சொல்பவர்களைத் தவிர்த்தும் இங்கே கவிகள் உண்டு, இவர்களை இன்ன இன்ன கோணத்தில் பொருட்படுத்த வேண்டும்" - என்று ஒரு கட்டுரையை முன்வைக்க வேண்டும்;. உரையாடலைத் திறக்க வேண்டும். இந்தச் சீண்டலுக்கு பின்னுள்ளதும் அதுதான். ஆனால், அதைச் செய்ய இங்கிருப்பவர்களுக்கு வாசிப்பும் இல்லை, இலக்கிய அறிவும் இல்லை. வெறுமனே வசைகளைத்தான் வழமைபோல் வைக்க இயல்கிறது. முகநூல் விருப்பக் குறிக்காக மலிவான உரையாடல்களைப் பெருக்க முடிகிறது. அவர்களால் முடிந்தது அவ்வளவு தான். ஆனால், உண்மையில் ஈழ இலக்கியம் சார்ந்து வாசிப்புள்ளவர்களால் அப்படியான கட்டுரையை எழுத முடியுமா என்பதும் சந்தேகமே. அங்கும் தீர்க்கமான பட்டியல் உருவாகும்; ஏனென்றால் உண்மையில் அப்படி இலக்கியத் தரத்துடன் கவிதைகள் எழுதக் கூடியவர்கள்



இங்கிருக்க வேண்டுமல்லவா. இங்கே தொடர்புகள் மூலம் ஓரளவுக்கு அறியக்கூடிய இதழ்களில் திரும்பத் திரும்ப ஒரே படிமத்தை வளைத்து வளைத்து மூக்குச் சிந்தவைப்பவைதானே கவிதைகள் என்ற பெயரில் அதிகமாக எழுதப்படுகின்றன.

**"பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்"** என்ற தொகுப்பை எம்.ஏ. நுஃமான் மற்றும் அ.யேசுராசா தொகுத்த போது சில எதிர்வினைகள் வரத்தான் செய்தன. ஆனாலும் அத்தொகுப்பிலுள்ள கவிதைகள் இன்றும் ஈழத்துக் கவிதைகளின் ஒரு குறுக்குவெட்டுத் தோற்றத்தை தரக்கூடியன. அவ்வாறானதொரு சிறந்த பட்டியலிட இன்றும் இங்கே எவரும் இல்லை என்பது நம் சோகோல்ட்-கவிகளுக்கு வரப்பிரசாதம் தான்.

ஈழத்து எழுத்தாளர்கள் தமக்குள்ளே முந்தைய தலைமுறை ஈழத்து எழுத்தாளர்கள் பற்றியோ, சக எழுத்தாளர்கள் பற்றியோ என்ன விரிவாக எழுதியிருக்கிறார்கள் என்று பார்த்தால் வசைகளையும் மேம்போக்கான விமர்சங்களையும் தான் நோக்க இயல்கிறது.

இன்று, ஈழ இலக்கியத்தின் முக்கிய ஆளுமைகளான மு.தளையசிங்கம்,கா.சிவத்தம்பி,எஸ்.பொன்னுத்துரை, அ.முத்துலிங்கம், சு.வில்வரத்தினம் ,சேரன், தெளிவத்தை ஜோசப் உடற்பட ஏராளமானோர் பற்றி மிகவிரிவாக எழுதியவர் ஒருவராக ஜெயமோகனே இருக்கிறார். ஆழியாள், அனார், பஹீமா ஜகான் போன்றவர்களின் கவிதைகளைப் பற்றி எழுதிய 'மறுபக்கத்தின் குரல்கள்' அளவுக்குக் கூட பெண்-கவிகள் சார்ந்து இன்னும் விரிவான கட்டுரைகள் ஈழத்திலிருந்து எழுதப்படாமலே இருக்கின்றன. இங்கே சோம்பேறிகளும் வறட்டுப்பிடிவாதம் கொண்டவர்களும்தான் அதிகம். முன்முடிவுகளுடன் வாசிப்பு எதுவும் இன்றி வசைகளை உமிழ்பவர்கள்; அல்லது நுண்ணுணர்வுகளால் கனவை விரித்து வாசித்துப் புரிந்துகொள்ள முடியாதவர்கள்.

இலக்கியம் சார்ந்த அறிவுச்செயற்பாடு என்பது ஈழ இலக்கியப் பரப்பில் கிஞ்சித்தும் இல்லை என்பதே வரலாற்று உண்மையாக இருக்கிறது. இலக்கியம் என்பது தனி அறிவுத்துறையாகவும், அறிதல் முறையாகவும் பார்ப்பதன் அவசியத்தை மீண்டும் மீண்டும் சொல்லவேண்டியிருக்கிறது. இந்த உரையாடல்களை அடித்துத் திறக்கும்போது மூர்க்கமான அரசியல் விவாதங்கள் அவற்றை விழுங்கிவிடுகின்றன.

ஈழத்தில் இருக்கும் வாசகர்களும் சரி, எழுத்தாளர்களும் சரி அநேகமானவர்கள் கருத்துத்தளத்தில் செயல்படுபவர்கள். எந்தத் தடிமனான புத்தகத்தைக் கொடுத்தாலும் அதைச் சுருக்கி ஒற்றைத் வரியில் புரிந்துகொள்ள முயல்பவர்கள். தங்களது அறிவுக்கு எட்டிய வகையில் ஒர் கருத்துநிலையை உருவாக்கி அதுதான் இந்தப்புத்தகம் சொல்லவருவதாக உருட்டியும் பிரட்டியும் நினைப்பவர்கள். இதையே புனைவு படைப்புகளுக்குள்ளும் செலுத்திப் பார்க்கிறார்கள். இறுதிவரை கவித்துவ தருணங்களையோ, சொல்லாமல் உணர்த்தும் உணர்வுகளையோ அகவயமாக புரிந்து கொள்ள இயலாதவர்கள். எனவே அவர்களால் இலக்கியத்தைப் புரிந்துகொள்ளவே இயல்வதில்லை. இறுதிவரை அரசியல் சரி, பிழை நிலைகளுக்குள்ளே முடங்கிவிடுகிறார்கள். நேரடியாகப் பேசும் கருத்து நிலைகளையே இலக்கியமாக நினைக்கிறார்கள். பெரும் துன்பம் தான். பார்த்தீனியம், ஜெப்பான பேக்கரி போன்றவை வெறும் அரசியல் காரணக்களுக்கா உடனடியாகப் பேசப்படுகின்றன. இலக்கிய தரத்தை அடைந்ததைப் போல பாவனை செய்து பிரகாசிக்கின்றன. பின்னர் அந்தப் பிரகாசம் காலப்போக்கில் தானாகவே மங்கிச் செல்கின்றது. நல் இலக்கிய வாசகர்கள் இலக்கியம் என்பதற்குள்ளே அவற்றை பொருட்படுத்தப் போவதில்லை. சிலகாலம் கழித்து எந்த இலக்கிய விவாதங்களிலும் அவை நினைவு கூறப்படப் போவதும் இல்லை. ஒற்றைப்படையான அரசியல் கருத்துகளை மிகையுணர்ச்சி கூட்டி எழுதப்பட்டு நாவலாகவே சிருஷ்டிகம் கொள்ளாதவை எப்படி நினைவில் நிக்கும். நாவல் என்ற விரிவுத் தன்மைக்குள் நுழையவே நுழையாதவை அவை. ஆனால், இவற்றை அவர்கள் ஈழத்தின் மானுட சாட்சியமாக முன் வைக்கிறார்கள். ஒர் புனைவை மானுடத்தின் சாட்சியமாக முன்வைப்பதில் இருக்கும் அடிப்படை வழுவே எழுத்தாளர்களுக்கும் சேர்த்து பலருக்கும் புரிவதில்லை. புனைவு என்பதே எழுத்தாளர் தன் தத்தளிப்பு சார்ந்து கண்டடையை எழுதும் அந்தரங்க வெளி. தன் உள உள்ளுணர்வு, தேடல், புரிதல், போதாமை ஊடக எழுந்துவருவது. அதில் கண்டடைவதை வாசகருக்கு உணர்தினாலே அந்த ஆக்கம் இலக்கிய ரீதியில் வெல்கிறது. அதுவொரு புனைவு என்ற ரீதயில் அதை தனி அறிதல் துறையாக எடுத்துக்கொண்டு விவாதிப்பதும் மதிப்பிடுவதுமே இலக்கியத்தில் செல்லுபடியாகும். அதை வரலாற்றின் உண்மையாக ஒருபோதும் வைக்க இயலாது. அது என்ன அரசியலை பேசினாலும் அதன் எல்லை மட்டுப்படுத்தப்பட்டதே. மற்றமையின் மற்றையை தரப்பை தன் உள்ளுணர்வாலும் ஆழ் உள்ளதாலும் நெருங்கிச் சென்று கனவை விரித்து எழுத முடியாதவையாக தொக்கி நிக்கும் ஆக்கங்களே பின்போர் சூழலில் ஈழத்தில் அதிகம் வெளியாகின்றன. அதனை விமர்சிக்கும் விமர்சகர்களும் வரலாற்றுத் தளத்தில் நின்று உண்மையைத் தேடுவதையே விமர்சனமாக நினைக்கிறார்கள் (இங்கு உண்மை என்று குறிப்பிடுவது தரிசனத்தை அல்ல) இதுவோர் படைப்பை அணுகும்முறை அல்ல என்பதை திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியுள்ளது. இந்த அரசியல் தளத்திலே விவாதம் செய்பவர்களுக்கு காசியானந்தன் தான் பெரும்கவியாக இருப்பதில் ஆச்சரியம் இல்லை.
ஈழத்தில் இந்த இலக்கிய நுண்ணுணர்வு இல்லாமல் போனதற்கு முக்கிய காரணம் தொடர்ச்சியாக இலக்கியம் சார்ந்து எழுதி கருத்துக்களை உருவாக்கி இலக்கிய இயக்கமாகவோ, சிந்தனைக்கூடமாக

ஆக்கியவர்கள் என்று ஈழத்தில் எவரும் இல்லாமல் போனதே என்ற முடிவுக்கே இன்றைய தலைமுறை (இலக்கியப் பற்றும், தேடலும் உள்ளவர்கள்) வரவேண்டியுள்ளது. அ.முத்துலிங்கம், ஷோபாசக்தி போன்றவர்களிடம்கூட இந்தக் குறைபாட்டைச் சுட்ட முடியும். கைலாசபதி, சிவத்தம்பியின் மார்சிய விமர்சன முறையைக்கூட அவர்களின் மாணவர்கள் வளர்த்தெடுத்தார்களா என்ன? அந்தச் சிந்தனைப் பள்ளியிலிருந்து யார் யார் எழுத வந்தார்கள்?, எழுதுகிறார்கள்? ஈழத்திலிருந்து இவர்கள் (விமர்சன மரபு உள்ளது என்பவர்கள்) எவரைச் சுட்ட முடியும் என்றால் மௌனத்தைத்தான் பதிலாகச் சொல்ல வேண்டியுள்ளது.

மு.தளையசிங்கத்தின் அசல் சிந்தனைகளை விரிவாக்கியவர்கள் ஈழத்தில் யார்? இங்கே அதை அடுத்த தலைமுறையிடம் எடுத்துச்சென்று ஒரு சிந்தனை முறையாக வளர்த்தெடுத்தவர்கள் யார்? என். கே மாகாலிங்கம் போன்றவர்களால் கூட அதைச் செய்ய முடியவில்லை. வெறுமனே மொழிபெயர்ப்பாளர்களாக மட்டுமே சுருங்க முடிந்தது. நம்மவர்களுக்கு அவற்றைப் புரிந்துகொள்ள ஆற்றலும் இல்லை, வளர்த்து ஓயாமல் எழுதியும் விவாதித்தும் அதனை ஒர் அறிவியக்கமாக எடுத்துச் செல்ல திறனும் கிடையாது என்பதையே வெட்கத்தைவிட்டுச் சொல்லவேண்டியுள்ளது.

இலக்கியம் சார்ந்த கருத்துருவாக்கங்களும், சிந்தனை முறைகளும் ஈழத்தில் உருவாகவே இல்லை (விதிவிலக்கு மு.தளையசிங்கம்). அதற்கு வாசிப்புப் பின்புலம் கொண்ட சிந்தனைவாதிகளும் இல்லை. வெறுமே வாய்சாடல் தான். அதன் பிரதிபலன்களைத் தான் இன்று பார்க்கிறோம். (மு.தலையசிங்கம் முன்னமே இதனை எதிர்வுகூறியிருந்தார்!)

இவர்களிடம் சென்று அடுத்த தலைமுறை யதார்த்தவாதத்தின் அழகியலுக்கும், இயல்பு வாதத்தின் அழகியலுக்கும் இடையிலான வேறுபாட்டைப் பற்றி பேச இயலுமா? தேவகாந்தனின் அழகியல் இயல்புவாதத்திற்குள் வருமா என்று விவாதிக்க முடியுமா என்ன? நாவலுக்கும் நெடுங்கதைக்கும் வித்தியாசம் தெரியாமல் ஈழ மூத்த எழுத்தாளர்கள் முகநூலில் விமர்சனம் என்ற பெயரில் “ஆறாவது அத்தியாயம் படித்தவுடனே புத்தகத்தை மூடிவைத்துவிட்டேன்; ‘நெஞ்சு கனக்குகிறது’ என்ற வகையில் டெம்பிளேட் பதிவுகள் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இதுதான் நம் முன்னோர்களின் இலக்கிய அறிவும் தெளிவும். கஷ்டம் தான்.

அதேபோல் நம் சூழலில் நடக்கும் இலக்கியக்கூட்டங்களில் இலக்கியம் சார்ந்து ஏதும் பேசப்படுகிறதா என்றால் அபூர்வமே, எல்லாமே அலுப்பூட்டக்கூடிய அரசியல் தான். சிலகாலம் முதல் ஒர் அமைப்பு கனடாவில் நடத்திய தேவகாந்தனின் “கலிங்கு” நாவல் விமர்சனக் கூட்டத்தை காணொளிப்பதிவாக இணையத்தில் பார்த்தேன். ஒரு விமர்சகர் தேவகாந்தனின் சிந்தனை என்பது “காவியகால கீழைத்தேயத் தத்துவங்கள் பண்பாடு மற்றும் சிந்தனைகளின் பின்னணியில் வளர்த்தெடுக்கப்பட்ட நவீனகால தமிழ் படைப்பாளிக்கு உரிய தனித்துவமான சிந்தனை” என்றார். நானும் நிமிர்ந்து முள்ளந்தண்டு சிலிர்க்கப் புதிதாக ஏதோ சொல்லப் போகிறார் என்று அமர்ந்தேன். ஆனால், அந்தச் சிந்தனை எப்படி படைப்பில் வெளிப்படுகிறது? அந்தச் சிந்தனையை எப்படி வரையறுக்கலாம் என்று ஒரு சுருக்கமான விளக்கத்தைக் கூட கொடுக்க முடியவில்லை. இறுதிவரை கமராவை பார்த்து வெட்கப்பட்டுக்கொண்டே பேச முடிந்தது அவரால்; என்னோடு சேர்ந்து இன்னும் ஏழு நபர்கள்தான் அந்தக் காணொளிப்பதிவைப் இன்றுவரை பார்த்திருக்கிறார்கள். இப்படியான மேம்போக்கான உரையாடல்களைப் பேசித்திரிந்தால் எப்படி அடுத்த தலைமுறை இவர்களிடம் இருந்து எதையாவது கற்றுக்கொள்ள முடியும்? உரைகளைக் கேட்க வருவார்கள்?

புலம்பெயர் தேசங்களில் ஆங்காங்கே பத்துபேர் கொண்ட இலக்கியக்கூட்டங்கள் நடைபெறுகின்றன. இளைய தலைமுறையே வர அஞ்சும் வகையில் சலிப்பூட்டக்கூடியஉரையாடல்களேநடைபெறுகின்றன. தத்தமது புத்தகங்களைத் தாங்களே பணம் கொடுத்து அச்சடித்துப் பத்துப்பத்துப் புத்தகமாக நான்கு நாடுகளில் வெளியீடு செய்தால் போதும் என்பதுதான் இங்கிருக்கக் கூடியவர்களின் இலக்கிய இலட்சியம். ஏதாவது ஒரு சீண்டல் நடந்தால் கண்டன அறிக்கை எழுதிவிட்டு முகநூலில் கையெழுத்து வைக்க ஆள்பிடிப்பது. இதைத்தான் இலக்கிய இயக்கமாக நினைக்கிறார்கள். சமகால இலக்கியம் சார்ந்து இவர்களிடம் என்ன வாசிப்பும் தெளிவும் இருக்கிறது என்பதை நினைக்கவே கடும் வேடிக்கையாக இருக்கிறது.

புதுமைப்பித்தன் கூறுவது போல ‘வாழையடி வாழையாக என் வாசகர்கள் வருவார்கள் அவர்களுக்காகவே எழுதுகிறேன்’ - என்பதற்கு இணங்க ஈழ இலக்கியம் சார்ந்த சலிப்பில் இருந்துவிடுபட்டு எழுத எதிர்காலம் நோக்கியே சிந்திக்க வேண்டியுள்ளது. அவர்களுக்காகவே இக்கட்டுரையை எழுத வேண்டியுள்ளது. ஒரு மறுப்பின் குரல் இருக்கத்தான் வேண்டும். இல்லையெனில் வரப்போகிறவர்களுக்கு இவர்கள் சொல்லும் வசைகளும் திரிபுகளுமே வரலாறாகிவிடும். இலக்கிய இயக்கத்தில் நம் முன்னோடிகளில் இருந்து கருத்துக்களைப் பெற்று நம் சிந்தனையை பெருக்கிக் கடந்து செல்லவேண்டும். ஆனால், ஈழத்தில் அடுத்த தலைமுறை முன்னைய தலைமுறை மிதித்துத்தான் செல்ல வேண்டியுள்ளது என்பது துரதிர்ஷ்டவசமானது. ஆனால், வேறு வழியில்லை.

◊